# இந்தியாவில்

# கால்நடைகளுக்குக் காணுகிற

# அதிக பிராணாபாயமான

# வியாதிகளைப்பற்றிய புஸ்தகம்.

## 1903.

இங்கிலிஷ் நூலின் மூன்றாவது பதிப்புக்கு
மொழிபெயர்ப்பு.

மதராஸ்:

கவர்ன்மெண்ட் அச்சுக்கூட ஸூபரின்டெண்டெண்டவர்களால்
பதிப்பிக்கப்பட்டது.

1906.

K-2:4.6
M06

101489

செப்பனிடுவர் பெயர்
தி. இராசேந்திரன்
செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட நாள் ஆகஸ்ட் 93
செப்பனிட்டு முடித்த நாள் ஆகஸ்ட் 93-செப்டம்பர்

சரிபார்க்கும் | ஆராய்ச்சி
மு.ப.எ. | உதவியாளர்
கையொப்பம். | கையொப்பம்.

EGMORE, MADRAS

# முதற்பதிப்பு முன்னுரை.

---

இந்தப் புஸ்தகம்-ஆலோசனை சபையிலுள்ள சிறப்புற்றோங்கும் இராஜப்பிரதிநிதியாகிய கவர்னர்ஜெனரலவர்களின் உத்தரவின்படி எழுதப்பட்டது. இதன் நோக்கமென்னவென்றால், இந்தியாவில் கால்நடைகளுக்குச் சாதாரணமாய்க் காணுகிற அதிக பிராணாபாயமான வியாதிகளின் இயல்பு - காரணங்கள் - குறிகள் - அந்த வியாதிகளுக்குச் செய்யவேண்டிய சிகிச்சை-அவைகளைத் தடுக்கும் உபாயங்கள் ஆகிய இவைகளைப்பற்றிய விவரங்களை எடுத்துக்காட்டுவதேயாகும்; அன்றியும், கால்நடைகளின் சொந்தக்காரர்கள் தங்கள் கால்நடைகள் சுகமாயிருக்குங் காலத்திலும் வியாதியாயிருக்குங் காலத்திலும் அவைகளை அதிக கவனத்தோடு பாதுகாத்து, (அப்படி பாதுகாக்காவிட்டால்) தங்களுக்கு நேரக்கூடிய விசேஷமான பொருள் நஷ்டம் நேராமல் இதன் மூலமாக விலக்கிக்கொள்வார்களென்று நம்பப்படுகிறது.

(இதில்) குறிக்கப்பட்டிருக்கிற மிருகவைத்தியசம்பந்தமான அபிப்பிராயங்கள்-தற்காலத்திய மிகவுயர்ந்த மிருகவைத்தியர்களின் அபிப்பிராயங்களேயாகும்.

(இந்தப்) புஸ்தகத்தின் கடைசியிலேயுள்ள மருந்துபட்டிகளிற் கண்ட சகல மருந்துகளும் அவ்வவ்விடத்துக் கடைகளில் கிடைக்கக்கூடியவைகள்; அவைகளில் பெரும்பான்மையானவை ஒவ்வொரு கிராமத்திலும் கிடைக்கக்கூடியவைகள்; மேலும், ஷை மருந்துகளெல்லாம் சாதாரணமாகக் குறைந்த விலைக்கே கிடைக்கக்கூடியவைகளாயிருக்கின்றன.

கல்கத்தா,
1871-ம் ௵
நவம்பர் ௴.

ஜே. ஹெச். பி. ஹாலென்.

## இரண்டாவது பதிப்பு முன்னுரை.

---

சென்ற சிலவருஷங்களாக இந்தப் புஸ்தகம் வேண்டுவோர் அதிகப்பட்டு வருகிறபடியால், சீர்திருத்தப்பட்ட புதிய பதிப்பு இப்போது வெளியிடப்படுகிறது.

இந்தப் பதிப்பில் அத்தியாயங்கள் புதிதாக வரிசைப்படுத்தப்பட்டிருப்பதுமன்றி, "செம்மறியாட்டம்மை" என்னும் வியாதியைப்பற்றிய விஷயம் சேர்க்கப்பட்டிருப்பதும் தெரியவரும்.

பாபுகர்,
வடமேற்கு மாகாணங்கள்,
1883-ம் ௵ எப்ரல் ௴.

ஜே. ஹெச். பி. ஹாலென்,
இன்ஸ்பெக்டிங் வெடெரினெரி ஸர்ஜன்,
பம்பாய் ராணுவம்.

# மூன்றுவது பதிப்பு முன்னுரை.

ஸிவில் வெடெரினெரி டிபார்ட்மெண்ட் இன்ஸ்பெக்டர்ஜெனர லவர்கள் வேண்டுகோளின்படி இந்தப் புஸ்தகம் சீர்திருத்தி எழுதப்பட்டிருக்கிறது.

அடைப்பான் - கொடும்புண் உள்ள தொண்டை - என்பவைக ளைப்பற்றிய அத்தியாயங்களுக்குப் பர்த்தியாக மென்னை அடைப் பான் - சப்பைநோய் என்பவைகளைப்பற்றிய புது அத்தியாயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன.

இந்தியாவில் கால்நடைகளின் சொந்தக்காரர்களிலே தக்க மிருக வைத்தியர்களின் உதவியைப் பெறுவதற்கிடமில்லாதிருக்கிறவர்கள் தற்காலம்வரையிலும் தெரிந்திருக்கிற விஷயங்களை அறிந்துகொள்ள க்கூடியவர்களாயிருக்கும்படி அவர்களுக்கு உதவியாக இந்தப் புஸ் தகம் எழுதியிருக்கிறது; அனேக பாகங்கள் புதிதாக எழுதுவது அவசியமாகி அப்படியே எழுதப்பட்டிருக்கின்றன; ஆயினும், கூடி யவரையில் மூதனூலிலுள்ளதையே எடுத்தெழுதியிருக்கிறது.

லாகூர்,
1903-ம் ஹூ.

ஜி. கே. வாக்கர், காப்டன்,
இந்தியாவிலுள்ள ஸிவில் வெடெரினெரி
டிபார்ட்மெண்ட்.

# அட்டவணை.


| | | பக்கம். |
|---|---|---|
| முகவுரை. | | xi |
| அத்தியாயம்—1. | கால்நடைகளுக்குக் காணும் தொத்துவியாதிகளைத் தடுக்கும் வழிகள் ... ... | 1 |
| ,, 2. | வெக்கை ... ... ... ... | 17 |
| ,, 3. | கால்நோய் வாய்நோய் ... ... ... | 24 |
| ,, 4. | மென்னை அடைப்பான் ... ... ... | 28 |
| ,, 5. | அடைப்பான் ... ... ... ... | 32 |
| ,, 6. | சப்பைநோய் ... ... ... | 37 |
| ,, 7. | தொத்துகிற சுவாசாசய அழற்சி ... ... | 41 |
| ,, 8. | செம்மறியாட்டம்மை ... ... | 46 |
| ,, 9. | விழுங்கக்கூடாமை ... ... ... | 49 |
| ,, 10. | வயிற்றுப்பொருமல் ... ... ... | 52 |
| ,, 11. | முதல் இரைப்பை அடைப்பு ... | 55 |
| ,, 12. | மூன்றாம் இரைப்பை அடைப்பு ... ... | 58 |
| ,, 13. | இரத்தமூத்திரம் ... ... ... | 61 |
| ,, 14. | கழிச்சல் ... ... ... ... | 65 |
| ,, 15. | சீதபேதி ... ... ... ... | 68 |
| ,, 16. | செம்மறியாடுகளுக்குக் காணும் ஊழ்த்தல் நோய் ... ... ... ... | 70 |
| ,, 17. | குரல்வளை அழற்சி, அல்லது இருமல் ... | 72 |
| ,, 18. | நஞ்சிடுவது ... ... ... ... | 75 |
| ,, 19. | மருந்துபட்டிகள் ... ... .. | 78 |

# முகவுரை.

கால்நடைகளைச் சரியாகப் பாதுகாத்துத் தீனிபோட்டால், அவைகள் வியாதியடைவது அபூர்வம். அவைகளுக்கு . அளவுமீறி அதிகமாகவாவது தகாத விதமாகவாவது தீனிபோட்டாலும், எவ்வளவாகிலும் பட்டினி கிடக்கவிட்டாலும், அவைகள் சுகவீனப்பட்டு வியாதி அடைகின்றன.

இந்தப் புஸ்தகத்தில் சொல்லியிருக்கிற வியாதிகளெல்லாம் பெரும்பாலும் தடுக்கக்கூடியவைகள்; (கால்நடைகளின்) சொந்தக்காரர்கள் இதில் இனி விவரிக்கப்படும் முறைகளைக் கவனித்து நடப்பார்களானால், வியாதியினால் இப்போது நேரிடுகிற மரணத்தை முழுவதும் தடுப்பது சாத்தியமாகாவிட்டாலும் பெரும்பாலும் குறைப்பது சாத்தியமாகும்.

சில வியாதிகள் தொத்துதல் காரணமாக உண்டாகின்றன; கால்நடைகளைப் பாதுகாப்பதிலும் அவைகளுக்குத் தீனிபோடுவதிலும் அஜாக்கிரதையாயிருப்பதுதான் மற்ற வியாதிகள் வருவதற்குக் காரணமாகும்.

அந்தந்த வியாதிகளின் காரணங்கள் விவரித்துக் கூறப்பட்டிருக்கின்றன; அந்தக் காரணங்கள் பெரும்பாலும் தடுக்கக்கூடியவைகளாயிருக்கிறபடியால், ஷை வியாதிகளிலேதாகிலும் கால்நடைகளுக்கு வரும்பட்சத்தில், பெரும்பாலும் அவைகளின் சொந்தக்காரர்களுடைய பிசகினால்தான் வந்ததாகக் கொள்ளவேண்டும்.

கால்நடை வைத்திருக்கிறவர்கள், அனாவிருஷ்டிகாலத்திலாவது வெள்ளக்காலத்திலாவது வெக்கை முதலிய கொள்ளைநோய் பரவியிருக்கிற தௌர்ப்பாக்கியமான காலத்திலாவது உபயோகப்படும்படியாக, அறுத்துக்காயவைத்த புல் அல்லது வைக்கோலைச் சேகரித்து வைப்பது முக்கியமான காரியம். மேற்கூறிய காலங்களுக்காக, வேண்டிய அளவு அல்லது அதற்கதிகமான தீனியைக் கால்நடைகளின் சொந்தக்காரர்கள் சேகரித்துவைத்திருக்கவேண்டும்; அப்படி சேகரித்துவைத்து, அவர்கள் தங்கள் வீட்டிலே சௌக்கியமான கொட்டகையில் கால்நடைகளைக் கட்டிவைத்துச் சரியாகத் தீனி போட்டால், அவைகள் வியாதிக்குட்படாமல் தப்பித்துக்கொள்ளும்.

அன்றியும் வருஷத்தின் சில பருவங்களிலே, வெயிலாவது கனத்த மழையாவது கால்நடைகளின்மேல் படாதபடி அவைகள் தங்குவதற்கு நிழலாகவேனும், குளிருள்ள இராக்காலங்களில் அவைகளுக்குப் பாதுகாப்பாகவேனும் இருக்கிற கொட்டில்கள் வேண்டியிருக்கின்றன.

கால்நடைகளின்மேல் கனத்த மழை படும்படி விட்டாலும் அவைகளைத் தண்ணீர் தங்கியிருக்கும் நிலங்களில் கட்டியிருந்தாலும், கோடைநாளில் மத்தியான காலத்துக் கடுவெயிலிலாவது, (குளிர்காலத்தில்) ஈரமும் உறைபனியுமுள்ள இராக்காலத்துக் கொடுங்குளிரிலாவது, தங்குவதற்கிடமில்லாமல் விட்டிருந்தாலும், அந்தக் கால்நடைகள் சுகவீனமடையாமலிருப்பது சாத்தியமல்ல.

கால்நடைக்கொட்டிலின் தளம், சுற்றிலும் உள்ள தரையைக்கா ட்டிலும் நன்ருய் உயர்ந்ததாகவும், (அதன்மேல் விழுந்த) நீர் வடிந் தோடக்கூடியதாகவும், அதன் கூரை வெயிலும் மழையும் உள்ளே பிரவேசியாமல் தடுக்கக்கூடியதாகவும், அதன் சுவர்கள் ஈரமும் குளிருமுள்ள இராக்காலத்துக் காற்ருனது கால்நடைகளின்மேல் அடிக்காமல் தடுக்கக்கூடியவைகளாகவும் இருக்கவேண்டும்.

ஜன்னல்கள் போதுமான வெளிச்சம் தரத்தக்கவைகளாகவும், கதவுகள்-(கால்நடைகள்) சுலபமாக உள்ளே போவதற்கும் வெளி யே வருவதற்கும் ஏற்ற விசாலமுடையவைகளாகவும் இருக்கவே ண்டும்; நல்ல காற்று அடிப்பக்கமாக உள்ளே பிரவேசிப்பதற்கும், கெட்ட காற்று மேற்பக்கமாக வெளியே போவதற்கும் சரியான கா ற்ருேட்டவசதி இருக்கவேண்டும்.

கால்நடைக்கொட்டிலேயும் அதைச்சுற்றிலுமுள்ள நிலத்தையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும்; மூத்திரத்தையும் சாணத்தையும ஒழுங்காக அப்புறப்படுத்தவேண்டும்.

இந்தியா தேசத்துக் கால்நடைகளுக்குச் சுத்தஜலம் கிடைக்கிற தில்லேயாகையால், அனேக சந்தர்ப்பங்களில் அவைகள் மிகவும் அசு த்தமான தண்ணீரைக் குடிக்கும்படி நேரிடுகிறது. அவைகளேப் பாதுகாப்பதில் இதைப்போன்ற குறைபாட்டினுல் அனேக சந்தர்ப் பங்களிலே வியாதி சம்பவிக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லே.

# இந்தியாவில் கால்நடைகளுக்குக் காணுகிற அதிக பிராணாபாயமான வியாதிகளைப்பற்றிய புஸ்தகம்.

---

## 1-ம் அத்தியாயம்.

இந்தியாவில் மாடுகளுக்கும் ஆடுகளுக்கும் சாதாரணமாகச் சம்பவிக்கிற தொத்து வியாதிகளும், அவைகளில் எதுவாவது அந்தப் பிராணிகளை அணுகியதாகத் தெரிந்தவுடனே (அதைத் தடுக்கும்பொருட்டுத்) தவறாமல் அனுசரிக்கவேண்டிய ஏற்பாடுகளும்.

தொத்துவியாதிகளின் இங்க்லிஷ் பெயர்கள்.

மிக முக்கியமான தொத்துவியாதிகள் எவையென்றால் :—

பெயர்கள்.—(1) ரிண்டர்பெஸ்ட் (வெக்கை);

(2) புட் அண்ட் மௌத் டிஸீஸ் (கால்நோய் வாய்நோய், அல்லது கோமாரி);

(3) ஹெமொரேஜிக் ஸெப்டிஸீமியா (மென்னைஅடைப்பான்);

(4) ஆன்த்ராக்ஸ் (அடைப்பான்);

(5) பிளாக் க்வார்டர் (சப்பைநோய்);

(6) புளூரோ ந்யுமோனியா கண்டேஜியோஸா (தொத்துகிற சுவாசாசய அழற்சி);

(7) ஸ்மால் பாக்ஸ் இன் ஷீப் (செம்மறியாட்டம்மை).

(மேற்படி வியாதிகளின்) சுதேசப் பெயர்கள்.

இந்த வியாதிகள் இந்தியாவிலே அனேகமாய் எல்லா பாகங்களிலும் காணப்படுகின்றன. அவைகளுக்கு வெவ்வேறு ஜில்லாக்களில் வெவ்வேறு பெயர்கள் வழங்குகின்றன. மிகச்சாதாரணமான வியாதிகளுக்குச் சென்னை ராஜதானியின் பல பாகங்களில் வழங்கும் சுதேசப் பெயர்களின் அட்டவணை கீழே எழுதப்பட்டிருக்கிறது.

**வெக்கை.**

வெக்கை என்பது மிகுந்த மரணஹேதுவான தொத்துவியாதி; அது கண்ட பிராணிகளில் நூற்றுக்கு 50 முதல் 90 வரையில் மரணமடைகின்றன; (அது கண்டதுமுதல் சொஸ்தமாகிற அல்லது மரணம் நேரிடுகிற வரையில்) அதன் காலமானது இரண்டுநாள்முதல் பதினைந்து நாளாகும்.

**மென்னை அடைப்பான், அடைப்பான், சப்பைநோய்.**

மென்னை அடைப்பான், அடைப்பான், சப்பைநோய் என்ற வியாதிகள் ஒன்றுக்கொன்று அனேக ஒற்றுமையான குணங்களுள்ளவைகள். இந்த வியாதிகளின் காலம் மிகவும் சுருக்கமானது: இந்த வியாதிகள் கண்டு இருபத்திநான்கு மணிமுதல் நாலு நாளுக்குள் மரணம் சம்பவிக்கிறது.

இந்த வியாதிகளெல்லாவற்றினாலும் பிராணிகளுக்கு மரணம் மிகவும் அதிகமாய் நேரிடுகிறது: அதாவது, நூறு (நோய்கண்ட) பிராணிகளில் 80 முதல் 100 வரையில் இறந்துவிடுகின்றன.

கால்நோய் வாய்நோய், அல்லது கோமாரி.

கால்நோய் வாய்நோய் விசேஷமாய்த் தொத்துந் தன்மையுள்ளது; ஆனால், அதனால் மரணம் உண்டாவது அபூர்வம். ஜாக்கிரதையாகச் சிகிச்சைசெய்தால், இந்த வியாதி கண்ட பிராணிகளில் நூற்றுக்கு ஒன்றல்லது இரண்டுக்கதிகமாகச் சாகிறதில்லை.

சுவாசாசய அழற்சி.

சுவாசாசய அழற்சி விசேஷமாய்த் தொத்தும் குணமுள்ளது; அது அப்படிப்பட்டதென்று கால்நடைகளின் சொந்தக்காரர்களான சுதேசிகளுக்குச் சாதாரணமாய்த் தெரியாமலிருப்பது விசனகரமான விஷயமாகும். அது வெளிக்குக் குறியொன்றும் தோற்றுவிக்காமலே கண்டு மெதுவாக விருத்தியடையும் தன்மையுள்ளது.

(இந்த வியாதி கண்ட) பிராணிகள் மெலிந்துபோய், ஒரு மாதமுதல் மூன்று மாதம்வரையிலும் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் வரையிலுங்கூட ஜீவித்திருக்கின்றன.

தொத்துவியாதியின் விஷம் பரவுவது.

மேற்கூறிய வியாதிகள் ஒரே இனத்தைச்சேர்ந்த பிராணிகளில் ஒன்றினிடத்திலிருந்து மற்றொன்றுக்கு நேராகப் பரவுவதுமல்லாமல், வியாதிப்பட்ட பிராணிகளிடமிருந்து சுகமாயிருக்கிற பிராணிகளிடத்துக்குப் போகிற வேலையாட்கள் மூலமாகவாவது, ஷை வியாதி கண்ட பிராணிகளுக்கு எட்டக்கூடியதாயிருக்கிற தீனி அல்லது தண்ணீர் மூலமாகவாவதுகூட (அவ்வியாதிகளின்) விஷம் பரவக்கூடுமென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

அன்றியும், அப்படிப்பட்ட வியாதி கண்ட பிராணிகளின் கண் - வாய் - மூக்கு - குடல் - இவைகளினின்றும் வெளியாகிற நீர் - மலம் - முதலியவைகளினாலும், வியாதி கால்நோய் வாய்நோயாயிருந்தால், (அந்த நோய்கண்ட பிராணிகளின்) வாயிலிருந்தும் காலிலிருந்தும் வெளியாகிறவைகளினாலும் அந்தப் பிராணிகள் இருக்கும் தொழுவமோ அல்லது நிலமோ அசுத்தமாகி, அந்தத் தொத்துவியாதிகள் பரவுவதற்கேதுவான இடங்களாகின்றன.

அசைபோடும் சகல பிராணிகளுக்கும் வெக்கைநோய் காணுகிறது.

வெக்கை யென்பது - வீட்டு மிருகங்களிலும் காட்டு மிருகங்களிலும் அசைபோடுகிற சகல பிராணிகளுக்கும் காணுகிறது; ஆனால், அது மாடுகளுக்குத்தான் விசேஷமாய்க் காணுகிறது.

வெக்கை நோயினால் அனேக வெள்ளாடுகள் அடிக்கடி மடிகின்றன. சில வேளைகளில் மேற்படி வியாதி செம்மறியாடுகளுக்கும் காணுகிறது; ஆனால், இவைகளுக்கு வரும் வெக்கை சாதாரணமாய்த் தீவிரமானதாக இருப்பதில்லை; என்றாலும், செம்மறியாடுகள்மூலமாக, அவ்வியாதிக்குட்பட்ட கால்நடைகளிடத்திலிருந்து சுகமான

கால்நடைகளுக்கு ஷெ வியாதி அனேக சந்தர்ப்பங்களில் பாவுகிறதென்பதை மறந்துவிடக்கூடாது.

மென்னை அடைப்பான் என்ற நோயினால் எருமைவர்க்கம் (எருமை, கடா, எருமைக்கன்றுகள்) மிகச்சாதாரணமாகப் பீடிக்கப்படுகின்றது; ஆயினும், பசுவர்க்கமும் (பசு, எருது, பசுவின் கன்றுகள்) அடிக்கடி அவ்வியாதிக்குட்படுகின்றது.

கால்நோய்வாய்நோயும் அடைப்பானும் மனிதருக்குத் தொத்தக்கூடிய வியாதிகள்.

கால்நோய் வாய்நோய் மிருகங்களிலும் பட்சிகளிலும் பெரும்பான்மையானவைகளுக்குக் காணுகிறது. இந்த வியாதி கண்ட பசுவினுடைய பாலைக் குடித்ததனால் மனிதருக்கு வாயில் கொப்புளங்கள் உண்டானதாகத் திருஷ்டாந்தங்கள் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன.

அடைப்பான் மனிதருட்பட சகல பிராணிகளுக்கும் காணுகிறது. இவ்வியாதி கண்டிறந்த பிராணிகளைத் தொடுவது அபாயகரமான செய்கை; இதைப்பற்றி மிகவும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

(சாதாரணமாக) மேலேகுறித்த வியாதிகளும் முக்கியமாக வெக்கை - கால்நோய்வாய்நோய் - என்ற வியாதிகளும், இந்தியாவின் ஒவ்வொரு பாகத்திலும் ஏறக்குறைய எப்போதும் இருந்துகொண்டேயிருக்கிறபடியாலும், வாஸ்தவத்திலில்லாமற்போனபோதிலும் (திடீரென்று) உண்டாகக்கூடியவைகளாயிருப்பதாலும், இந்த வியாதிகள் உண்டாகாமலே தடுப்பதற்கோ அல்லது கால்நடைகளுக்கு அவைகள் உண்டாகிவிட்ட பட்சத்திலே பாவாமல் தடுப்பதற்கோ வேண்டிய எத்தனங்களை எப்போதும் முன்னதாகச் செய்யவேண்டும்.

(அனுசரிக்கத்தக்கவைகளென்று) எடுத்துக்காட்டப்படும் விதிகள்.

ஆடுமாடுகளை வைத்திருப்பவர்கள் பின்வரும் விதிகளைக் கண்டிப்பாக அனுசரிக்கவேண்டும்:—

புதிதாக விலைக்குவாங்கின கால்நடைகளை நடத்தும விதம்.

I.—சந்தைக்கு ஆடுமாடுகள் பலபக்கங்களிலிருந்தும் கொண்டுவரப்படுகிறபடியாலும், எந்தப் பக்கத்திலாகிலும் வெக்கையாவது கால்நோய்வாய்நோயாவது இவ்விரண்டு நோய்களுமாவது அனேகமாகச் சொற்பகாலத்திற்குமுன்பு பாவியிருக்கலாம் அல்லது தற்காலத்தில் கண்டிருக்கலாமாகையாலும், ஷெ சந்தையில் வாங்கிய மாடுகளையும் ஆடுகளையும் அங்கே தொத்து வியாதி சம்பந்தத்துக்குட்பட்டிருந்தவைகளாக எப்போதும் பாவிக்கவேண்டும்.

கால்நடைகளை ஓரிடத்திலிருந்து வேறோரிடத்திற்குக் கொண்டுபோகும்போது நடத்தும் விதம்.

II.—மாடுகள் அல்லது ஆடுகளை ஓரிடத்திலிருந்து வேறோரிடத்துக்குக் கொண்டுபோகும்போது அவைகளை வழியில் மற்ற மாடுகள் அல்லது ஆடுகளோடு கலக்கவிடக்கூடாது; அவைகளை இராக்காலங்களில் எந்தக் கொட்டிலிலாவது அதற்குச் சமீபத்திலாவது நிறுத்தக்கூடாது: வ

னென்றால், அப்படிப்பட்ட கொட்டிலில் சற்றுமுன்பாவது தற்காலத்திலாவது நோய்கண்ட பிராணிகள் நின்று அந்தக் கொட்டில் பெரும்பாலும் தொத்துவியாதி சம்பந்தப்பட்டதாயிருக்கக்கூடும்; பகற்காலத்திலே குளிர்ந்த நேரங்களில் பிராணிகளை நடத்திக்கொண்டு போகவேண்டும்: இந்த விஷயத்தை விசேஷமாகக் கோடைக்காலத்தில் கவனிக்கவேண்டும்; அன்றியும், அவைகளை (இருபத்திநான்கு மணிநேரங்கொண்ட) ஒருநாளைக்குப் பத்தல்லது பன்னிரண்டு மைலுக்கதிகமாக நடத்தக்கூடாது. அவைகளுக்கு அடிக்கடி தண்ணீர் காட்டி நன்றாய்த் தீனி போட்டுவரவேண்டும்.

புதிதாக வாங்கின கால்நடைகளைப் பழைய கால்நடைகளோடு சேர்க்காமல் வைக்கவேண்டும்.

III.—சந்தையிலாவது வேறிடத்திலாவது ஆடுமாடுகளை வாங்குகிறவர்கள் அவைகளைத் தங்கள் வீட்டிற்குக் கொண்டுவந்தவுடனே, பிரத்தியேகப்படுத்தி வைத்திருக்கவேண்டும்; அவைகளைத் தங்கள் பண்ணையிலுள்ள பழைய மாடுகளோடு மேய்ச்சற்காலத்திலாவது தண்ணீர் குடிக்குங்காலத்திலாவது வேறெந்தக் காலத்திலாவது கலக்கவிடக்கூடாது. அவைகள் எதாயினும் தொத்துவியாதி சம்பந்தப்பட்டிருக்கின்றனவா இல்லையா என்பதைத் திட்டமாய்த் தெரிந்துகொள்வதற்காக, குறைந்தபட்சம் ஒருமாதமுதல் மூன்றுமாதகாலம்வரையிலும் அவைகளைப் பிரத்தியேகப்படுத்தி வைத்திருக்கவேண்டும் (XX, XXI-வது விதிகளைப் பார்க்க).

அப்படி வைத்திருக்கிற காலத்தில், புதிதாக வாங்கின அந்தப் பிராணிகளைக் காலைமாலை இரண்டு வேளைகளிலும் கவனமாகப் பார்வையிட்டுவரவேண்டும்; அவைகளுக்குள் மேலேகூறிய நோய்களில் எதாவது காணப்பட்டால், நேர்ய்கண்ட பிராணிகளை உடனே பிரத்தியேகப்படுத்தவேண்டும்; மற்றவைகளைச் சிறுசிறு கூட்டங்சளாகப் பிரித்து ஒரு கூட்டத்திற்கொரு கூட்டம் சற்றுத் தூரமாக இருக்கும்படி மூளையடித்துக் கட்டிவைக்கவேண்டும். மூன்று மாதம் கழிந்த பிறகு அவைகளுக்குள் எந்த நோயும் காணப்படாமலிருந்தால், அவைகளை மற்றப் பிராணிகளோடு மேய்ப்பதனாலும் கட்டிவைப்பதனாலும் அபாயத்திற்கிடமிராது.

ஒரு ஜில்லாவிலிருந்து வேறொரு ஜில்லாவுக்குக் கொண்டுபோகப்படும் கால்நடைகள் தொத்துவியாதியடையக்கூடியவைகள்.

IV.—கால்நடைகள் பிரயாணஞ்செய்யுங் காலங்களிலாவது ஒரு ஜில்லாவிலிருந்து வேறொரு ஜில்லாவுக்குக் கொண்டுபோகப்படுங்காலங்களிலாவது, தொத்துவியாதி சம்பந்தப்பட்டு அந்த வியாதியடையக்கூடியவைகளாகும்; ஆகையால், அவைகள் வீடு வந்துசேர்ந்தவுடனே அவைகளைக் கவனமாகப் பார்வையிடவேண்டும்; அவைகள் தொத்துவியாதி பரவிய யாதொரு ஜில்லாவழியாக வந்திருந்தால், அவைகளைச் சிலகாலம்வரையிலும் பிரத்தியேகப்படுத்தி வைத்திருக்கவேண்டும் (XX, XXI-வது விதிகளைப் பார்க்க).

தொத்துவியாதி தோன்றியபோது (செய்யவேண்டிய காரியம்).

V.—யாதொரு தொத்துவியாதியாவது தொத்துவியாதியென்று அனுமானிக்கப்படுகிற யாதொரு வியாதியாவது மாடுகளுக்கோ ஆடுகளுக்கோ காணும் பட்சத்திலே, வியாதிப்பட்ட பிராணிகளைச்

சுகமாயுள்ள பிராணிகளினின்றும் பிரத்தியேகப்படுத்துவது முதலிலே செய்யவேண்டிய முக்கியமான காரியமாகும்.

*வியாதிப்பட்ட பிராணிகளை அப்புறப்படுத்துவது.*

VI.—எல்லாப் பிராணிகளையும் கவனமாகப் பார்வையிட்டு, அவைகளில் எதற்காவது வியாதிக்குறிகள் சொற்பமாயினும் காணப்பட்டால், அதை ஆஸ்பத்திரிக்கு (வைத்திய சாலைக்கு)க் கொண்டு போகவேண்டும்.

*சுகமாயுள்ள பிராணிகளைப் பலகூட்டங்களாகப் பிரிக்கவேண்டும்.*

VII.—சுகமாயுள்ள கால்நடைகளைப் பல கூட்டங்களாகப் பிரிக்கவேண்டும்: இருக்கிற இடத்தின் விசாலத்திற்குத் தக்கபடி அவைகளை எவ்வளவு சின்ன கூட்டங்களாகப் பிரிக்கக்கூடுமோ அவ்வளவு சின்ன கூட்டங்களாகப் பிரிக்கவேண்டும். வியாதிப்பட்ட கால்நடைகள் நிற்குமிடத்திலிருந்து காற்றுவராத திசையில் அந்தச் சிறு கூட்டங்களை ஒன்றுக்கொன்று தூரமாக மூலையடித்துக் கட்டவேண்டும். ஒவ்வொரு கூட்டத்தையும் அடிக்கடி பார்த்து அதிசொற்பமாவது சுகவீனமாகக் காணப்படும் யாதொரு கால்நடையை அப்புறப்படுத்தவேண்டும். இந்த ஏற்பாட்டை இடைவிடாமல் அனுசரித்துவரும்பட்சத்திலே, ஒரு கூட்டம் அல்லது இரண்டு கூட்டத்தில் மாத்திரமே வியாதி இருப்பதாகச் சில தினத்தில் காணப்படும்; வியாதி காணும் பிராணிகளை உடனுக்குடனே அப்புறப்படுத்தி ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்விட்டால், மந்தையில வியாதி பரவாமல் அதிசீக்கிரமாக நின்றுவிடும். ஒவ்வொரு கூட்டத்தையும், பிரித்துவைத்த நாள்முதலாகவாவது வியாதி கண்ட கூட்டத்திலே கடைசியாக வியாதிப்பட்ட பிராணியை அப்புறப்படுத்திய நாள்முதலாகவாவது மூன்றுமாதமாகும்வரையிலும் (XX, XXI-வது விதிகளைப்பார்க்க) மற்றக் கால்நடைகளோடு சேரவிடாமல் பிரத்தியேகமாக வைத்திருக்கவேண்டும்.

*வியாதிப்பட்ட பிராணிகளின் ஆஸ்பத்திரி பிரத்தியேகமாயிருக்கவேண்டும்.*

VIII.—வியாதிப்பட்ட கால்நடைகள் இருக்கவேண்டிய ஆஸ்பத்திரி பலத்த வேலியடைப்புள்ளதாய், பிரத்தியேகமான இடத்திலிருக்கவேண்டும். வியாதிப்பட்ட கால்நடைகளைப் பார்த்துக்கொள்ளும் வேலைக்காரரையும், அந்தக் கால்நடைகளையும், ஷை பிரத்தியேகமான இடத்தைவிட்டு வெளியே போகவிடக்கூடாது. ஆகாரமும் தண்ணீரும் அந்த வேலைக்காரரும் கால்நடைகளும் இருக்கிற இடத்திற்குக் கொண்டுபோகலாமே தவிர, தீனி - தண்ணீர் - வஸ்திரம் - (கால்நடைகளின்) படுக்கை முதலிய எதையும் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே கொண்டுபோககூடாது. நாய்களினால் தொத்துவியாதியானது சுகமாயிருக்கிற மாடுகளுள்ள இ-த்தில் பரவக்கூடுமாகையால், அவைகள் ஆஸ்பத்திரிக்கு வந்துபோக இடங்கொடுக்கக்கூடாது.

*காய்ந்த படுக்கை முதலியவைகளைக் கொளுத்திவிடுவது.*

IX.—ஆஸ்பத்திரியிலுள்ள (கால்நடைகளின்) காய்ந்த படுக்கை முதலியவைகளை ஆஸ்பத்திரி எல்லைக்குள்ளேயே கொளுத்திவிடவேண்டும்; ஈரமாயுள்ள சாணி மூத்திரம் முதலிய கழிவுகளை அடிக்கடி கொட்டில்களிலிருந்து அப்புறப்ப

டுத்தி ஆஸ்பத்திரி வளவுக்குள்ளே குழிதோண்டிப் புதைக்கவேண்டும். இந்தக் குழிகள் ஆறடி அல்லது அதற்கு மேற்பட்ட ஆழமுள்ளவைகளாயிருக்கவேண்டும்; ஆஸ்பத்திரியிலுள்ள ஈரப்படுக்கை சாணி முதலியவைகளை கூட குழிகளிலே சுற்றுப்பக்கத்துத் தரைமட்டத்திற்கு இரண்டடிக்குக் கீழ்வரையில் நிரப்பியபின் மிகுதியாயிருக்கிற இரண்டடியையும் நீற்றுத (நீறுக்காத) சுண்ணாம்பும் நல்ல புது மண்ணும் போட்டு நிரப்பவேண்டும்.

ஆஸ்பத்திரியைச்சேர்ந்த கால்நடைக்கொட்டில்கள் மரவேலைப்பாடுகள் முதலியவைகளைச் சுத்தப்படுத்துவதும் அவைகளினின்றும் தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்குவதும்.

X.—ஆஸ்பத்திரியைச்சேர்ந்த கால்நடைக்கொட்டில்கள் - சுவர் முதலியவைகள் - தளம் ஆகிய இவைகளை அடிக்கடி விளக்கியும் கழுவியும் மிகுந்த கவனத்தோடு சுத்தப்படுத்தவேண்டும்; ஒவ்வொரு தரமும் சுத்தஞ்செய்தபின்பு "மாக்டுகல்" தொத்துவியாதி முறிமருந்துப்பொடி (McDougal's disinfecting powder) அல்லது வேறே தொத்துவியாதி முறிமருந்துகளையாவது சுண்ணாம்பு - சாம்பல் - அல்லது காய்ந்த மண்ணையாவது தளத்தின்மேலும் தரையின்மேலும் அதிகமாகத் தூவவேண்டும்; மரவேலைப்பாடுகளையும் சுவர்களையும் முதலில் கழுவிப் பின்பு அவைகளுக்கு வெள்ளையடிக்கவேண்டும்.

ஆஸ்பத்திரியில் காற்றோட்டமும் புகையூட்டுவதும்.

XI.—ஆஸ்பத்திரி நல்ல காற்றோட்டமுடையதாக இருக்கவேண்டும். ஆஸ்பத்திரிக்கட்டிடத்தில் தினந்தோறும் ஏறக்குறைய ஒருமணிநேரம் கந்தகப்புகை யூட்டவேண்டும்; அந்தச் சமயத்தில் கதவுகளையும் ஜன்னல்களையும் அடைத்துவைக்கலாம்: * காற்றோடிகளைச் சிறிதுமட்டில்தான் திறந்துவைக்கலாம்.

(கால்நடைகளின்) படுக்கையைக் கொளுத்தி உண்டாகும் புகையினால் ஈக்கள் ஓடிப்போகுமென்பது.

XII.—ஈக்கள் மிகுதியாகிக் கால்நடைகளுக்குத் தொந்தரை உண்டாகிற காலத்திலே, ஆஸ்பத்திரிக் கட்டிடத்துக்குக் காற்று எந்தத் திசையிலிருந்து அடிக்கிறதோ அந்தத் திசையிலுள்ள கதவுகளுக்கு நேராக (கால்நடைகளின்) படுக்கையைப் போதுமான அளவுக்குப்போட்டு இடைவிடாமல் கொளுத்துவது (ஈக்களை ஓட்டுவதற்கு) நல்ல உபாயமாகும். அனேக சமயங்களில், ஈக்கள் வியாதி பரவுவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வியாதியாயுள்ள பிராணிகளைச் சுத்தமாக வைத்து அவைகளுக்கு மலத்தைப் போக்கத்தக்க தீனி போடவேண்டும்.

XIII.—வியாதிப்பட்ட கால்நடைகளை மிகவும் சுத்தமாக வைத்து, நீர்மயமாயுள்ள அரிசிக்கஞ்சியையும் புது பச்சைப்புல்லையும் அவைகளுக்குத் தீனியாகப் போடவேண்டும். சுகமாயுள்ள கால்நடைகளுக்கும் மலத்தைப் போக்கத்தக்க மிருதுவான தீனி போட்டுவரவேண்டும்; ஏனென்றால், காய்ந்துகடினமாயுள்ள தீனி

---

* காற்றோடிகள் - கதவுகளுக்கும் ஜன்னல்களுக்கும் மேலே காற்றோடும்படி வைக்கப்பட்டிருக்கிற திறப்புகள்.

போடப்பெற்ற கால்நடைகளுக்கு வியாதி வந்தால், அது மலத்தைப் போக்கத்தக்க தீனி போடப்பெற்றவைகளுக்கு வருவதைக்காட்டிலும் கொடுமையாயிருக்கும்.

சௌக்கியப்படும் கால்நடைகள்.

XIV.—எதாயினும் ஒரு மாட்டுமந்தை அல்லது ஆட்டுமந்தையில் இந்தத் தொத்துவியாதிகள் பரவியிருக்கும்பட்சத்திலே, அந்த மந்தையில் கடைசியாக யாதொரு பிராணிக்கு வியாதி கண்டது முதல் மூன்று மாதம் கழிகிறவரையில் (XX, XXI-வது விதிகளைப் பார்க்க), அந்த மந்தையைச் சுகமாயுள்ள மந்தைகளோடு மேய்க்கவாவது கட்டிவைக்கவாவது கூடாது.

(தொத்துவியாதி கண்டு) குணப்பட்டுக்கொண்டுவருகிற பிராணிகளைக் கழுவுவதும் அவைகளினின்றும் தொத்துவியாதிசம்பந்தம் நீக்குவதும்.

XV.—(வியாதி கண்டு) சொஸ்தமான பிராணிகளை ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே அனுப்புமுன், இளஞ்சூடாயுள்ள வெந்நீரும் சவர்க்காரமும்கொண்டு நன்றாகக் கழுவவேண்டும். * கார்பாலிக் ஆஸிட் என்ற மருந்து கிடைக்குமானால், அப்படிக் கழுவும் வெந்நீரில் (ஒரு காலன் அதாவது) பட்டிணம் படி இரண்டரைக்கு (ஒரு வொயின் க்ளாஸ் அதாவது) அரைவீசம்படி கார்பாலிக் ஆஸிடைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

இறந்த பிராணிகளை ஒருவகை செய்வது.

XVI.—தொத்துவியாதி கண்டிறந்த கால்நடைகளைக் கூடியபோதெல்லாம் இறந்த இடத்திலேயே மொத்தமாகக் கொளுத்திவிடவேண்டும். விறகு அகப்படாமையினால் அப்படி கொளுத்துவது சாத்தியமாயிராதபட்சத்திலே, அவைகளைப் புதைத்துக் குறைந்தபட்சம் நாலடி மண் மேலேபோட்டு மூடவேண்டும்.

தோல்களை அழிப்பது.

XVII.—தொத்துவியாதியினால் இறந்த கால்நடைகளின் தோல்களை அவைகளின் தேகத்தோடு அழித்துவிடவேண்டும். அவைகளைப புதைக்கிறபட்சத்திலே, மண்போட்டு மூடுமுன்னே † தோல்களைக் கத்தியினால் தாறுமாறாகக் கீறிச் சின்னபின்னப்படுத்திவிடுவது நல்லது.

(கால்நடைக்) கொட்டில்களினின்றும் தொத்துவியாதிசம்பந்தம் நீக்குவது. கால்நடைப்ளேக் விசாரணைக்கமிஷனர்களின் ரிபோர்ட்டைப் பார்க்க.

XVIII.—தொத்துவியாதிகண்ட கால்நடைகள் இருந்த கட்டிடங்களின் மண்தளங்களிலிருந்தும் அவைகள் நின்ற நிலங்களிலிருந்தும் மேல்மண்ணைப் பேர்த்து அப்புறப்படுத்திப் புதைக்கவேண்டும்; பின்பு கீழே ஆழமாக வெட்டி, வெட்டிய மண்ணை மேல்கீழாகப் புரட்டிப்போடவேண்டும்; அதற்குப்பின் தளங்களுக்குப் புதுமண் கொண்டுவந்து போடவேண்டும். செங்கல்தளங்களையும் கல்தளங்களையும் சுற

---

* கார்பாலிக் ஆஸிட் தனியாக மேலே பட்டால் சுட்டுக் கொப்புளமுண்டாகுமாகையால், அதைத் தண்ணீரில் ஜாக்கிரதையாகக் கலக்கவேண்டும்.

† சக்கிலியர் இந்தத் தோல்களை எடுத்துக்கொண்டுபோவதையும், அதனால் வியாதி பரவுவதையும் தடுப்பதற்காக இப்படிச் செய்யவேண்டியிருக்கிறது.

ண்டிக் கழுவி அவைகளினின்றும் நீற்றாத சுண்ணாம்பு அல்லது கார்பாலிக் ஆஸிடைக்கொண்டு தொத்துவியாதிசம்பந்தம் நீக்கவேண்டும் (கால்நடை ப்ளேக் விசாரணைக் கம்மிஷனர்களின் ரிபோர்ட் 810-811-வது பக்கங்களைப் பார்க்க).

சாமான்களினின்றும் தொத்துவியாதிசம்பந்தம் நீக்குவது.

XIX.—தொத்துவியாதி கண்ட பிராணிகளுக்காக உபயோகித்த வண்டிகளின் ஏர்க்கால் வார்கயிறு முதலிய வண்டிச்சாமான் சேணம் முதலியவைகளைக் கழுவி அவைகளினின்றும் தொத்துவியாதி சம்பந்தம் நீக்கவேண்டும். பொதிச்சேணங்களினுள்ளே நிரப்பிவைத்திருக்கும் பழைய துணி பஞ்சு முதலியவைகளைப் பிரித்தெடுத்துக் கொளுத்திவிடவேண்டும்.

வெக்கை, கால்நோய் வாய்நோய் முதலிய தொத்து வியாதிகளின் விஷம் வெளிக்குத் தோன்றாமல் உள்ளேயே விருத்தியடையுங் காலம்.

XX.—வெக்கை, மென்னை அடைப்பான், சப்பைநோய், அடைப்பான் கால்நோய் வாய்நோய், ஆகிய வியாதிகளின் விஷம் வெளிக்குத் தோன்றாமல் உள்ளேயே விருத்தியடையும் காலம் இருபத்தெட்டுநாள்களுக்குட்பட்டதாகும்; ஆகையால், இத்தத் தொத்துவியாதிகளின் சம்பந்தத்துக்குட்பட்டதாக அனுமானிக்கப்பட்ட யாதொரு பிராணியைப் பிரத்தியேகமாக வைத்திருக்கவேண்டிய காலம் ஒருமாதமென்று குறிக்கப்பட்டிருக்கிறது.

சுவாசாசய அழற்சி என்னும் வியாதியின் விஷம் வெளிக்குத்தோன்றாமல் உள்ளேயே விருத்தியடையுங் காலம்.

XXI—தொத்துகிற சுவாசாசய அழந்சியின் விஷம் உள்ளேயே விருத்தியடையுங் காலம் இரண்டு வாரமுதல் ஆறு வாரம்வரையில் வேறுபடுகிறது: ஆனால், சாதாரணமாய் அந்தக் காலம் பத்து நாள்முதல் மூன்றல்லது மூன்றுக்குமேற்பட்ட மாதம்வரையிலும் வேறுபடுவதாகவும் தெரியவந்திருக்கிறது; ஆகையால், கால்நடைகள் இந்த வியாதியின் சம்பந்தத்துக்குட்பட்டபோது, அவைகளைக் குறைந்தபட்சம் மூன்று மாதம் பிரத்தியேகப்படுத்திவைத்திருக்கவேண்டும்.

தொத்துவியாதிகள் வாராமல் தடுப்பதற்காக அம்மை குத்துவது.

குறிப்பு.—தொத்துவியாதிகள் காணுகிற சகல விஷயத்திலும் மேற்குறித்த விதிகளை அனுஷ்டிப்பது முக்கியமானது; ஆனால், எந்த வியாதிகள் வாராமல் தடுப்பதற்காக அம்மை குத்தும் முறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதோ அந்த வியாதிகள் கண்டால் அவ்விதிகளை அநேக சந்தர்ப்பங்களில் அவ்வளவு கடினமாக அனுசரியாமல் மாற்றிக்கொள்ளலாம். ஒவ்வொரு விதமாகவும் தொத்துவியாதிசம்பந்தம் நீக்குவது எல்லாவிதத்திலும் எப்பொழுதும் அவசியமான காரியம்; ஆனால், யாதொரு வியாதி வாராமல் பிராணிகள் பாதுகாக்கப்பட்டிருந்தால், பிராணிகளைப் பிரத்தியேகப்படுத்திவைத்திருப்பதைப்பற்றிய ஏற்பாட்டை அநேக ச

தர்ப்பங்களில் அவ்வளவு கடினமாய் அனுசரிக்காமலிருக்கலாம். (மிருக) வைத்தியர்கள் கிடைப்பார்களானால், எப்போதும் அவர்களை வரவழைத்து (வியாதி வராமல்) தடுப்பதற்காக அம்மைகுத்தவிக்கவேண்டும். இந்த விஷயமாக இன்னும் விசேஷமாய்ச் சங்கதி தெரியவேண்டுமானால், இந்தப் புஸ்தகத்தில் வெவ்வேறு வியாதிகளைப்பற்றிய அத்தியாயங்களிலே பார்த்துத் தெரிந்துகொள்ளவேண்டும்.

---

## சென்னை ராஜதானியின் பலபாகங்களில் வெவ்வேறு கால்நடைவியாதிகளுக்கு வழங்கும் சுதேசப்பெயர்களின் அட்டவணை.

### 1. வெக்கை.

| பெயர். | இல்லா. |
|---|---|
| **தமிழ்.** | |
| அம்மை ... ... ... ... ... | ...... |
| சரக்குழிச்சல் ... ... ... ... ... | ...... |
| பிச்சைநோவு ... ... ... ... | ...... |
| வெக்கை ... ... ... ... ... | ...... |
| வெதுபபு ... ... ... ... ... | ...... |
| **தெலுங்கு.** | |
| ஸரகு ... ... ... ... ... | ...... |
| **மலையாளம்.** | |
| பேய ... ... ... ... ... | ...... |
| வஸந்தரோகம் ... ... ... ... | ...... |
| **கன்னடம்.** | |
| தொட்டரோக ... ... ... ... | ...... |
| **(பலவகை.*)** | |
| குடிநோவு ... ... ... ... ... | ...... |
| தூக்கம் ... ... ... ... ... | ...... |
| படா அஜார் ... ... ... ... ... | ...... |
| படா பாவு ... ... ... ... ... | ...... |
| பாவு ... ... ... ... ... | ...... |
| புர்ரா அஜார் ... ... ... ... | ...... |
| பெத்த மூஸாரோகம் ... ... ... ... | ...... |
| பெரிய நோவு ... ... ... ... | ...... |
| பைச்சி நோவு ... ... ... ... | ...... |
| வஸூரி ... ... ... ... ... | ...... |

* பலவகை என்னும் தலைப்பின்கீழே எழுதப்பட்டுள்ள பெயர்கள் இங்க்லிஷ் புஸ்தகத்தில் 5 முதல் 9 வரையிலுள்ள பக்கங்களிலும் 23-ம் பக்கத்திலுங்கண்ட பெயர்களாகும்.

## 2. கால்நோய் வாய்நோய.

| பெயர். | ஜில்லா. |
|---|---|
| **தமிழ்.** | |
| கால் கோமாரி ... ... ... ... | ...... |
| கால்நோய் வாய் ... ... ... | ...... |
| காற்கானை ... ... ... ... ... | ...... |
| கானை ... ... ... ... ... | ...... |
| கோமாரி ... ... ... ... ... | ...... |
| வாய்க் கானை ... ... ... ... ... | ...... |
| வாய் கோமாரி ... ... ... ... | ...... |
| **தெலுங்கு.** | |
| காலிநோடி காளு ... ... ... ... | ...... |
| **மலையாளம்.** | |
| மூபாங் ... ... ... ... ... | ...... |
| வாயில் புண்ணும் குளம்பு தீனம் ... ... | ...... |
| **கன்னடம்.** | |
| காலுகுன்டவாய்ஜா ... ... ... ... | ...... |
| சாலு கோமாரி வாயி கோமாரி ... ... | ...... |
| **(பலவகை.)** | |
| காலஜா ... ... ... ... ... | உதகமண்டலம். |
| பாயிஜா ... ... ... ... ... | ஷை |

## 3. மென்னை அடைப்பான்.

| பெயர். | ஜில்லா. |
|---|---|
| **தமிழ்.** | |
| தமுட்டி ... ... ... ... ... | ...... |
| தொண்டை அடைப்பான் ... ... ... | ...... |
| மென்னை அடைபபான் ... ... ... | ...... |
| **தெலுங்கு.** | |
| எர்ர உச்சலு ... ... ... ... ... | ...... |
| **மலையாளம்.** | |
| ரக்தஸ்ராவ் ... ... ... ... ... | ...... |
| **கன்னடம்.** | |
| ரக்தமூத்திரவியாதி ... ... ... ... | ...... |
| **(பலவகை.)** | |
| ரக்தமூத்திரம் ... ... ... | ...... |

## 4. அடைப்பான்.

| பெயர். | ஜில்லா. |
| --- | --- |
| **தமிழ்.** | |
| அடைப்பான் ... ... ... ... | ...... |
| திருட்டுநோவு ... ... ... ... | ...... |
| தெரியன் ... ... ... ... ... | ...... |
| **தெலுங்கு.** | |
| தொம்மரோகமு ... ... ... ... | ...... |
| **மலையாளம்.** | |
| அடப்பன் ... ... ... ... ... | ...... |
| **கன்னடம்.** | |
| தொம்மெ ... ... ... ... ... | ...... |
| நெரடிவியாதி ... ... ... ... | ...... |
| **(பலவகை.)** | |
| பிச்சுநோவு ... ... ... ... ... | ...... |

## 5. சப்பைநோய்.

| பெயர். | ஜில்லா. |
| --- | --- |
| **தமிழ்.** | |
| சந்தடைப்பான் ... ... ... ... | ...... |
| சப்பைநோய் ... ... ... ... | ...... |
| படைநோய் ... ... ... ... | ...... |
| **தெலுங்கு.** | |
| ஜப்பவாபு ... ... ... ... | ...... |
| **மலையாளம்.** | |
| இடுப்புதீனம் ... ... ... ... | ...... |
| கரிங்கால் ... ... ... ... | ...... |
| **கன்னடம்.** | |
| நப்பெரோக ... ... ... ... | ...... |
| **(பலவகை.)** | |
| சூபரிநோவு ... ... ... ... | எர்க்காடு. |
| மொர்லவியாதி ... ... ... ... | ...... |

## 6. தொத்துகிற சுவாசாசய அழற்சி.

| பெயர். | ஜில்லா. |
| --- | --- |
| **தமிழ்.** | |
| தொத்துகிற சுவாசாசய அழற்சி ... ... | ...... |
| **கன்னடம்.** | |
| அங்களாந்தி ரோக ... ... ... ... | ...... |
| **(பலவகை.)** | |
| ஜாஹூல் ஜஞ்ப் } பாப்ஷா } ... ... ... ... | (பம்பாய்.) |
| பீப்ரீ ... ... ... ... ... | (பஞ்சாப், ஸிந்த்.) |

## 7. செம்மறியாட்டம்மை.

| பெயர். | ஜில்லா. |
| --- | --- |
| **தமிழ்.** | |
| ஆட்டு வைசூரி ... ... ... ... | ...... |
| செம்மறியாட்டம்மை ... ... ... ... | ...... |
| பொக்களநோய் ... ... ... ... | ...... |
| **தெலுங்கு.** | |
| கொர்ரெல மசூசிகமு ... ... ... ... | ...... |
| **மலேயாளம்.** | |
| அம்மா ... ... ... ... ... | ...... |
| தேவீ ... ... ... ... ... | ...... |
| மாதாவு ... ... ... ... ... | ...... |
| **கன்னடம்.** | |
| குரிகள ஸிடுகு ... ... ... ... | ...... |

## 8. விழுங்கக்கூடாமை.

| பெயர். | ஜில்லா. |
| --- | --- |
| **தமிழ்.** | |
| விழுங்கக்கூடாமை ... ... ... ... | ...... |

## 8. விழுங்கக்கூடாமை—தொடர்ச்சி.

| பெயர். | ஜில்லா. |
|---|---|
| **தெலுங்கு.** | |
| சொந்து அடுசுகொனுட ... ... ... | ...... |
| **மலையாளம்.** | |
| கண்ட நிரோதம் ... ... ... ... | ...... |
| **கன்னடம்.** | |
| உஸுருகட்டு ... ... ... ... ... | ...... |

## 9. வயிற்றுப்பொருமல்.

| பெயர். | ஜில்லா. |
|---|---|
| **தமிழ்.** | |
| வயிற்று உப்புசம் ... ... ... ... | ...... |
| வயிற்றுப்பொருமல் ... ... ... ... | ...... |
| **தெலுங்கு.** | |
| கடுபு உப்படமு ... ... ... ... | ...... |
| **மலையாளம்.** | |
| வயறு விற்குக ... ... ... ... ... | ...... |
| **கன்னடம்.** | |
| வாதோதரரோக ... ... ... ... | ...... |

## 10. முதல் இரைப்பை அடைப்பு.

| பெயர். | ஜில்லா. |
|---|---|
| **தமிழ்.** | |
| முதல் இரைப்பை அடைப்பு ... ... ... | ...... |
| **மலையாளம்.** | |
| அஜீரணம் ... ... ... ... ... | ...... |
| **கன்னடம்.** | |
| தெமருரோக... ... ... ... ... | ...... |

## 11. மூன்றாம் இரைப்பை அடைப்பு.

| பெயர். | ஜில்லா, |
|---|---|
| **தமிழ்.** | |
| மூன்றாம் இரைப்பை அடைப்பு ... ... ... | ...... |
| **கன்னடம்.** | |
| மூர்நே ஆகாரகோசெள தும்பிகொண்டு இருமிக. | ...... |

## 12. இரத்தமூத்திரம்.

| பெயர். | ஜில்லா. |
|---|---|
| **தமிழ்.** | |
| இரத்த மூத்திரம் ... ... ... ... | ...... |
| இரத்தாமூரி ... ... ... ... ... | ...... |
| **தெலுங்கு.** | |
| ரக்தமூத்ரமு ... ... ... ... | ...... |
| **மலையாளம்.** | |
| ரக்தமூத்திரம் ... ... ... ... | ...... |
| **கன்னடம்.** | |
| கெம்பு மூத்ர ... ... ... ... | ...... |

## 13. கழிச்சல்.

| பெயர். | ஜில்லா. |
|---|---|
| **தமிழ்.** | |
| எருக்கல் ... ... ... ... ... | ...... |
| கழிச்சல் ... ... ... ... ... | ...... |
| பேதி... ... ... ... ... ... | ...... |
| வயிற்றுப்போக்கு ... ... ... ... | ...... |
| வயிற்றோட்டம் ... ... ... ... | ...... |
| **தெலுங்கு.** | |
| விரேசனமுலு (பேதுலு) ... ... ... | ...... |
| **மலையாளம்.** | |
| அதிஸாரம் .. ... ... ... ... | ...... |

## 13. கழிச்சல்—தொடர்ச்சி.

| பெயர். | ஜில்லா. |
| --- | --- |
| **கன்னடம்.** | |
| அதிஸார ... ... ... ... ... | ...... |
| உர்ச்சுகுளிரோக ... ... ... ... | ...... |

## 14. சீதபேதி.

| பெயர். | ஜில்லா. |
| --- | --- |
| **தமிழ்.** | |
| இரத்தபேதி ... ... ... ... ... | ...... |
| சீதபேதி ... ... ... ... ... | ...... |
| வயிற்றளைசசல் ... ... ... ... | ...... |
| வயிற்றுக்கடுப்பு ... ... ... ... | ...... |
| **தெலுங்கு.** | |
| ரக்தவிரேசனமுலு (நெத்துருபேதுலு) ... | ...... |
| **மலையாளம்.** | |
| உஷ்ணாதிஸாரம் ... ... ... ... | ...... |
| சீதபேதி ... ... ... ... ... | ...... |
| சோரப்போக்கு ... ... ... ... | ...... |
| **கன்னடம்.** | |
| ஆமசங்கெ ... ... ... ... ... | ...... |

## 15. செம்மறியாடுகளுக்குக் காணும் ஊழ்த்தல்நோய்.

| பெயர். | ஜில்லா. |
| --- | --- |
| **தமிழ்.** | |
| ஊழ்த்தல்நோய் ... ... ... ... | ...... |
| **தெலுங்கு.** | |
| கொர்ரெல ஊலவெதகுலு ... ... | ...... |
| **மலையாளம்.** | |
| ஆடுகளுக்குக கிருமிரோகம். ... ... ... | ...... |
| **கன்னடம்.** | |
| குரிகளிகெ தகலுவ தெவுலுரோக ... ... | ...... |

## 16. குரல்வளை அழற்சி அல்லது இருமல்.

| பெயர். | ஜில்லா. |
|---|---|
| **தமிழ்.** | |
| இருமல் ... ... ... ... ... | ...... |
| குரல்வளை அழற்சி ... ... ... ... | ...... |
| செருமல் ... ... ... ... ... | ...... |
| புகைச்சல் ... ... ... ... ... | ...... |
| **தெலுங்கு.** | |
| காஸமு ... ... ... ... ... | ...... |
| **மலையாளம்.** | |
| சுவாச நாள ரோகம் ... ... ... ... | ...... |
| **கன்னடம்.** | |
| காஸ சுவாஸ ... ... ... ... ... | ...... |

குறிப்பு.—மேலேகண்ட பெயர்கள் சாதாரணமாய்ச் சரியான பெயர்களென்றே நம்பப்படுகின்றன : ஆனால், வெவ்வேறு இயல்புகளுள்ள வியாதிகளுக்கு அனேக சந்தர்ப்பங்களில் ஒரே பெயர் வழங்குகிறது ; மேலும், சில வியாதிகளின் விஷயத்திலே அவைகளின் ஒவ்வொரு தசைக்கும் ஒவ்வொரு பெயர் வழங்குகிறது.

மென்னை அடைப்பான் - அடைப்பான்-சப்பைநோய் ஆகிய இவைகளில் ஒன்றுக்கொன்றுள்ள வித்தியாசம் சுதேசிகளுக்குச் சாதாரணமாய்த்தெரிவதில்லை; ஆகையால், அவர்கள் இந்த வியாதிகளின் பெயர்களை ஒன்றுக்கொன்று விசேஷமாய் மாறுபாடாக உபயோகப்படுத்துகிறார்கள்.

# 2-ம் அத்தியாயம்.

## வெக்கை.

**சுதேசப்பெயர்கள்.**

[* பெயர்கள்.—இந்த நோய்க்கு வெதுப்பு, சரக்கழிச்சல், பிச்சை நோவு, அம்மை முதலிய பல பெயர்கள் வழங்குகின்றன.]

**இயல்பு.**

இயல்பு.—வெக்கை என்பது (சுரமும் பேதியும் கலந்து மனிதருக்கு வரும்) டைபாயட் என்னும விஷசுரத்தின தன்மையுள்ள தொத்துவியாதி. அது வெகு லகுவாகத் தொத்துந் தன்மையுள்ளவைகளென்று தெரிந்த வியாதிகளில் ஒன்று. (இந்த வியாதி கண்ட கால்நடைகளின்) இரத்தத்திலும் தேகத்தின் சதை முதலிய பாகங்களிலும பரவியுள்ள குறித்த ஒரு விஷவஸ்து இந்த வியாதிக்கு ஆதாரமாயிருக்கிறது. இந்த வியாதி கண்ட கால்நடைகளின் நான்காம் இரைப்பையிலும் குடலிலும் சில குறிப்பான மாறுதல்கள் தவறாமல் காணப்படுகின்றன.

**வியாதியின் விஷம் உள்ளேயே விருத்தியடையுங் காலம்.**

ஒரு பிராணி இந்த வியாதி சம்பந்தத்துக்குட்பட்ட துமுதல் வியாதியின் விஷம் உள்ளேயே விருத்தியடையுங் காலம், அதாவது -வியாதிக்குறிகள் வெளிக்குத் தோன்றும்வரையில் செல்லுங் காலம் மூன்றுநாளுக்குமேல் ஏழுநாளுக்குட்பட்டதாக இருக்கிறது.

**குறிகள்.**

குறிகள்.—முதலிலே காணப்படும் குறி - (வியாதிகண்ட பிராணியின்) தேகச்சூடு அதிகப்படுவது; அதைச் சீதோஷ்ண அளவைக் கருவியினால் சோதித்துத் தெரிந்துகொள்ளக்கூடும். சாதாரண ஜனங்கள் கவனித்துத் தெரிந்துகொள்ளக்கூடிய குறிகளை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்:—

**முதற் பகுதி.**

முதற் பகுதி.—உற்சாகமின்மை, நடுங்குவது, மயிர் சிலிர்த்து நிற்பது, வாய் சூடாயிருப்பது, வாயின் தோல் இரத்தச்சுரப்பினால் சிவந்திருப்பது, குறுகின வறட்டிருமல், காதுகள் சோர்ந்து தொங்குவது, சாதாரணமாய் மலச்சிக்கு, சாணி சீதத்தினால் மூடியிருப்பது, அரைகுறையான பசி, அநேக சந்தர்ப்பங்களில் அதிகமான தாகம், தேகத்தின் பல பாகங்களிலுள்ள சதைகளிலும்-முக்கியமாக முதுகு முன்சப்பைகள் பின்சப்பைகள் இவைகளிலுள்ள சதைகளிலும் வலியும் இழுப்பும், முதுகு வில்போல வளைவது, நாலு கால்களும் (வயிற்றுக்குக் கீழாக) நெருங்கக் கொண்டுவரப்படுவது, தாமதமாகவும் ஒழுங்கில்லாமலும் அசைபோடுவது, பல்லை நெறநெறென்று கடிப்பது, கொட்டாவிவிடுவது, முதுகெலும்பை அழுத்தினால் நோவது, நாடித்துடிப்பு துரிதப்படுவது.

---

* இங்க்லிஷ் புஸ்தகத்திலே இந்தநோய்க்கு பங்காளமுதலிய இடங்களில் வழங்கும் பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளுக்குப் பர்த்தியாகச் சென்னைராஜதானியின் பல பாகங்களில் வழங்கும் பெயர்கள் இங்கே கூறப்பட்டன. இப்படி மற்ற நோய்களுக்கும் அந்தந்த வியாதியைப்பற்றிய அத்தியாயத்தின் ஆரம்பத்தில் இந்த ராஜதானியின் பல பாகங்களில் வழங்கும் பெயர்களே கூறப்படும்.

இரண்டாம் பகுதி.

**இரண்டாம் பகுதி.**—வாய்-காதுகள்-கொம்புகள்-கால்கள்-தேகத்தின் மற்றப் பாகங்கள் ஆகிய இவைகள் சில சமயங்களில் உஷ்ணமாகவும் சிலசமயங்களில் சீதளமாகவும் சீதோஷ்ண வேறுபாடுகள் அடைவது, சுவாசம் மிகவும் துரிதப்படுவது, பசியில்லாமற் போய்விடுவது, அசைபோடுதல் நின்றுவிடுவது, கண்களிலிருந்து சொற்பமாக நீர்வடிவது, முதுகெலும்பை அழுத்தினால் உண்டாகும் நோவு அதிகப்படுவது, தலையை விலாப்பக்கம் நோக்கித் திரும்பவைத்துப் படுத்துக்கிடப்பது, மிகுதியான சுரம், மிகுந்த தாகம், விழுங்குவதற்குக் கஷ்டப்படுவது, சதைகளிலே வலியும் இழுப்பும் விசேஷமாகக் காணப்படுவது, நாடித்துடிப்பு மிகவும் துரிதமாயும் ஒழுங்கில்லாமலும் இருப்பது, அசைவதற்குக் கஷ்டப்படுவது, ஈறும் கன்னங்களின் உட்பக்கத்துத் தோலும் நாக்கின் தோலும் மிகச்சிவந்திருப்பது, நாக்கின்மேல் (ரோகக்குறிகாட்டும்) அழுக்கு படிவது, மலபந்தம் அதிகப்படுவது, உண்டைஉண்டையாகத் துண்டுபட்டுப் போடப்படும் சாணியின்மேல் சீதமும் ரத்தமும் மூடியிருப்பது, மலக்குடல் பெண்குறி இவைகளின் உட்பக்கத்துத் தோல் மிகச் சிவந்து வறண்டிருப்பது, மூலக்கடுப்பு, ஏதோ சில சந்தர்ப்பங்களில் மலக்குடல் பெண்குறி இவைகளின் உட்புறம் வெளிக்குத் தள்ளப்படுவது.

மூன்றாம் பகுதி.

**மூன்றாம் பகுதி.**—கண்கள் மூக்குத்துவாரங்கள் வாய் இவைகளிலிருந்து பிசுபிசுப்பான நீர் அதிகமாக வடிவது; சுவாசம் மிகவும் துர்க்கந்தமாவது, ஈறு - கடைவாய் - கன்னத்தின் உள்பக்கம் - வாயின் மேற்புறம் - வாயின் அடிப்புறம்-நாக்கு-இந்த இடங்களிலும் சில சமயங்களில் மூக்குத்துவாரங்களின் உட்பக்கத்திலும் கண்ரெப்பைகளின் உட்பக்கத்திலும் கூடத் தோலுரிபடுவதும் மஞ்சள் நிறமான புண் கொஞ்சமாகவோ அதிகமாகவோ உண்டாவதும், முன்வாய்ப்பற்கள் ஆடிப்போவது. இப்போது பேதி ஆரம்பிக்கும்: முதலில், சீதமும் ரத்தமும் மூடிய கடினமான சிறு சாணி உண்டைகளும் குழம்பான மலமும் விழும்; பின்பு வெறு நீர்மயமாய்ச் சீதக்கட்டும் இரத்தமும் ரணமான சதைத்துண்டுகளும் கலந்த மலம் விழும்; அது மிகவுந் துர்நாற்றமுடையதாயிருக்கும்; ஏதோ சில சந்தர்ப்பங்களில் காற்று உள்ளடங்கிய வீக்கங்கள் தோலுக்கடியிலே காணப்படும். மிகுந்த தளர்ச்சி தோன்றும்; இடைவிடாமல் தாகமுண்டாகும்: ஆயினும், விழுங்குவதற்கு அதிக கஷ்டமாயிருக்கும்; பின்பு இருமலுண்டாகித் தோல் - கொம்புகள் - காதுகள் - கால்கள் - வாய் இவைகள் சில்லென்று போகின்றன. (வியாதி கண்ட பிராணி) கர்ப்பமாயுள்ள பசுவாயிருந்தால், கர்ப்பம் பெரும்பாலும் கரைந்துபோகும். (வியாதியுள்ள) பிராணி படுத்துக்கொண்டு, எழுந்திருக்கச் சக்தியேயில்லாமல் வருத்தத்தோடு சத்தஞ்செய்யும்; சுவாசம் விடுவதற்குக் கஷ்டப்படும்; அடித்தொண்டையினால் (பன்றி உறுமுதல்போலக்) குறுகுறுப்பான சத்தமிடும்: அதற்குத் தெரியாமல் ஜலரூபமான இரத்தக்கழிச்சல் ஒழுகும்; நாடி அகப்படாமற்போய்விடும்; மரணம் பெரும்பாலும் இரண்டு நாளுக்குமேல் ஆறுநாளுக்குள் சம்பவிக்கும். சில சமயங்களில் அலைதாடி - பால்மடி - தொடையிடுக்கு - தோள்பட்டை-விலாப்புறம்-இவ்விடங்களில் கொப்புளங்கள் தோன்றும்;

ஆனால், இந்தக் கொப்புளங்கள் இந்த வியாதியில் தவறாமல் காணப்படுகிற குறி அல்ல; அவைகள் (எப்போதாயினும்) தோன்றினால், கோடைக்காலத்தில் இந்த வியாதிகாணும் கால்நடைகளுக்குத்தான் தோன்றுகின்றன. இந்தக் கொப்புளங்கள் அனுகூலமான குறியாகக் கருதப்படுகின்றன; ஏனென்றால், அவைகள் அதிகமாகக் காணப்பட்டால், அப்படி காணப்படும் பிராணிகளுக்குச் சீதபேதிக்குறிகள் தோன்றுவது அபூர்வம்: அன்றியும், அவைகள் பெரும்பாலும் சொஸ்தமடைகின்றன; தோலில் கொப்புளங்கள் ஒன்றும் காணாமல் கொடூரமான சீதபேதிக்குறிகள் இருந்துகொண்டே இருந்தால், பெரும்பாலும் மரணம்நேரிடுகின்றது.

சுதேசிகள் இந்த வியாதியைப்பற்றி கொண்டிருக்கும் அபிப்பிராயம்.

கால்நடைகளின் சொந்தக்காரர்களாகிய சுதேசிகளிற் சிலர் இந்த வியாதியை ஒருவகை வைசூரியென்று கருதுவது தப்பல்ல; இந்த வியாதிகண்ட பிராணியின் தோலில் கொப்புளங்கள் தெளிவாகக் காணப்பட்டால், அவர்கள் இந்த வியாதியை அம்மையென்று சொல்லுகிறார்கள்;

அம்மை உள்ளம்மை.

இரைப்பை - குடல் - இவைகளின் உள்தோல் மிகவும் பாதிக்கப்பட்டு, அதனால் இரத்தக் கழிச்சலும் சீதக் கழிச்சலும் கண்டால், அவர்கள் இந்த வியாதியை உள்ளமமையென்று சொல்லுகிறார்கள். இந்த வியாதி கண்ட சிலபிராணிகள், முக்கியமாக வியாதி தீவிரமாய்க்கண்டால், வசமற்று ஜன்னிக்குறி காட்டிப் பல இடங்களிலும் பாய்ந்து கீழே விழுந்து உணர்ச்சியற்றுச் சாகின்றன.

இந்த வியாதிக்கேயுரிய குறிகள்.

கண்கள் - மூக்குத்துவாரங்கள் - வாய் இவைகளிலிருந்து பிசுபிசுப்பான நீர்வடிவதும் ஈறுகளும் வாயின் உட்பக்கத்திலுள்ள மற்றப்பாகங்களும் தோலுரிபட்டு ரணமாவதும், சீதபேதியாவதும், தோலில் கொப்புளங்கள் உண்டாகிற பட்சத்திலே அவைகளும்தான் இந்த வியாதிக்கேயுரிய மிகமுக்கியமான குறிகள். ஆயினும், இந்தக் குறிகள் சகலமும் தவறாமல் காணப்படுகிறதில்லையென்பதையும், இந்தக் குறிகளில் சிலகுறிகள் எப்போதும் காணப்படுகின்றனவென்பதையும் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

(வியாதியின்) காலம்.

(வியாதியின்) காலம்.—(வியாதி ஆரம்பமுதல் சௌக்கியம் அல்லது மரணமாகும் வரையில்) இந்த வியாதியின் காலமானது இருபத்திநான்குமணி நேரமுதல் பன்னிரண்டல்லது பதினாறுநாள் வரையிலுமாகும்; ஆனால், அது சாதாரணமாக மூன்றுநாளுக்குமேல் ஒன்பது நாளுக்குள்ளேயே இருப்பதாகக் காணப்படுகிறது.

சிகிச்சை.

சிகிச்சை.—இந்த வியாதிக்கு மருந்து கொடுத்துச் சிகிச்சைசெய்வதனால் பெரும்பாலும் பிரயோசனமில்லையென்று முதலிலேயே சொல்லிவிடலாம். இந்தியாவில் மருந்து கொடுப்பதனால் சிலசமயங்களில் அனுகூலமுண்டாகிறது; இந்த வியாதி இந்தத் தேசத்தில் (அப்போதைக்கப்போது நூதனமாக வெளியிலிருந்து கொண்டுவரப்படாமல்) அவ்வவ்விடத்திலேயே உற்பத்தியாகிறதென்பதும் பலசந்தர்ப்பங்களில் அது சாந்த

மாய்க் காணுகிறதென்பதுமே மேலேகூறியபடி அநுகூலமுண்டாவதற்குக் காரணமென்று சொல்லலாம். க்ரேட்ப்ரிடன் தேசத்திலும் ஐரோப்பா கண்டத்திலுள்ள மற்றப் பெரும்பான்மையான தேசங்களிலும் இந்த வியாதிக்கு மருந்து கொடுப்பதனால் அநுகூலமுண்டாவது அபூர்வம்; அதற்குக் காரணம் என்னவென்றால், இந்த வியாதி அந்தத் தேசங்களிலேயே உற்பத்தியாகும் வியாதியல்லாமலிருப்பதும் எப்போதும் கொடூரமாகக் காணுகிறதும்தான். இந்த வியாதி அங்கே உண்டாகும்போது, இதை (உண்டான இடத்திலேயே) அடக்கிவிடுவதற்கும் (மற்ற இடங்களில்) பரவாமல் தடுப்பதற்கும் மிகவும் கண்டிப்பான ஏற்பாடுகள் வியாதி உண்டானவுடனே செய்யப்படுகின்றன. இந்த வியாதி இந்தியாவிலே எப்போதும் எங்காவது இருந்துகொண்டேயிருக்கிறது; (ஆகையால்) இதைப்போன்ற தேசங்களுக்கு மேற்கண்ட ஏற்பாடுகள் ஏற்றவைகளல்ல; ஆயினும், இந்த வியாதி ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்குப் பரவாமல் தடுக்கும் நோக்கத்துடன், இந்தப் புஸ்தகத்திலே தொத்துவியாதிகளைப்பற்றிய அத்தியாயத்தில் குறித்திருக்கிற விதிகளைக் கண்டிப்பாக அநுசரிக்கவேண்டும்.

அம்மைகுத்துவது.

இந்த வெக்கைவியாதியைத் தடுப்பதற்காக அம்மைகுத்தும் முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த முறை மிகவும் அநுகூலமாயிருக்கிறது: எப்போதும் கால்நடைகளுக்கு மேலேகண்டபடி அம்மைகுத்துவிக்கவேண்டும்; ஏனென்றால், அப்படிசெய்யும் பட்சத்திலே பிராணிகளுக்கு இந்த வியாதிகாணாமல் தடுக்கக்கூடியதாயிருப்பதோடுகூட, அவைகள் இந்த வியாதிகண்ட பிராணிகளோடு கலப்பதனால் எவ்வித அபாயமுமில்லை. வெக்கைவியாதியைத் தடுப்பதற்காக அம்மைகுத்துவதில் பலவகைகளிருக்கின்றன; ஆயினும், இந்தியாவிலெங்கும் அநுஷ்டானத்தில் இருக்கிறமுறைப்படி அம்மைகுத்துவதனால் பிராணிகளுக்கு எவ்வித அசௌகரியமும் இல்லையென்றே சொல்லலாம்; அன்றியும், அம்மைகுத்தின இடத்தில் சொறபவீக்கம் உண்டாவதைத் தவிரக் காய்ச்சலாவது வேறு எவ்வகையான வியாதிக்குறியாவது காணுகிறதில்லை. (அம்மைகுத்தின) பிராணிகளை வேலைசெய்யாமல் நிறுத்தவேண்டியதில்லை; கர்ப்பமாயிருக்கிற பசுக்களுக்கு அம்மைகுத்து தனால் கர்ப்பம் கரைந்துபோகுமென்னும் பயமில்லை. அம்மைகுத்தினால் வியாதி வெகுகாலம் வராமலிருக்குமென்பதில்லை; ஆயினும், அதனால் உண்டாகும் பயன் உடனே தெரிகிறதுமல்லாமல், தொத்துவியாதி சம்பந்தம் நீக்குவதனால் இவ்வியாதியின் விஷத்தை அம்மைகுத்தினவுடனே நாசமாக்கிவிட்டால், ஷை அம்மைகுத்துவதன் பயன் வேண்டிய அளவுகாலத்துக்கு நீடித்துநிற்கக்கூடியதுமாகும். வியாதியுள்ள பிராணிகளோடு சம்பந்தப்பட்ட சகல பிராணிகளுக்கும் அம்மைகுத்திவிடவேண்டும்; அப்படி செய்யாமற்போனால், அம்மைகுத்தாத பிராணிகள் ஒவ்வொன்றாக வியாதிப்பட்டு, வியாதி நெடுங்காலம் நிலைத்திருப்பதோடுகூட, அம்மைகுத்துவதனால் வியாதிதடுக்கப்படும் அநுகூலமும் குறைந்துபோகும்.

அம்மைகுத்தின கால்நடைகளை வியாதிகண்டிருக்கிற கால்நடைகளோடு கலக்கவிடுவது நன்மையென்றெடுத்துக்காட்டப்படுகிறது. இப்படிச்செய்வது ஷை கால்நடைகளின் சொந்தக்காரர்களுக்

குச் சௌகரியமாயிருக்கும்; ஏனென்றால், அப்படிச்செய்கிறபட்சத்திலே அம்மைகுத்தின கால்நடைகளைப் பிரத்தியேகப்படுத்தி வைக்கவேண்டிய அவசியமில்லாமற்போகும். அம்மைகுத்தப்பட்ட பிராணிகளில் சில பிராணிகளுக்கு வியாதிக்குறிகள் தோன்றக்கூடும். ஆயினும், அம்மை குத்தினதன் பலனாக-மேற்படி வியாதிக்குறிகள் கொடூரமாகாமல் இருக்கும்; அன்றியும், யாதொரு பிராணிக்கு ஒருதரம் வியாதிக் குறிகள் தோன்றிவிட்டால், அந்தப் பிராணிக்கு அவ்வியாதி (மறுபடியும்) வராமல் வெகுகாலச் சாசுவதமாகப் பாதுகாப்பு ஏற்படுகிறது.

வேறொரு முறைப்படி அம்மைகுத்துவதனால் பிராணிகளை வியாதிவராமல் சாசுவதமாகக் காக்கக்கூடும். இந்தவகையாக அம்மைகுத்துவதனால் பிராணிகளுக்கு வியாதி லேசாக உண்டாகி அவைகள் சிலநாள் அசௌக்கியமாயிருக்கும்படி நேரிடுகிறது. (இந்தப்படி அம்மைகுத்துவதில்) அம்மைப்பால் எவ்வளவு உபயோகப்படுத்தவேண்டுமென்பதை வெகுதிட்டமாகவும் ஜாக்கிரதையாகவும் தீர்மானிக்கவேண்டும்; அப்படிச்செய்யாமற்போனால், அம்மைகுத்தப்பட்ட பிராணிகளுக்கு மரணம் நேரிடலாம்.

இந்த வியாதிகண்டிருக்கிற பிராணிக்குச் சிகிச்சைசெய்கையிலே அதற்குச்சரியான ஆகாரங்கொடுத்து நன்றாகப் போஷித்து அதன் பலம் குறையாமல் ஆதரிப்பதுதான் முக்கியமான விஷயம். கறியுப்பு (Common salt) அல்லது பேதி உப்பை (Epsom salt) போன்ற மலத்தைப் போக்கத்தக்க உப்புகளைக் கொடுத்தால், வியாதிகண்ட பிராணிகளுக்கு முதலில் தோன்றும் மலபந்தம் நீங்கும்: மலம் போகிறவரையிலே ௸ உப்புகளை வேளைக்கு (ஒன்றரை அவுன்ஸ் முதல் மூன்று அவுன்ஸ் எடையாக, அதாவது) மூன்றேமுக்கால் ரூபாயெடைமுதல் ஏழரை ரூபாயெடையாகச் சிறிதளவாய்த் தினந்தோறும் ஒருவேளை அல்லது இரண்டுவேளை கொடுக்கலாம். இளஞ்சூடாயுள்ள வெந்நீரில் எண்ணெய் சேர்த்துத் தினத்துக்கு இரண்டல்லது மூன்று தடவை (அபானத்தின்மூலமாய்) உள்ளேசெலுத்தலாம்.* பலமான பேதிமருந்துகள் கெடுதி விளைக்கும்; ஆகையால், அவைகளைக் கொடுக்கக்கூடாது. தினந்தோறும் (ஒரு ட்ராம் முதல் இரண்டு ட்ராம்வரையில், அதாவது) மூன்று அரைக்கால் ரூபாயெடைமுதல் ஆறு அரைக்கால் ரூபாயெடைவரையில் க்வினைன் கொடுத்தால் சிலபிராணிகளுக்கு அனுகூலமுண்டாகலாம். இரண்டாவது பகுதியிற்சொன்ன குறிகள் தோன்றி, கழிச்சல் ஆரம்பித்து இருபத்திநான்கு மணிநேரம் கழிந்தபின்பு 13-ம் நெ. மருந்துபட்டியிற் கண்டிருக்கிறபடி செய்த துவர்ப்பாயுள்ள மருந்துபானத்தைக் கொடுத்துப் பின்பு அதைக் கழிச்சல் நிற்கும்வரையில் பன்னிரண்டு மணிநேரத்திற்கொருதரம் கொடுத்துக்கொண்டுவரலாம்.

(வியாதியாயிருக்கும்) பிராணியின் தேகத்தை நன்றாய்ப் போர்த்துச் சூடாக வைத்திருக்கவேண்டும்.

ஆகாரம்.

ஆகாரம்.—நன்றாகக்காய்ச்சி வெந்து சீரான பக்குவமாயிருக்கிற அரிசிக்கஞ்சியை ஆகாரமாகக் கொடுக்கவேண்டும்.

---

* இவ்வாறு செலுத்துவது எப்படியென்று இப்புஸ்தகத்தின் கடைசியில் விவரித்துக் கூறப்பட்டிருக்கிறது.

வியாதியின் ஆரம்பத்தில், மலபந்தம் இருக்கிற வரையிலும் தண்ணீர் கொடுக்கலாம்; பேதி ஆரம்பித்தபின்போவென்றால், இளவெந்நீர்தான் கொடுக்கவேண்டும்; அதுவும் சிறு அளவாய்க் கொஞ்சநேரத்திற்கொருதரமாகக் கொடுக்கவேண்டும்.

பேதி ஆரம்பித்தபிறகு ஜலம் கொடுப்பதைவிடக் கஞ்சிகொடுப்பது நல்லது; கூடியவரையிலும் தண்ணீருக்குப் பர்த்தியாகக் கஞ்சி கொடுத்துப் பிராணியின் தாகத்தைத் தீர்க்கவேண்டும்.

பேதி நின்றபின்பு மருந்து கொடுப்பதை நிறுத்திவிடவேண்டும்; (வியாதிகண்ட) பிராணியைக் கவனமாய்ப் போஷித்துவரவேண்டும்; (அரிசிக்) கஞ்சியையும் கொஞ்சம் பச்சைப்புல் அல்லது * லூஸெர்ன் என்ற பச்சைத்தழை அல்லது வேறே இளம் பச்சைத்தீனியையும் ஆகாரமாகக் கொடுக்கவேண்டும். கொஞ்சம் உப்பை மேற்படி கஞ்சியில் சேர்த்துக்கொடுக்கலாம்; அல்லது, இந்துப்பு (Rock salt) கட்டி ஒன்றை (வியாதிகண்ட) பிராணி நக்கும்படியாக அதற்கு எட்டுந்தூரத்தில் வைக்கலாம். வெக்கைநோய்கண்டு தெளிந்துவரும் மாடுகளுக்குக் கடினமான உலர்ந்த நார்த்தன்மையுள்ள தீனியை எந்த முகாந்தரத்தைக் கொண்டும் கொடுக்கக்கூடாது; ஏனென்றால், அப்படிப்பட்ட தீனி சரியாய் ஜீரணமாகாமல் அஜீரணத்தையாவது இரைப்பையையும் குடலையும் பற்றிய வேறுவியாதிகளையாவது உண்டாக்கும்: அல்லது, வியாதியைத் திரும்ப வருவித்துவிடும்.

செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும் வெக்கைநோய் காணக்கூடியவைகள்.

செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும் வெக்கைநோய் காணக்கூடியவைகள்; ஆயினும், அவைகள் மேற்படி வியாதி சம்பந்தத்துக்குள்ளாகும்போது, மாடுகளைப்போல் அவ்வளவு லகுவாக அவ்வியாதி அவைகளுக்கு வருவதில்லை; என்றாலும், அவைகளுக்கே அவ்வியாதி வராதபோதிலும், அவைகள் ஒரு மாட்டுமந்தையிலிருந்து வேறொரு மாட்டுமந்தைக்கு அவ்வியாதியைக் கொண்டுபோய்ப் பரவச்செய்யக்கூடியவைகளென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

செம்மறியாடு வெள்ளாடுகளுக்குச் சிகிச்சை.

அம்மை குத்துவதனால் மாடுகளை வெக்கைநோய் வராமல் காப்பதுபோலவே, செம்மறியாடு வெள்ளாடுகளையும் காக்கக்கூடும். மேலேகூறிய சிகிச்சை இவைகளுக்கும் உதவும்; ஆனால், மாட்டுக்குக் கொடுக்கும் மருந்தின் அளவில் சுமார் ஆறில் ஒருபங்குதான் கொடுக்கவேண்டும்.

பிரேதக்குறிகள்.

பிரேதக் குறிகள்.—இந்தக்குறிகள் இறந்த பிராணி எவ்வளவு காலம் வியாதியாயிருந்ததென்பதையும், வியாதி தீவிரமாயிருந்ததா சாந்தமாயிருந்ததா என்பதையும் பொறுத்திருக்கும். வியாதி தீவிரமாகக்கண்டு சீக்கிரத்தில் இறந்த பிராணிகளுடைய வாய் - தொண்டை - தொனிக்குழல் (Larynx) இவைகளின் உள்தோல் இரத்தஞ்சுரந்து வீங்கியிருக்கும்.

---

* லூஸெர்ன் கிடைக்காத இடங்களில் அதுபோல அகத்திக்கீரையைக் கொடுக்கலாம்.

காலாம் இரைப்பையின் உள்தோலில் அதிகமாக இரத்தஞ் சுரந்திருக்கும்; அந்தத்தோல் கருஞ்சிவப்பாயிருக்கும், சில இடங்களில் வெளும் கறுப்பாகவுமிருக்கும்.

குடல் முழுவதிலும் இரத்தஞ் சுரந்து கறுத்தநிறமுள்ள பாகங்கள் காணப்படும்; (குடலின்) உட்பக்கத்துத் தோலின்மேல் இரத்தத்தோடுசேர்ந்த பிசுபிசுப்பான திரவமொன்று மூடியிருக்கும். வியாதி நீடித்திருந்த பிராணிகளுக்கும் வாயில் புண்கள் இருந்த பிராணிகளுக்கும் (மேற்கூறிய) நோய்க்குறிகள் மிகத்தெளிவாயிருக்கும்.

(வாய்முதலாக அபானம் வரையிலுமுள்ள) இரைக்குழல் முழுவதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவே காணப்படும்.

ஈறு - வாயின் உள்ளேயுள்ள மற்றப்பாகங்கள் - தொண்டை - இவ்விடங்கள் தோலுரிந்து புண்ணுள்ளவைகளாகக் காணப்படும்.

தொனிக்குழலும் குரல்வளையின் முன்பாகமும் அனேக பிராணிகளுக்கு இரத்தச்சுரப்புள்ளவைகளாயும சில பிராணிகளுக்குப் புண்ணுள்ளவைகளாயுமிருக்கும்.

நுரையீரல் என்ற சுவாசாசயம் (Lungs) சாதாரணமாக இரத்தச்சுரப்பும் காற்று உள்ளடங்கிய வீக்கமுமுள்ளதாயிருக்கும். இரத்தாசயத்தின் (Heart) உட்பக்கத்துத்தோலிலே சில சமயங்களில் இரத்தம் சுரந்திருக்கும்; இரத்தம் பிதுங்கிவருவதும் சாதாரணமாய்க் காணப்படும். இந்த வியாதியின் முக்கியமான குறிகள் நான்காம் இரைப்பையிலும் குடலிலுமே காணப்படும். நான்காம் இரைப்பையின் உட்பக்கத்துத்தோல் மிகுந்த இரத்தச்சுரப்பினால் கருஞ்சிவப்பும் ஊரீயவருணமுமுடையதாய்க் கருநீலக் கீற்றுகளும் சாம்பல் வருணமுள்ள கீற்றுகளும் அமையப்பெற்றிருப்பதோடுகூட, இரத்தம் பிதுங்கிவரும் அனேக இடங்களுள்ளதாகவுமிருக்கிறது.

இரைப்பைப் பின்வாயிலும் (Pyloric orifice) அதன் மடிப்புகளிலும் புண்கள் சாதாரணமாய்க் காணப்படும். சில சமயங்களில் அழற்சியினால் உண்டாகிய கசிவு - சவ்வைப்போல இறுகிப்படிந்து உரித்தெடுக்கக்கூடியதாயிருக்கிறது. சிறுகுடலின் முதற்பாகம் சாதாரணமாய் நான்காம் இரைப்பை இருக்கிறமாதிரியாகவே இருக்கும். மேற்படி குடலின் மற்றப்பாகங்களில் இரத்தச்சுரப்புள்ள இடங்கள் காணப்படும்; "பேயர் படலங்கள்" (Peyer's Patches) என்ற தசிரகோளங்கள் (Glands) வீங்கியும் உயர்ந்தும் அனேகமாகக் கசிவுகளால் மூடப்பட்டும் இருக்கும். பெருங்குடல் அதிகமாகவேனும் குறைவாகவேனும் இரத்தச்சுரப்புடையதாயிருக்கும்; (அதில்) இரத்தப்பிதுக்கமும் காணப்படும். மலக்குடலிலுள்ள இரத்தச்சுரப்பு (நான்காம் இரைப்பை - சிறுகுடல் இவைகளிலுள்ள இரத்தச்சுரப்பைக் காட்டிலும்) அதிகப்பிரகாசமான சிவப்பு வருணமுடையதாயும், சாதாரணமாக நீண்ட கீற்றுகளாயுமிருக்கும்.

பித்தாசயம் (Liver) சாதாரணமாக முறியக்கூடியதாயும் சிற்சில சமயங்களில் இரத்தச்சுரப்புள்ளதாயுமிருக்கும். பித்தப்பையின் உட்பக்கத்துத்தோல் வெகுசாய்ப் புண்களுள்ளதாயும் கசிவுகள் உறைந்துண்டாகிய புள்ளிகளுள்ளதாயுமிருக்கும்.

# 3-ம் அத்தியாயம்.

## கால்நோய் வாய்நோய்.

பெயர்கள்.

* **பெயர்கள்.**—இந்த நோய்க்குக் கோமாரி, கால்கோமாரி, வாய்கோமாரி, கால்நோய் வாய்நோய், காணை, காற்காணை, வாய்க்காணை முதலிய பெயர்கள் வழங்குகின்றன.

இயல்பு.

**இயல்பு.**—இது (பிராணிகளின்) வாய், கால், பால்மடி இவைகளில் கொப்புளங்களோடு காணும் தொத்துகிற ஒருவகை சுரம். இந்த வியாதி சில சமயங்களில் வாய்மட்டிலும் சில சமயங்களில் கால்மட்டிலும் காணுகிறது. இந்த வியாதி சில பிராணிகளுக்கு முதலிலே வாயில் உண்டாகிப் பின்பு காலில் உண்டாகிறது. வேறு சில பிராணிகளுக்கு முதலிலே காலில் உண்டாகிப் பின்பு வாயில் உண்டாகிறது.

இந்த வியாதி-மாடு, செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி, கோழி ஆகிய இவைகளுக்கு வருகிறது; இந்த வியாதி கண்டிருக்கும் பசுக்களின் பாலைக் குடித்ததனால், மனிதரும் இந்த வியாதியினால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த வியாதி இந்தியாவின் எல்லாப்பாகங்களிலும் ஏறக்குறைய எப்போதும் பரவியிருக்கிறது.

ஒருபிராணியின் ஜீவகாலத்தில் பலதரம் இந்தவியாதி அதற்கு உண்டாகலாம்.

காரணம்.

**காரணம்.**—தொத்துவதனால்தான் எப்போதும் இந்த வியாதி வருகிறது; ஆனால், சில சமயங்களில் எங்கிருந்து தொத்திவந்ததென்று கண்டுபிடிப்பது கஷ்டமாயிருக்கிறது. அது சாதாரணமாக மாடுகளினாலேயே ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டுபோகப்படுகிறது; ஆனால், வேறே ஜந்துக்கள் அல்லது மனிதர் மூலமாகவும் ௸ வியாதி பரவலாம். அன்றியும், இந்தவியாதி உள்ள இடத்திலிருந்து வரும் தீனியோடும் ௸ வியாதி தொத்திக்கொண்டுவரக்கூடும்.

இந்த வியாதியின் விஷம் உள்ளேயே விருத்தியடையுங் காலம்.

இந்த வியாதியின் விஷம் உள்ளேயே விருத்தியடையுங்காலம்-இருபத்திநான்கு மணிமுதல் மூன்றல்லது நான்குநாள்வரையிலுமென்றும் சாதாரணமாக முப்பத்தாறுமணி நேரமென்றும் அனுபவத்தினால் தெரியவருகிறது.

குறிகள்.

**குறிகள்.**—நடுக்கம்கண்டு பின்பு காய்ச்சலுண்டாவதும், வாயும் கொம்புகளும் கால்களும் சூடாயிருப்பதும், (வியாதி கண்ட பிராணி) நாக்கினால் உதடுகளை நக்குவதும் வாயில் நீர்சுரப்பதும் தான் முதலில் தோன்றும் குறிகள். பின்பு, வாயிலும் காலிலும் கொப்புளங்கள் தோன்றுகின்

---

* 2-ம் அத்தியாயத்தின் முதற்பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைப் பார்க்க.

றன; பசுக்களுக்குப் பால்மடியிலும் முலைக்காம்புகளிலும் அடி கொப்புளங்கள் தோன்றுகின்றன. இந்தக் கொப்புளங்கள் - கொதிநீர் பட்டுண்டாகும் கொப்புளங்கள்போல இருப்பதோடு, அவரை விரை யவ்வளவு பருத்தவைகளாயிருக்கின்றன. இந்தக் கொப்புளங்கள் சிலசமயங்களில் மூக்குத்துவாரத்தின் உள்தோலில் காணப்படுகின்றன; அவைகள் பதினெட்டுமணிமுதல் இருபத்திநான்குமணி நேரத்தில் உடைகின்றன: அப்படி உடைந்த இடங்களில் சிவந்து புண்ணாயிருக்கிற பொட்டுகள் தோன்றுகின்றன; இந்தப் பொட்டுகள் சீக்கிரம் ஆறிப்போகும்; அல்லது புண்களாகமாறும்.

வாயில் முக்கியமாகப் பாதிக்கப்படுவது நாக்குத்தான்; ஆனால், ஈறும், வாயின்மேற்புறமும், கன்னங்களின் உட்புறமும் சில சமயங்களில் பாதிக்கப்படும்.

காலில் உண்டாகும் கொப்புளங்கள்-காலின்தோல் குளம்போடு சேருகிற இடங்களிலும் குளம்புப் பிளவுகளுக்கு இடையிலும் காணப்படும்.

வாய் மிகவும் புண்ணாயிருப்பதனாலும், காய்ச்சல் இருப்பதனாலும், (வியாதிகண்ட) பிராணி தீனி தின்னுகிறதில்லை; எந்தக்கால் பாதிக்கப்பட்டிருக்கிறதோ, அந்தக்கால் மிகவும் நொண்டும்.

(வியாதிகண்ட) பிராணி எருதாயிருந்து வேலைக்கு விடப்பட்டிருந்தால், வியாதிக்குறிகள் மிகவுங் கொடூரமாகி, கால்கள் வீங்கி, அனேகமாகக் குளம்புகள் கழன்று விழுந்துவிடும்; சிலசமயங்களில் காலில் பிளவைகளும் உண்டாகலாம்.

பால்மடியிலும் முலைக்காம்புகளிலும் கொப்புளங்கள் உண்டானால், இரண்டிலும் வீக்கமும் தொட்டால் நோவும் உண்டாகும்.

இந்த வியாதிகண்ட பசுவின் பாலைக் கன்று குடித்தால் அதற்கும் இந்த வியாதி உண்டாகும்.

கறவைப்பசுக்களுக்கு இந்த வியாதிகண்டால், (அவைகளின் பால்மடியில்) கொப்புளமுள்ள பாகங்களைப் பால்கறக்கிறவன் நெருக்கிப்பிடிப்பதனால், முலைக்காம்புகள் மிகவும் ரணமாகும்; பால்முழுவதும் கறக்கப்படாததனால், பால்மடி சில சமயங்களில் வீங்கி அழற்சியடையும்.

இந்த வியாதிகண்ட பசுவைக் கறந்தபின், கறந்த கையை ஜாக்கிரதையோடு நன்றாகக் கழுவாவிட்டால், அந்தக் கையின்மூலமாக இந்த வியாதி சுகமாயுள்ள பசுக்களின் மடிக்கும் வந்துசேரும்.

**செம்மறியாடுகள்.**

செம்மறியாடுகளுக்கு இந்த வியாதி கண்டால் மேலேகூறிய குறிகளைப்போன்ற குறிகளே காணப்படுகின்றன; ஆனால், சாதாரணமாக அவைகளின் கால்கள்தான் மிக அதிகமாகப் பாதிக்கப்படுகின்றன; இந்த வியாதி கண்ட செம்மறியாடுகள் மெலிந்துபோகின்றன.

பன்றிகளுக்கு இந்த வியாதி வந்தால், அவைகள் கால்நோவினால் துன்பமடைகின்றன; அவைகளின் குளம்பு கழன்றுவிழுவதும் அபூர்வமல்ல; அவைகள் - வேதனைப்படுவதை அனேக சமயங்களில் கீச்சிடுவதனால் தெரிவிக்கின்றன.

*இவ்வியாதிக்கே யுரிய குறிகளுக்கும் வெக்கைநோய்க் குறிகளுக்கும் வித்தியாசம் எடுத்துக்காட்டுவது.*

இந்த வியாதி கண்ட பிராணிகள் - வெக்கைநோய் கண்டவைகளென்று சில சமயங்களில் தப்பாகக் கருதப்படுகின்றன ; ஆனால், இந்தியாவில் காணப்படும் கால்நோய் வாய்நோயின் குறிகளில் கழிச்சல் ஒன்றாக இல்லை ; வெக்கைநோயின் விஷயத்திலோ என்றால், கழிச்சலும் சீதபேதியும் தப்பாமல் உண்டாகின்றன. மேலும், வெக்கைநோயில் கால்கள் பாதிக்கப்படுவதில்லை.

ஒரேகாலத்தில் ஒருபிராணிக்கு வெக்கை-கால்நோய்வாய்நோய் என்ற இரண்டு வியாதிகளும் காணக்கூடுமானாலும், அப்படி நேருவது அபூர்வம்.

*(வியாதியின்) காலம்.*

இந்த வியாதி கண்ட பிராணியைச் சரியாகப் பாதுகாக்கும் பட்சத்திலே, காய்ச்சல் குறிகளெல்லாம் மூன்றல்லது நான்கு நாளில் மாறிப் பத்தல்லது பதினைந்துநாளில் அடி பிராணி விசேஷமாய் மெலிந்துபோகாமலே சொஸ்தமடைந்துவிடும் ; ஆனால், (வியாதி கண்ட) பிராணிகள் விஷயத்தில் ஜாக்கிரதையாயிராமல், அவைகளில் எருதுகளாயுள்ளவைகளை வேலைக்கு விட்டிருந்தால், காய்ச்சல் கொடூரமாகிப் பசி குறைந்து, ரணங்கள் காலுக்கும் குளம்புக்கும் இடையே விருத்தியாவதனால் குளம்புகள் கழன்று விழுந்துவிடக் கூடும் ; கால்கள் அதிகமாக வீங்கி, அவைகளில் பிளவைகள் உண்டாகிப் பத்தல்லது பன்னிரண்டுநாளில் மரணம் சம்பவிக்கும்.

ஐரோப்பாவில் மாடுகள் மிகவும் பெரியவைகளாகவும் பளுவானவைகளாகவு மிருக்கின்றன ; ஆகையால், அவைகள் இந்தத் தேசத்துச் சிறுத்த லேசான மாடுகளைக்காட்டிலும் இந்த வியாதியினால் அதிக கஷ்டமடைகின்றன.

இந்த வியாதி - சில பிராணிகளுக்குச் சாந்தமாகவும், சில பிராணிகளுக்குக் கொடூரமாகவும் காணுகிறது.

க்ரேட் ப்ரிடன் தேசத்தில் இந்தவியாதி கொடூரமாகவந்த சமயங்களில் இந்த வியாதி கண்ட பிராணிகளிலே நூற்றுக்கு 50 வரையிலும் இறந்திருக்கின்றன ; இந்தியாவிலோ என்றால், நூற்றுக்கு 2 அல்லது 3 - க்கு அதிகமாய்ச் சாகிறதேயில்லை ; இங்கே, இந்த வியாதி கண்ட பிராணியின் விஷயத்தில் சாதாரணமான ஜாக்கிரதையுடனிருந்தால் அது சாவது அபூர்வம்.

*சிகிச்சை.*

**சிகிச்சை.**—(வியாதிகண்ட) பிராணியை நிழலுள்ள சுத்தமான கொட்டிலில் கட்டிவைக்கவேண்டும் ; அந்தக் கொட்டிலின் தளத்தை வெகுசுத்தமாக வைத்திருக்கவேண்டும் ; அந்தக் கொட்டிலில் நல்ல காற்றோட்ட மிருக்கும்படி செய்யவேண்டும்.

(வியாதிகண்ட பிராணியின்) வாயை முதலில் இளஞ்சூடாயுள்ள வெந்நீரினாலும், பின்பு 18 அல்லது 19-ம் நெ. மருந்துபட்டியிற் குறித்த மருந்துநீரைக்கொண்டும் தினத்துக்கு இரண்டு மூன்றுவேளை கழுவவேண்டும்.

தினத்துக்கு இரண்டுவேளை இளஞ்சூடாயுள்ள வெந்நீரினால் கால்களைக் கழுவி ஒற்றடம் கொடுத்து, எல்லா அழுக்கையும் முக்கியமாகக் குளம்புப் பிளவுகளுக்கு இடையிலுள்ள அழுக்கையும் ஜாக்கிரதையாக நீக்கி, புண்களுக்கு 26 - அல்லது 29-ம் நெ. மருந்துபட்டியிற்குறித்த இரணமருந்தைப் போடவேண்டும்.

பால்மடியையும் முலைக்காம்புகளையும் புண்ணுள்ள மற்றப்பாகங்களையும் சுத்தமாகவைத்து அவைகளுக்கு மேற்குறித்த மருந்தையே அடிக்கடி போடவேண்டும்; ஈக்கள் புண்களில் முட்டையிட்டுப் புழுக்கள் உண்டாவதை ஷை மருந்து தடுக்கும்.

காய்ச்சல் அதிகமாயிருக்கும்போது, 5 - அல்லது 6 ம் நெ. மருந்துபட்டியிற்குறித்த மருந்துபானத்தைத் தினத்துக்கு இரண்டுவேளை கொடுக்கவேண்டும்.

**ஆகாரம்.**

“டூப்”என்னும் புல்லைப்போன்ற மிருதுவான பச்சைப்புல்லையாவது “ஹூஸொர்ன்” என்ற தழையையாவது தான் தீனியாகக் கொடுக்கவேண்டும்; நீர்மயமாயுள்ள அரிசிக்கஞ்சியை வேண்டியமட்டிலே கொடுக்கலாம்: அதில் தினத்துக்கு ஒருவேளை அல்லது இரண்டுவேளை (இரண்டு அல்லது மூன்று அவுன்ஸ், அதாவது) ஐந்து (ரூபாயெடை) முதல் ஏழரை ரூபாயெடைவரையில் வெல்லப்பாகும (ஒரு அவுன்ஸ், அதாவது) இரண்டரை ரூபாயெடை கறியுப்பும் கலந்து கொடுக்கலாம்.

சுதேசிகள் நோய்கண்ட பிராணிகளைக் காற்குழைச்சு (காலின் பின்புறத்தில் குளம்புக்கு மேலே மயிர் திரளாக முளைத்திருக்கும் பாகம்) வரையில் தண்ணீர் அல்லது சேற்றில் அழுந்தும்படி நிறுத்திக் கட்டிவைக்கும் சிகிச்சையானது - ஈக்கள் புண்களில் முட்டையிடாதபடி தடுக்கிறமட்டிலே நல்லதுதான்; ஆனால், இதனால் சில சமயங்களில் மணல் அல்லது சேறானது குளம்புக்கும் (கால்) ரோமத்திற்கும் இடையிலுள்ள வெடிப்புகளுக்குள்ளே நுழைந்து குளம்புகள் கழன்று விழுந்துவிடும்படி செய்கிறது.

**(வியாதி வராமல்) தடுக்கும் வகை.**

இந்தவியாதி தொத்துவதனால் உண்டாவதாகையால், தொத்துவியாதிகளைத் தடுப்பதைப்பற்றிய 1-ம் அத்தியாயத்தில் கூறியிருக்கிற ஏற்பாடுகளை மிகவும் கண்டிப்பாக அனுசரித்து நடத்தவேண்டும்.

## 4-ம் அத்தியாயம்.

### மென்னை அடைப்பான்.

பெயர்கள்.

* பெயர்கள்.—இந்த வியாதிக்குத் தமுட்டி; மென்னை அடைப்பான்; தொண்டை அடைப்பான் முதலிய பலபெயர்கள் வழங்குகின்றன.

இந்த வியாதிக்கும் அடைப்பான்-சப்பைநோய்-என்ற வியாதிகளுக்கும் வித்தியாசம் எல்லார்க்கும் நன்றாய்த் தெரிகிறதில்லை; இதற்குக் காரணம் என்னவென்றால், இம்மூன்று வியாதிகளின் குறிகள் ஒருவாறு ஒத்திருப்பதுதான்.

இயல்பும் காரணமும்.

**இயல்பும் காரணமும்.**—இது-(பிராணிகளின்) இரத்தத்தில் ஒருவகை விஷவஸ்து தோன்றுவதனால் உண்டாகிற மிகுந்த பிராணாபாயமான தொத்துவியாதி. இது முக்கியமாக எருமைமாடுகளுக்கு வருகிறது; ஆயினும், மற்ற மாடுகளும் இந்த வியாதி யடையக்கூடியவைகளே; சில சமயங்களில் பன்றிகளுக்கும் இந்த வியாதி காணுகிறதுண்டு. குதிரைகளும் கழுதைகளும்கூட இந்த வியாதியினால் இறப்பதாகச் சொல்லப்படுகிறது.

இது முக்கியமாக மழைக்காலத்தில் உண்டாகிறது; ஆயினும், மற்றப்பருவங்களிலும் விசேஷமாகக் கிறிஸ்ட்மஸ் காலத்திய மழைக்குப்பின்னும் உண்டாகக்கூடும்.

இது அப்போதைக்கப்போது வெள்ளம் வருகிற பள்ளமான பிரதேசங்களில் அதிகமாகச் சம்பவிக்கிறது.

இது வயதுமுதிர்ந்த பிராணிகளுக்கு வருவதைக்காட்டிலும் சிறுவயதுள்ள பிராணிகளுக்கு அதிகமாக வருகிறது.

சாதாரணமாக இந்தியாவில் காணுகிறபடி இந்த வியாதியின் முக்கியமான சின்னங்கள் என்னவென்றால், தொண்டையில் பெருவீக்கம் தோன்றுவதும், சுவாசம் விடுவதற்குக் கஷ்டப்படுவதும், பெரும்பாலும் சிலமணிநேரத்திற்குள் மரணம் நேரிடுவதுமேயாகும். இந்த வியாதி வேறொருவிதமாகவும் வருவது உண்டு: அதனால் மார்பு பாதிக்கப்பட்டு, சுவாசாசய அழற்சியும் சிலசமயங்களில் குடலழற்சியும் உண்டாகிறது.

இந்த வியாதி மேலேகண்டவிதமாக இந்தியாவில் சாதாரணமாய் வருவதாகத் தோன்றவில்லை.

குறிகள்.

**குறிகள்.**—மிகவும் அதிகமான காய்ச்சலுண்டாகிப் பெரும்பான்மையாகத் தொண்டையில் வரையறையுள்ள வீக்கம் தோன்றும். நாக்கு வீங்கி வாயில் நீர் சுரந்துகொண்டிருக்கும்; விழுங்குவதும் சுவாசிப்பதும் கஷ்டமாயிருக்கும்; மூக்குத்துவாரங்கள்-கண்கள்-இவைகளின்தோல் ஊதாவர்ணமடையும்; வீக்கம் சீக்கிரம் அதிகமாகி, சுவாசம்விடுவதற்கும் விழுங்குவதற்கும் (வியாதி கண்ட) பிராணி (முன்னையைவிட) அதி

* 2-ம் அத்தியாயத்தின் முதற்பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைப் பார்க்க.

கமாகக் கஷ்டப்படும்; சுவாசம் விடும்போது கறகறென்ற ஒருவகைச் சப்தமுண்டாகி அது அனேக கெஜ தூரத்தில் கேட்கக்கூடியதாயிருக்கும்.

மஞ்சள்நிறமும் வழுவழுப்பும் உள்ள நீர் மூக்கிலிருந்து வடியக்காணலாம்; வீக்கம் தொண்டைக்குக் கீழ்நோக்கி மார்புவரையில் பரவி, (வியாதிகண்ட) பிராணி மூச்சுவிடமாட்டாமல் இறக்கும். இந்த வியாதியில் தோன்றும் வீக்கம் கடினமாயும் சூடாயும் நோவுள்ளதாயும் இருக்கிறதையும் அழுத்தப்பட்டபோது சடசடென்று சப்தமுண்டாகாமலிருக்கிறதையும் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். சிலபிராணிகளுக்கு வீக்கம் தொண்டையில் உண்டாகாமல் வேறிடங்களில், அதாவது வயிறு - முகம் - அல்லது ஒரு காலில் உண்டாகலாம். சிலசமயங்களில் மூத்திரம் இரத்தம்போலவும் சாணி குழம்பாயும் இரத்தம் கலந்ததாயும் இருக்கும்.

(வியாதியின்) காலம்.

இவ்வியாதியின் காலம் இரண்டல்லது மூன்றுமணிமுதல் இரண்டல்லது மூன்றுநாள் அளவாக இருக்கிறது. வியாதிகண்டு மூன்றுநாளுக்குமேலே ஜீவித்திருக்கும் பிராணிகள் பெரும்பாலும் சொஸ்தமடைகின்றன.

இந்த வியாதி கண்டதுமுதல் பத்துநாளில் சாதாரணமாய் ஓய்ந்துவிடுகிறது; இந்த வியாதி கண்ட பிராணிகளில் நூற்றுக்கு 80 வீதம் இறந்துவிடுகின்றன; எல்லாம் இறந்துபோவதுமுண்டு.

பிரேதக்குறிகள்.

பிரேதக்குறிகள்.—வீக்கம் சுமாராகக் கடினமாயிருக்கிறது; அழுத்தப்பட்டால் சடசடென்று சப்தமுண்டாவதேயில்லை. அதை அறுத்துப்பார்த்தால் அதில் சாம்பல் வருணங்கலந்த மஞ்சள்நிறமுள்ள கொழுகொழுத்த வஸ்துவொன்றும் அதில் இடையிடையே கரிய இரத்தமுள்ள பாகங்களும் காணப்படுகின்றன. தொண்டை பாதிக்கப்பட்டிருந்தால், நாக்கின் அடிப்பாகம் வீங்கியிருக்கும்; வாயின் பின்பகுதியிலும் நாக்கின்மேலும் ஊதாவருணமுள்ள பாகங்கள் காணப்படுகின்றன.

தொண்டைப்பாகம் முழுவதும மிகவும் வீங்கி நீர்கோத்திருக்கிறது.

தொண்டைப் பக்கத்திலுள்ள தசிரகோளங்கள் வீங்கி இரத்த ஒழுக்குகள் நிறைந்திருக்கின்றன.

குரல்வளையிலும் நுரையீரலிலும் சிவந்த நுரைநீர் அடங்கியிருக்கிறது; நுரையீரல் இரத்தச்சுரப்பு உடையதாயிருக்கிறது. இரத்தாசயம் தளர்ந்தும் அதன் அறைகளில் சரியாய் உறையாத அல்லது நீர்த்தன்மையான இரத்தம் சிறிதளவாக அடங்கியும் இருக்கிறது; தேக முழுவதிலும் உள்ள இரத்தம் அனேகமாக எப்போதும் சுபாவமான நிறமும் திண்மையும் உள்ளதாயிருக்கிறது. மண்ணீரல் (Spleen) சுபாவமான பருமனும் தோற்றமும் உடையதாயிருக்கிறது. நான்காம் இரைப்பையிலும் குடல்களிலும் இரத்தங்கலந்த உணவு முதலியவைகள் காணப்படலாம்; சாதாரணமாய், இரத்தம் ஒழுகியுள்ள பாகங்களும் காணப்படுகின்றன.

வியாதியைப் பரிசோதித்தறிதல்.

**வியாதியைப் பரிசோதித்தறிதல்.**—இந்த வியாதிக்கும் அடைப்பான் அல்லது சப்பைநோய்க்கும் வித்தியாசம் தெரியாமற் போகக்கூடும்; ஆகையால், அந்த வியாதிகளைப்பற்றிய அத்தியாயங்களை வாசிக்கவேண்டும். மென்னையடைப்பானினால் மார்பு பாதிக்கப்பட்டிருந்தால் அது தொத்துகிற சுவாசாசய அழற்சியோ என்று எண்ணக்கூடியதாயிருக்கும்; ஆனால், இரண்டாவது சொன்ன இந்த வியாதி மார்பைமாத்திரம் பாதிப்பதும் நீடித்து இருப்பதுமாகும்; அதைப்பற்றிய பூரணமான விவரத்தை 7-ம் அத்தியாயத்தில் பார்க்கலாம்.

சிகிச்சை.

**சிகிச்சை.**—சாதாரணமாய், இந்த வியாதியின் காலம் கொஞ்சமேயாகையால், வைத்தியம் செய்யவேண்டுமானால் சிறிதும் தாமசமில்லாமல் செய்யவேண்டும். சிகிச்சை செய்வதில் அதிக அனுகூலமில்லையென்று சொல்லலாம்; இந்த வியாதியைத் தடுக்கத்தக்க * அம்மைகுத்தும் முறை சீக்கிரம் ஏற்படுமென்று விரும்பவேண்டியிருக்கிறது.

இந்த வியாதி ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டு, (வியாதி கண்ட) பிராணி அதிக கஷ்டமில்லாமல் விழுங்கும சக்தியுடையதாயிருந்தால், நல்ல பேதிமருந்து கொடுக்கவேண்டும் (1-அல்லது 2-ம் நெ. மருந்துபட்டியைப் பார்க்க).

மாமிசம் அழுகாமல் தடுக்கத்தக்க மருந்துகளை (Antiseptics) உள்ளுக்குக் கொடுக்கலாம்; உதாரணமாக, (இரண்டு க்வார்ட், அதாவது) பட்டினம்படியில் ஒன்றேகாற்படி ஜலத்தில் (ஒரு அவுன்ஸ், அதாவது) கால்வீசம்படி பினைல் (Phenyle) என்ற மருந்தைக் கொடுக்கலாம். சில பிராணிகளுக்கு இந்தச் சிகிச்சையினால் அனுகூலமுண்டாயிருக்கிறது. அங்கங்கே உள்ள வீக்கத்தைச் சொஸ்தப்படுத்துவதற்காகப் பழுக்கக்காய்ச்சிய சூட்டுக்கோலால் வரிவரியாகச் சூடுபோடுவது வழக்கம். அதிக ஆழமாகச் சூடு விழாதபடி ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்; இல்லாவிட்டால் சூடுபோட்ட பாகம் சீக்கொள்ளும். (18-ம் நெ. மருந்துபட்டியிற்கண்ட) மருந்துநீரைக்கொண்டு வாயை அடிக்கடி கழுவவேண்டும்.

அரைமணி நேரத்திற்கொருதரம் இளஞ்சூடாயுள்ள வெந்நீரை அபானத்தின்மூலமாய் உள்ளே செலுத்தலாம். கொஞ்சம் உப்புக் கலந்த நீர்மயமாயுள்ள கஞ்சியை (வியாதிகண்ட) பிராணி குடிக்கும்படி வைக்கலாம்; அதில் (7-ம் நெ. மருந்துபட்டியிற் கண்ட) உற்சாகமருந்து சேர்த்துக் கொடுக்கலாம். பெரும்பாலும் (இந்த வியாதி கண்ட) பிராணிக்கு விழுங்குவது அதிக கஷ்டமாயிருப்பதால், அடைப்பு நேரிடாதிருக்கும்படி மருந்து கொடுப்பதில் வெகு ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்.

சுவாசிக்கமாட்டாமையினால் மரணம் நேரிடக்கூடியதாயிருந்தால், வெடெரினெரி ஸர்ஜன் அதன் குரல்வளையைச் சற்றேறக்குறை

---

* வெக்கைக்கும் அடைப்பானுக்கும் அம்மைகுத்தும் முறை முன்னமே ஏற்பட்டிருப்பதுபோல இந்தநோய்க்கு அம்மைகுத்தும் முறை இப்போது ஏற்பட்டிருக்கிறது.

யத் தொண்டையின் மத்தியில் அறுத்துத்திறந்து அந்தத் திறப்புவழியாகச் சுவாசிக்கும்படி செய்வதுண்டு ; இப்படிச் செய்வதனால் இந்த நோய் கண்ட சில பிராணிகள் மரணத்தினின்றும் தப்புகின்றன.

(வியாதி வராமல்) தடுக்கும் வகை.

ஒருமந்தையில் முதலில் ஒரு கால்நடைக்கு இந்த வியாதி கண்டவுடனே, மற்றத் தொத்துவியாதிகள் உண்டாகும்போது என்னசெய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறதோ அதே முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் (1-ம் அத்தியாயத்தைப் பார்க்க). சில மேய்ச்சல்நிலங்களிலே சில பருவங்களில் இந்த வியாதி உண்டாகிறதாகத் தெரிந்திருக்கிறது ; ஆகையால், அந்தக் காலங்களில் அந்த மேய்ச்சல்நிலங்களிலே கால்நடைகளை மேயவிடக்கூடாது.

# 5-ம் அத்தியாயம்.

## அடைப்பான்.

***பெயர்கள்.**—இந்த வியாதிக்குத் தெரியன், இருட்டுநோவு முதலிய பெயர்கள் வழங்குகின்றன.

**இயல்பு.**—இது-குறித்த ஒரு தொத்துவஸ்து இரத்தத்தில் சேர்ந்து உண்டாகிற வியாதி; திடீரென்று வியாதி காண்பதும் அனேகமாய்ச் சடுதியாக மரணம் நேரிடுவதும் இந்த வியாதிக்குரிய அடையாளங்கள். இது அதிபூர்வகாலமுதல் பிராணிகளுக்கு வருவதாகத் தெரிந்த வியாதிகளுள் ஒன்று; ஏறக்குறைய ஒவ்வொரு தேசத்திலும், எவ்வகைச் சீதோஷ்ணமுள்ள இடங்களிலும், முக்கியமாகத் தாழ்ந்த சதுப்பான பிரதேசங்களிலும் காணுகிறது. ஒரே இடத்தில் வருடந்தோறும் காணுகிறது; ஆனால், அந்த இடத்தில் தண்ணீர் நன்றாய் வடிந்து போகத்தக்க ஏற்பாடு செய்தால் அங்கே அது மறுபடியும் காணுவது அவ்வளவு சுலபமல்ல. இந்த வியாதி எல்லா மிருகங்களுக்கும் சில பட்சிகளுக்கும் மனிதருக்கும் வருகிறது. பெரிய உருவமுள்ள மிருகங்களிலே குதிரைகளுக்கும், மாடுகளுக்கும், செம்மறியாடுகளுக்கும், வெள்ளாடுகளுக்கும், மான்களுக்கும், ஒட்டகங்களுக்குமே இந்த வியாதி வெகுசாய்க் காணுகிறது. நாய்களுக்கும் பன்றிகளுக்கும் இந்த வியாதி வருவது சுலபமல்ல.

**காரணம்.**—குறித்த ஒரு ஜீவவஸ்து தேகத்துக்குள்ளே பிரவேசித்து இரத்தத்தில் அதிசீக்கிரமாக விருத்தியடைவதுதான் இந்த வியாதிக்குக் காரணமாகும். தோலில் ஏதேனும் ஒரு சிறு காயமிருந்தால் அதன் வழியாகவாவது, அல்லது உண்ணும் ஆகாரத்தோடாவது குடிக்கும் ஜலத்தோடாவது அந்த ஜீவவஸ்து உள்ளே பிரவேசிக்கலாம்; உள்வாங்கும் சுவாசத்தோடு கூடவும் பிரவேசிக்கலாம். இந்த † வஸ்துவின் வித்துகளுக்குள்ள வீரியம் நெடுங்காலம் கெட்டுப்போகாமலிருக்கக்கூடியது; (இந்த வியாதி கண்டிறந்த) பிராணிகள் புதைக்கப்பட்ட அல்லது போடப்பட்ட இடங்களோடு சம்பந்தப்பட்ட தண்ணீரினால் அடிக்கடி அந்த வித்துகள் (மற்ற இடங்களுக்குக்) கொண்டுபோகப்படுகின்றன வென்பதில் சந்தேகமில்லை. இந்த வியாதி கண்ட பிராணிகளின் மலம் முதலிய கழிவுகளினால், மனிதர்-பாத்திரங்கள்-தீனி-ஜலம் முதலியவைகள் மூலமாக இந்த வியாதி பரவுகிறது; வியாதி கண்ட பிராணிகளை மற்றவைகள் தொட்டுக்கொள்ளுவதனாலும் சில சமயங்களில் இந்த வியாதி பரவுவதுண்டு.

---

* 2-ம் அத்தியாயத்தின் முதற்பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைப் பார்க்க.

† இவ்வியாதிக்குக் காரணமான வஸ்து தாவரவகையைச் சேர்ந்தது. இதைப் பூதக்கண்ணாடியின் உதவியில்லாமல் பார்க்கமுடியாது.

வியாதியின் விஷம் உள்ளேயே விருத்தியடையும் காலம்.

**வியாதியின் விஷம் உள்ளேயே விருத்தியடையும் காலம்.**—இந்தக் காலம் சாதாரணமாகப் பன்னிரண்டு முதல் நாற்பத்தெட்டுமணி நேரம் வரையிலுமே; ஆயினும், இவ்வியாதி இதற்கு அதிகப்பட்ட காலம் உள்ளேயே விருத்தியடைந்த சந்தர்ப்பங்களையும் பார்த்தவர்கள் எழுதிவைத்திருக்கிறார்கள்.

குறிகள்.

**குறிகள்.**—அடைப்பான் வியாதியின் குறிகளை விவரிக்கையிலே, அதை உள்ளடைப்பான் என்றும், வெளியடைப்பான் என்றும் (இரண்டு வகையாகச்) சொல்லலாம்; அதாவது, வெளிக்குக் குறிகளொன்றும் தோன்றாமலே இந்த வியாதி காணலாம்: அல்லது, தேகத்தில் ஏதாவதொரு பாகத்தில் வீக்கங்காணலாம்.

முதலில் சொன்னபடிக்கிருந்தால், வெளிக்குக் குறியொன்றும் தோன்றாமலே (வியாதிகண்ட) பிராணி திடீரென்று இறந்துவிடக்கூடும். ஆயினும், அடியிற் சொல்லப்படும் குறிகளைக் கவனித்தறியலாம். அவைகளென்னவென்றால்:— அமைதியின்மை, கண்கள் திறுதிறென்று பார்ப்பது, கண்களின் உள்தோல் சிவந்திருப்பது, அதிக காய்ச்சல், நாடித்துடிப்பு விரைவாவது, கவலைப்பட்ட முகத்தோற்றம், சதையில் வலியும் இழுப்பும். சாதாரணமாக மூக்கிலிருந்து நீர்வடியும்; அந்த நீரோடு இரத்தங் கலந்திருக்கலாம். வயிற்றுவலியும் பொருமலும் முக்குதலுடனே காணப்படலாம்; அபானத்தின் உட்புறம் வெளிக்குத் தள்ளப்படலாம்.

வியாதி கண்ட பிராணி இரத்தக்கலப்புள்ள சாணி போடும்; சாதாரணமாக (அதன்) மூத்திரம் மிகவும் கருநிறமுள்ளதாயிருக்கும். ஷெடி பிராணி தடுமாறிக் கீழே விழுந்து மரணம் நேரிடுகிறவரையில் துடித்துக்கொண்டு கிடக்கும்; மரணம் பத்து மணி முதல் இருபத்திநான்குமணி நேரத்தில் சம்பவிக்கும். சில சமயங்களில், பிராணி மிகவும் வசமற்றிருப்பதுபோல் குறிகள் தோன்றுவதோடுகூட, அது வெறிகொண்டதுபோலக் காணப்படும். இந்த நிலைமைக்குப்பின் மயக்கமுண்டாகலாம்.

சில பிராணிகளுக்கு இந்த வியாதியின் குறிகள் கடுமையாகத் தோன்றாமலிருக்கலாம்; அப்படிப்பட்ட பிராணிகள் சிற்சில சமயங்களில் சொஸ்தமடைகின்றன. தோலில் காணப்படுகிற அதாவது வெளிப்படையான அடைப்பான் வந்த பிராணிகளுக்கு, கடினமான வரையறையுள்ள வீக்கம் காணப்படுகிறது: அது நீர்கோத்து மிகவும் நோவுடையதாயிருக்கும். வீக்கங்கள் தேகத்தின் எந்தப் பாகத்திலாவது தோன்றலாம்; ஆனால், அவை சாதாரணமாகத் தொண்டை-கழுத்து-தோள்முனை-அல்லது வயிற்றின்மேல்தான் காணப்படுகின்றன. அவை குளிர்ந்து நோவற்றுப்போகும் இயல்புடையனவைகளாயிருக்கின்றன; மேலும், உணர்ச்சியற்றுப்போனாலும் போகலாம். இவைகளோடுகூட, குளிர்ந்த நோவற்ற வீக்கங்கள் தோலில் எங்கும் காணப்படலாம்.

இந்த வியாதியைத் தெளிவாகக் காட்டுகிற வீக்கமானது சாதாரணமாய்த் தோன்றுகிற இடம் தொண்டைதான்; வியாதிகண்ட பிராணி காய்ச்சல் கண்டு விழுங்குவதற்கும் சுவாசம் விடுவதற்கும் கஷ்டப்பட்டு வருந்தும்.

தோலில் உண்டாகிற அல்லது வெளிப்படையான அடைப்பான் உள்அடைப்பானைப்போல அவ்வளவு பிராணாபாயமான வியாதியல்ல; தொண்டை பாதிக்கப்படாமலிருக்கும் பட்சத்திலே, இவ்வியாதியின் காலம் மூன்று நாள் முதல் ஏழுநாள் வரையிலுமாகும். இவ்வியாதி கண்ட பிராணிகளில் நூற்றுக்கு 80 முதல் 100 வரையில் மரணம் அடைகின்றன; சாதாரணமாக, (ஒரு இடத்தில்) இந்த வியாதி ஆரம்பமானபோது நேரிடும் மரண வீதம் பிறகு நேரிடும் மரண வீதத்துக்கதிகமாக இருக்கிறது.

ஒரு பிராணி அடைப்பான் கண்டு சொஸ்தமடையுமானால், சிறிது காலத்துக்குத்தான் இந்த வியாதி மறுபடியும் வரக்கூடிய அபாயத்தினின்றும் அந்தப்பிராணி விடுபட்டிருக்கும்.

பிரேதக் குறிகள்.

**பிரேதக் குறிகள்.**— திடீரென்றிறந்த பிராணிகளில் கண்ணுக்குத் தெரியக்கூடிய யாதொரு வியாதிக்குறியுமில்லாதிருக்கலாம். ஆயினும், சாதாரணமாகத் தேகம் அதிசீக்கிரத்தில் அழுக ஆரம்பித்துவிடும்; அது வீங்கி உள்ளே இருக்கிற காற்றினால் உப்பும். செத்தபின் உண்டாகிற தேக விறைப்பு உண்டாகாது; ஒரு வேளை உண்டானாலும் அற்பமாயிருக்கும். சதை மிருதுவாயிருக்கும்; இரத்தம் தார்போல இளக்கமாயும் கருநிறமுடையதாயும் ஒருவகையான திண்ணமுடையதாயுமிருக்கும்.

தேகத்திலே (இந்த வியாதியினால்) பாதிக்கப்படும் அவயவங்களில் முக்கியமானது மண்ணீரல்; அது அனேகமாகத் தப்பாமல் (இந்த வியாதியினால்) பாதிக்கப்படுகிறது. அதன் பருமன் அதிகப்பட்டு, கறுத்த தார்போன்ற இரத்தம் மிகுந்திருத்தலினால் விம்மியிருக்கும். அது மிருதுவாயிருப்பதுமன்றி வெடித்திருப்பதும் சாதாரணமேயாகும்.

நுரையீரலில் பெரும்பாலும் இரத்தம் சுரந்திருக்கும்; அது நீர் கோத்து வீங்கியுமிருக்கலாம். பித்தாசயமும் குண்டிக்காய்களும (Kidneys) இதர தசிரகோளங்களும் இரத்தஞ் சுரந்து வீங்கியிருக்கும். குடலிலுள்ளவைகள் (சாணிமுதலியவைகள்) சாதாரணமாக இரத்தங் கலந்தவைகளாகவிருக்கும்; நான்காம் இரைப்பை-சிறுகுடல் இவைகளின் உள்தோல் கருஞ்சிவப்பு வருணமாயும், வியாதி கடுமையாகக் கண்டிருந்தால், ரணமுள்ளதாயுமிருக்கும். சில பிராணிகளின் குடல்கள் சுபாவமான தோற்றமுடையவைகளாயிருக்கலாம்; ஆனால், அப்படி இருப்பது சாதாரணமல்ல.

வியாதியைப் பரிசோதித்தறிவது.

**வியாதியைப் பரிசோதித்தறிவது.**— தேர்ந்த மிருக வைத்தியர்கள் இரத்தத்தைப் பரிசோதித்துப்பார்த்து இந்த வியாதியைத் திட்டமாக நிச்சயித்துச் சுலபமாய்ச் சொல்லக்கூடும். சில சமயங்களில்,

மரணத்தின் காரணத்தைக் கண்டறிவதற்கு இதைத்தவிர வேறு உபாயமில்லை. உள்ளடைப்பானால் இறந்த பிராணி ஜன்னியினாலாவது இடிவிழுந்ததனாலாவது இறந்ததென்றும், ஏதோ சில சந்தர்ப்பங்களில் வெக்கையினாலிறந்ததென்றும் தப்பாக எண்ண இடமுண்டு. பிராணி உயிரோடிருக்கும்போது, வெக்கைநோய்க்குரிய குறிச்சலினால் அந்த வியாதியை நிச்சயித்தறியலாம்; அடைப்பான் கண்டிறந்த பிராணியின் பிரேதத்தைப் பரிசோதித்துப்பார்த்தால், இரத்தம்-மண்ணீரல்-இவைகளின் நிலைமையானது அடைப்பானுக்கேயுரிய ஒரு விதமாக இருக்கும். வெளி அடைப்பானை மென்னை யடைப்பானென்றாவது சப்பை நோயென்றாவது தப்பாக எண்ணுவதற்கிடமுண்டு.

வெளி அடைப்பானா மென்னை அடைப்பானாவென்ற சந்தேகமுண்டானால் பிரேதத்தைச் சோதனைசெய்து பாராமல் வேறேவிதமான பரிசோதனையினால் அந்தச் சந்தேகத்தை நிவர்த்திசெய்வது கஷ்டம். சப்பை நோயைப்பற்றிய அத்தியாயத்தைப் பார்த்தால், அந்த வியாதியில் காணப்படும் வீக்கத்தின் தன்மையானது அந்த வியாதிக்கேயுரிய குறியென்று தெரியவரும்.

சிகிச்சை.

சிகிச்சை.— மருந்து கொடுப்பதில் சாதாரணமாய்ப் பிரயோசனமில்லை; ஆயினும், மாமிசமழுகாமல் தடுக்கக்கூடிய மருந்துகளும் உற்சாகமருந்துகளும் உள்ளுக்குக் கொடுக்கலாம். மாடுகளுக்கானால், (ஒரு ப்யின்ட், அதாவது) பட்டிணம் படியில் காலே வீசம்படி *ஆழிவிரை எண்ணெயில் (ஒரு அவுன்ஸ், அதாவது) கால்வீசம் படி டர்ப்பென்டைன் (கர்ப்பூரத்தைலம்) கலந்து கொடுக்கலாம்; அல்லது, (இரண்டு க்வார்ட், அதாவது) ஒன்றேகாற்படி ஜலத்தில் (ஒரு அவுன்ஸ், அதாவது) கால்வீசம்படி பினைல் என்ற மருந்தைக் கலந்துகொடுக்கலாம். செம்மறியாடுகளுக்கும் வெள்ளாடுகளுக்குமானால், இந்த அளவில் ஆறில் ஒரு பங்கு கொடுக்கலாம்.

வெளி அடைப்பானில் காணப்படும் வீக்கங்களைக் காய்ச்சின இரும்பினால் சுடலாம்.

(வியாதி வாராமல்) தடுக்கும் வகை.

(வியாதி வாமல் தடுக்கும் வகை.—பிராணிகளுக்கு இந்த வியாதி வாராமல் தடுப்பதற்காக அம்மைகுத்துவிப்பது பிரயாசமல்ல; இந்த வியாதி ஆரம்பித்தவுடனே † (பிராணிகளுக்குத்) தவறாமல் அம்மை குத்துவிக்கவேண்டும்: ‡ அடைப்பான் கண்டிறந்த பிராணி

---

* ஆழிவிரையெண்ணெய் கிடைக்காதஇடங்களில் அதற்குப் பர்த்தியாக ஆமணக்கெண்ணெயை உபயோகிக்கலாம்.

† கவர்ன்மென்டாரால் நியமிக்கப்பட்டிருக்கிற வெடெரினெரி அஸிஸ்டன்டுகள் என்ற உத்தியோகஸ்தர்களை நேரிலாவது தாசீல்தாரர் மூலமாகவாவது கேட்டுக்கொண்டால் அவர்கள் பிராணிகளுக்கு அம்மைகுத்துவார்கள்.

‡ குறிப்பு.—இந்த வியாதியினால் இறந்த பிராணியின் தேகத்தைச் சோதித்துப்பார்ப்பது அத்தியாவசியமாயிருந்தாலொழிய, அப்படி செய்வது யுக்தமல்ல. அப்படி செய்வதாயிருந்தால், மிருகவைத்தியர் ஒருவர் மேற்பார்வையின் கீழே செய்யவேண்டும். சோதிக்கிறவர் மிகுந்த ஜாக்கிரதையாயிராமற்போனால் இந்த வியாதியடையக்கூடியவராவார்; (சேதிக்கப்பட்ட) பாகங்களை ஒருவகைசெய்வதிலும் தொத்துவியாதி சம்பந்தம் நீக்குவதிலும் அத்தியந்த ஜாக்கிரதையாயிருப்பது அவசியம்.

களின் பிரேதமானது இந்த வியாதி பரவுவதற்கு விசேஷமாக ஹேதுவா யிருப்பதால், அதை மிகவும் ஜாக்கிரதையாக ஒருவகை செய்யவேண்டும். அதைக் கொளுத்திவிடாத பட்சத்திலே, தரை மட்டத்திலிருந்து ஆறடி ஆழத்தில் புதைத்து நீற்றாத சுண்ணாம்பினால் மூடவேண்டும்.

அதை (ஆறு - குளம் - வாய்க்கால் - கிணறு முதலிய) ஜலாதாரங்களுக்குச் சமீபத்தில் புதைக்கக்கூடாது; அதைப் புதைப்பதற்கான குழிகளை (உபயோகத்தில் இல்லாத) தரிசுநிலங்களில் தோண்டவேண்டும்.

பிணத்தை அப்புறப்படுத்தும்போது வாய் முதலிய தேகத்துவாரங்களைக் களிமண்ணினால் அடைக்கவேண்டும்; எந்த முகாந்தரத்தைக்கொண்டும் பிணத்தை வெட்டவாவது பிணத்தின் எந்த பாகத்தையாகிலும் பிரித்தெடுக்கவாவது கூடாது.

(இந்த) வியாதி கண்ட பிராணிகளை நிறுத்தியிருந்த இடங்களிலிருந்து வெகு ஜாக்கிரதையோடு தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்கவேண்டும்; 1-ம் அத்தியாயத்தில் குறித்த விதிகளைக் கண்டிப்பாக அனுசரிக்கவேண்டும்.

இந்த வியாதி மனிதருக்கு வருகிறதென்பதையும் பெரும்பாலும் மரணம் விளைவிக்கிறதென்பதையும் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

# 6-ம் அத்தியாயம்.

## சப்பைநோய்.

பெயர்கள்.

* **பெயர்கள்.**—இந்த வியாதிக்குச் சந்தடைப்பான், படைநோய் முதலிய பல பெயர்கள் வழங்குகின்றன.

இயல்பு.

**இயல்பு.**—இது-குறித்த ஒரு (விஷவஸ்து காரணமாக உண்டாகிற) தொத்துவியாதி; தேகத்தின் (முழுவதிலும் வியாபியாமல்) சில பாகங்களில் தோன்றுகிற காற்று உள்ளடங்கிய வீக்கங்கள் இந்த வியாதிக்குரிய முக்கியமான குறிகளாகும்: இந்த வீக்கங்கள், கழுத்து - தோள் - முதுகு - இடுப்பு அல்லது தொடையில் உண்டாகும். இந்த வியாதி பெரும்பாலும் மூன்று மாதமுதல் நாலுவயது வரையிலுள்ள இளம்பிராணிகளுக்குக் காணுகிறது; ஆயினும், மற்றப் பிராணிகளும் இந்த வியாதிக்குள்ளாகக் கூடியவைகளே. இவ்வியாதி மெலிந்த பிராணிகளுக்கு வருவதைக்காட்டிலும் நல்ல நிலைமையிலுள்ள பிராணிகளுக்கு விசேஷமாக வருகிறதென்று சொல்லப்படுகிறது. இது - மாடுகள் செம்மறியாடுகள் வெள்ளாடுகள் இவைகளுக்கெல்லாம் காணக்கூடிய வியாதியானாலும், அதிசாதாரணமாக மாடுகளுக்கே வருகிறது. சில சமயங்களில் இந்த வியாதி குதிரைகளுக்கு வருகிறதென்றும் மற்ற வீட்டுப்பிராணிகளும் மனிதரும் இயல்பாக இந்த வியாதிக்கு உள்ளாகிறதில்லையென்றும் சொல்லப்படுகிறது. சில மேய்ச்சல்நிலங்களிலே இந்த வியாதி சாதாரணமாகத் தொத்துகிறது; இது ஒரே இடத்தில் ஒரே பருவத்தில் தவறாமல் மிக ஒழுங்காக உண்டாகிறது. முக்கியமாகச் சேற்று நிலங்களில் இது உண்டாகிறது. ஒருதரம் இந்த வியாதி கண்ட பிராணிக்கு மறுபடி அதன் ஜீவகாலமுழுவதும் இந்த வியாதி வருகிறதில்லை.

காரணம்.

**காரணம்.**—இந்த வியாதியை உண்டாக்குகிற ஒரு ஜீவவஸ்து தோலின்வழியாக இணைசவ்வில் (Connective tissue) பிரவேசிப்பதனாலேதான் எப்போதும் இந்த வியாதி உண்டாகிறது. (ஷெ வஸ்து) வெகுசாய் வாயில் அல்லது காலிலுள்ள யாதொரு சிறு காயத்தின் மூலமாகத்தான் பிரவேசிக்கிறது. ஷெ வஸ்து சவ்வைப்பற்றியிருந்து சதையைத் தாக்குகிறது. அடைப்பான் வியாதியை உண்டாக்கும் ஜீவவஸ்துவின் வழக்கத்துக்கு மாறாக, இந்த ஜீவவஸ்து விசேஷமாய்த் தொகுதியாக இரத்தத்தில் பிரவேசிக்கிறதில்லை.

வியாதியின் விஷம் உள்ளேயே விருத்தியடையும் காலம்.

**வியாதியின் விஷம் உள்ளேயே விருத்தியடையும் காலம்.**—இந்த வியாதியின் விஷம் வெளிக்குத் தெரியும்வரையில் உள்ளேயே விருத்தியடையும் காலம் சராசரி இரண்டு நாளாகும்.

---

* 2-ம் அத்தியாயத்தின் முதற்பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைப் பார்க்க.

குறிகள்.—சப்பைநோயின் காலம் வெகு கொஞ்சமேயாகையால், சாதாரணமாக ஒருநாள் முதல் மூன்றுநாளுக்குள் மரணம் உண்டாகிறது. இதன் குறிகளை (தேகத்திலே) சிற்சில இடங்களில்மாத்திரம் தோன்றும் குறிகளென்றும் (தேகம்) முழுவதும் தோன்றும் குறிகளென்றும் பகுக்கலாம். சிற்சில இடங்களில்மாத்திரம் தோன்றும் குறிகளுள் முதலில் தோன்றுவதென்னவென்றால், (வியாதிகண்ட) பிராணி நொண்டுவதே யாகும்; அதற்குப் பின், ஒரு வீக்கம் அல்லது பல வீக்கங்கள் காணப்படும். இந்த வீக்கங்கள் முக்கியமாகத் தொடைகளின் மேற்பாகங்களிலும் கழுத்திலும் தோள்களிலும் மார்பின் அடிப்பக்கத்திலும் இடுப்பிலும் முதுகிலும் தோன்றும். அவைகள் சில சமயங்களில் வாயிலாவது தொண்டையிலாவது உண்டாகும். சில சமயங்களில் ஒரே வீக்கமும் சில சமயங்களில் பல வீக்கங்களும் இருக்கும்; பல வீக்கங்களாயுள்ளவை ஒன்றாகச் சேருகிறதும் உண்டு. வீக்கம் முதலில் வெகு சிறிதாயும் நோவுடையதாயும் இருக்கும்; ஆனால், அது சீக்கிரம் பெரியதாகி, எட்டுமணிநேரத்தில் அபாரமாகப் பெருத்துவிடலாம். இப்படியானபோது அந்த வீக்கத்தைச் சோதித்துப் பார்க்கும் பட்சத்திலே, அது காற்று உள்ளே அடைபட்டு விம்மியிருந்தாலெப்படியோ அப்படியே விரலினாலழுத்தினால் சடசடென்று சப்தமுண்டாவதாகக் காணப்படும். இப்போது அந்த வீக்கம் வேதனையற்றுக் குளிர்ந்துபோயிருக்கும்: முக்கியமாக அதன் மத்தியபாகம் அப்படியாகும். அது மிகவும் கறுத்தநிறமுள்ளதாயிருக்கும்; மேலும், அது உணர்ச்சி யற்றுப்போய்க்கொண்டிருப்பதுபோலக் குறிகள் காணப்படலாம். அதைக் கத்தியினால் அறுத்தால் மிகுந்த காற்றும், புளித்தநாற்றமும் கறுத்தநிறமுமுள்ள ஒரு திரவமும் வெளிப்படுகின்றன. சில விசேஷ சந்தர்ப்பங்களில் வீக்கம் ஒன்றும் வெளிக்குத் தெரியாமலிருக்கலாம்; ஏனென்றால், வீக்கம் ஆழமான இடத்தில் இருக்கக்கூடும்: அப்படியிருக்கும்போது வியாதியைப் பரிசோதித்தறிவது கஷ்டமாயிருக்கும். (தேகம்) முழுவதும் தோன்றும் குறிகளில் முக்கியமானவைகளென்னவென்றால்:—பிராணி உற்சாகமற்று மந்தையிலுள்ள மற்ற கால்நடைகளைவிட்டுப் பிரிந்து தனியே நிற்கும், நடுங்கும்; மிகவும் உஷ்ணமுடையதாயிருக்கும்; சுவாசம் அதிகப்படும். வீக்கம் பருக்கப்பருக்க, (தேகம்) முழுவதும் தோன்றும் குறிகள் கொடூரமாகும்; (வியாதிகண்ட) பிராணி திணறும்; வயிற்றுவலி உண்டாகும். சுவாசம் விடுவது கஷ்டமாகும்; வீக்கமுள்ள இடங்கள்தவிர மற்ற இடங்களில் தோல் சூடாயிருக்கும்; பலவீனம் அதிகப்பட்டு (வியாதியாயுள்ள) பிராணி கீழே விழுந்து வலியு மிழுப்பு முண்டாகி மரணமடையும். சில பிராணிகளுக்கு முதலில் (தேகம்) முழுவதும் தோன்றும் (காய்ச்சல் நடுக்கம முதலிய) குறிகள் காணுகின்றன; வேறு சில பிராணிகளுக்கு முதலில் வீக்கம் காணுகிறது.

இந்த வியாதி கண்ட பிராணிகளில் சில பிராணிகள் சொஸ்தமடைகின்றன; அப்படி சொஸ்தமடைவதாயிருந்தால், சுமார் ஆறு நாளில் பூரணமாய்ச் சொஸ்தமடைந்துவிடுகின்றன. இந்த வியாதி

கண்ட பிராணிகளிலே நூற்றுக்கு 90 முதல் 100 வரையில் மரணமடைகின்றன.

பிரேதக் குறிகள்.

**பிரேதக் குறிகள்.**—இந்த வியாதிக்கேயுரிய வீக்கத்தின் தோற்றத்தைப்பற்றி முன்னமே சொல்லியிருக்கிறது. ஒரு வீக்கத்தை அறுத்தால், அதற்குக் கீழேயுள்ள சதை அழுக்குப்படிந்த கபிலநிறமுள்ளதாயிருக்கும்; அல்லது கறுத்துமிருக்கக்கூடும். கெடி சதை மிகவும் அழுகி ஈரமுள்ளதாகத் தோன்றும்; அதை இறுகப்பிடித்தால், ஒருவகை அருவருப்பான துர்க்கந்தம் வீசும்; இந்தத் துர்க்கந்தம் - அழுகிப்போன வெண்ணெயின் நாற்றத்துக்கொப்பிடப்பட்டிருக்கிறது. வீக்கத்தின் பக்கத்திலுள்ள தசிரகோளங்கள் பருத்து இரத்தம் நிறைந்திருக்கும். தேகத்திற்குள்ளேயிருக்கும் அவயவங்களில் குறிக்கத்தக்க விசேஷ தோற்றமொன்றும் காணப்படுவதில்லை. எல்லா அவயவங்களிலும் இரத்தவொழுக்குகள் அனேக சந்தர்ப்பங்களில் காணப்படுகின்றன; சில சமயங்களிலே, குடல்களில் உள்ளவைகள் (சாணிமுதலியவைகள்) இரத்தங் கலந்திருக்கின்றன. மண்ணீரலும் இரத்தமும் சுபாவகுணமுடையவைகளாயிருப்பது கவனிக்கத்தக்கது.

வியாதியைப்பரிசோதித்தறிவது.

**வியாதியைப் பரிசோதித்தறிவது.**—‡இந்த வியாதியை மென்னை அடைப்பான் என்றும் அடைப்பானென்றும் தப்பாக எண்ண இடமுண்டு; ஆனால், இந்த வியாதியில் தோன்றும் வீக்கம் இதற்கேயுரியதாகும்; அதாவது, குளிர்ந்து நோயற்றுக் காற்றடங்கி உப்பியிருக்குந் தன்மையுடையதாகும். பிரேதத்தைச் சோதித்துப் பார்த்தால் மண்ணீரலும் இரத்தமும் சுபாவ குணமுடையவைகளாயிருப்பது தெரியும்;‡ அடைப்பான் வியாதியிலோவென்றால், இதற்குமுந்திய அத்தியாயத்தில் விவரித்திருக்கிறபடி, மண்ணீரலும் இரத்தமும் அந்த வியாதிக்கேயுரிய தன்மையுடையவைகளாயிருக்கின்றன. மிருகவைத்தியர்கள் (வியாதிகளுக்குக் காரணமாயுள்ள) ஜீவவஸ்துக்களைச் சோதிக்கும் வழிகளால் இந்த (இரண்டு) வியாதிகளுக்குமுள்ள வித்தியாசத்தைச் சுலபமாகக் காட்டக்கூடும்.

சிகிச்சை.

**சிகிச்சை.**—இந்த வியாதியின் காலம் கொஞ்சமேயாகையால், வைத்தியஞ் செய்வதற்கே பெரும்பாலும் இடமில்லாமற்போகிறது; அப்படிச் செய்தாலும், அனேகமாக அனுகூலமுண்டாகிறதில்லை. வீக்கங்களுக்குச் சூடுபோடலாம்; அதைக்காட்டிலும், கத்தியினால் அறுத்து, மாமிசமழுகாமல் தடுக்கத்தக்க மருந்துகளில் காரமான மருந்துகளை அறுத்த புண்ணுக்குப் போடுவது நல்லது. மாமிசமழுகாமல் தடுக்கத்தக்க மருந்துகளையும் உற்சாக மருந்துகளையும் அடைப்பான் வியாதியில் கொடுக்கலாமென்று சொல்லியபடி, இந்த வியாதியிலும் உள்ளுக்குக் கொடுக்கலாம்.

வீக்கம் காலில் கண்டால், அந்த வீக்கத்துக்குமேலுள்ள பாகத்தை இறுகக்கட்டி வீக்கத்தை அறுத்து மாமிச மழுகாமல் தடுக்கத்தக்க மருந்துகளை அறுத்த புண்ணுக்குப் போடுவது நல்லது.

**(வியாதி வராமல்) தடுக்கும் வகை.**—(இந்த நோய் வராமல்) தடுப்பதற்காக அம்மைகுத்தும் முறையை ஐரோப்பாக்கண்டத்தில் உள்ளவர்கள் விஸ்தாரமாக அநுசரிப்பதனால் அநுகூல முண்டாகிறது. இரண்டுதரம் அம்மைகுத்துவது அவசியமாயிருக்கிறது; சாதாரணமாய் வாலின் நுனியிலே இவ்வாறு அம்மைகுத்தப்படுகிறது.

(வியாதி வராமல்) தடுக்கும் வகை.

இந்த வியாதி எந்த மேய்ச்சல்நிலங்களில் உண்டாகிறதாகத் தெரியவந்திருக்கிறதோ அந்த மேய்ச்சல்நிலங்களுக்கு மாடுகளை அனுப்பக்கூடாது.

1-ம் அத்தியாயத்தில் சொல்லியிருக்கிற விதிகளைப்பார்த்து அநுஷ்டிக்கவேண்டும்; (இந்த வியாதியினால்) இறந்த பிராணிகளை மிகுந்த ஜாக்கிரதையுடன் ஒருவகைசெய்யவேண்டும்.

## 7-ம் அத்தியாயம்.

### தொத்துகிற சுவாசாசய அழற்சி.

**பெயர்கள்.**

* பெயர்கள்.—இந்த வியாதிக்குப் பஞ்சாப், சிந்து என்னும் மாகாணங்களில் "பிப்ரீ" என்றும், பம்பாயில் "பாட்ஷா" "ஜாலூல்ஜன்ட்" என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

**இயல்பு.**

இயல்பு.—இது நுரையீரலையும் மார்பின் உள்சவ்வையும் பற்றிய நோய். இது தொத்துவியாதி; மாடுகளுக்குமாத்திரம் வருவது; எல்லாஜாதி மாடுகளுக்கும் அவைகளில் எல்லா வயதுள்ளவைகளுக்கும் வருவது; அன்றியும், எல்லாவகை நிலங்களிலும் எல்லாவகைச் சீதோஷ்ணமுள்ள இடங்களிலும் காணுவது. இது அடிக்கடி பெருவாரி வியாதியாய்ப் பல இடங்களிலும் பரவுகிறது; இது வெளிக்குச் சிறிதேனும் குறிகள் தோற்றுவிக்காமல் பிராணிகளைத் தாக்குகிறது; இந்த வியாதியின் காலம் சில சமயங்களில் கொஞ்சமாகவும் சில சமயங்களில் அதிகமாகவும் இருக்கிறது; ஒருமாதமுதல் நாலுமாதம் வரையிலாவது அதற்கு அதிகமாகவாவது நீடித்திருக்கிறது. அது சாதாரணமாய் ஒரு மந்தையிலுள்ள ஒவ்வொரு மாட்டுக்கும் வருகிற வழக்கம் இல்லை; இதற்கு மாறாக, ஒரு ஒழுங்குமில்லாமல் சில மாடுகளைத் தாக்கியும் சில மாடுகளைத் தாக்காமலும் பரவுகிறது.

**காரணம்.**

காரணம்.—சுகமாயுள்ள மந்தைகளோடு (இந்த) வியாதி கண்ட மாடுகள் சம்பந்தப்படுவதனாலேயே அனேகமாய் எப்போதும் இந்த வியாதி அந்த மந்தைகளுக்குத் தொத்திப் பரவுகிறதென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

**வியாதியின் விஷம் உள்ளேயே விருத்தியடையுங் காலம்.**

வெளிக்குச் சிறிதேனும் குறிகள் தோன்றாமல் உண்டாகிற இந்த வியாதியின் விஷம் உள்ளேயே விருத்தியடையுங் காலமானது பத்துநாள்முதல் மூன்றுமாதம் அல்லது அதற்கு அதிகமான காலமாயிருக்கிறது.

**குறிகள்.**

குறிகள்.—தேர்ந்த மிருகவைத்தியர்கள் வியாதிகண்ட பிராணியின் மார்புக்கூட்டை நுட்பமாகச் சோதிப்பதனாலும் மற்றக்குறிகளினாலும் இவ்வியாதியைப் பகுத்தறிந்துகொள்வார்கள்; ஆயினும், கால்நடைக்குடையவர்கள் தெரிந்துகொள்ளவேண்டிய குறிகள் மாத்திரம் இங்கே விவரித்துக் கூறப்படும்.

(மாட்டைப் பார்த்துக்கொள்ளுகிற) ஆள்களுக்கு மாடு நடுங்குவது தெரியலாம்; நாடி முன்னிருந்ததைவிட அதிக விரைவாய் அடித்துக்கொண்டிருப்பதாகக் காணப்படும்; வாய் சூடாயும் மூஞ்சி வறண்டும் இருக்கும்; ஒருவகையான வறட்டிருமலும் உண்டாகும்; பசி இராது; கறவைப்பசுக்களில் பால் குறையும்.

---

* இந்த வியாதி தென்னிந்தியாவில் வருகிறதில்லை.

ஒரு நாள் அல்லது இரண்டு நாளில் காய்ச்சற்குறிகள் ஆரம்பித்து மயிர் சிலிர்க்கிறது; (வாயின் உள்தோல் மூக்குத்துவாரத்தோல் முதலிய) ஈரத்தோல்கள் மிகவுஞ் சிவந்து, வாய் அதிக சூடாகிச் சுவாசம் துர்நாற்றமுடையதாகும்; இருமல் முன்னிலும் அதிகப்பட்டு வேதனையோடுகூடியதாயிருக்கும். சுவாசிப்பது அதிக கஷ்டமாகவும் துரிதமாகவும் இருக்கும். நாடி அதிக பலமாகவும் அதிக விரைவாகவும் அடித்துக்கொள்ளும்; (ஒரு நிமிஷத்துக்கு) 80 தாம் முதல் 100 தரம் வரையில் அடித்துக்கொள்ளும். ஆனால், சிறிது காலமானபிறகு, நாடி மெதுவாகவும் பலஹீனமாகவும் அடிக்க ஆரம்பிக்கும். கூடியவரையில் சுலபமாய்ச் சுவாசிப்பதற்காக மாடு மூக்கை (உடம்பிலிருந்து தூரமாகத் தள்ளி) நீட்டிக்கொண்டிருக்கும்; ஆனால், ஒவ்வொரு தரமும் மூச்சு வெளியே விடும்போது (தொண்டையிலிருந்து) ஒருவகையான உறுமல்சத்தம் புறப்படும்; மூக்குத்துவாரங்கள் மிகவும் அதிகமாய் விரிந்திருக்கும்; சுவாசம் துரிதமாயிருக்கும்; மாடு நிற்கும்போது இரண்டு முன்முழங்கால்களையும் வெளிப்புறமாகத் திருப்பிக்கொண்டு நிற்கும்; படுக்கும்போது மார்புக்கூடு விரிந்திருக்கும்பொருட்டு மார்பெலும்பின் மத்தியின்மேல் (பாரம் தாங்கும்படியாக) படுக்கும்; மார்பின் ஒரு பக்கம் மாத்திரம் வியாதியால் பாதிக்கப்பட்டிருந்தால், மாடு பெரும்பாலும் அந்தப் பக்கத்தில் சாய்ந்து படுக்கும்; அப்படி படுப்பது எதற்காகவென்றால், வியாதியால் பாதிக்கப்படாமல் சுகமாயிருக்கிற எதிர்ப்பக்கத்திலுள்ள நுரையீரலால் சுவாசிப்பதைப் பலவகையிலும் சௌகரியப்படுத்துவதற்காகத்தான்; சாதாரணமாய்க் கண்ணிலிருந்தும் மூக்கிலிருந்தும் சொற்பமாக நீர் வடிகிறது; காலும் கொம்புகளும் தோலும் சில்லென்று போகின்றன. சுவாசம் மிகவும் துர்க்கந்தமுள்ளதாய்விடும். இப்போது இருமல் அடிக்கடி உண்டாகிறது; ஆனால், இருமல் பலமாயிராது; இதை "வேஷ (பொய்) இருமல்" - எனவே மாடு பலமாய் இருமமாட்டாமல் இருமல் என்று சொல்லியிருக்கிறது; ஆகையால், ஷை இருமலானது - அதிக சத்தம் உண்டாவதைத் தடுக்கும்படி மத்தியில் வேண்டுமென்று இருமலை அடக்கி இருமினால் சப்திப்பதுபோலச் சப்திக்கிறது. தோல் வறண்டு சதையோடு ஒட்டிக்கொண்டாற்போல ஆகிறது; மாடு நாளடைவில் பலம் குன்றி இளைத்துப்போக ஆரம்பிக்கிறது.

விலா எலும்புகளின் மத்தியில் விரலினால் அழுத்தினால், மாட்டுக்கு நோவுண்டாகி அது ஒருவகையான சப்தமிடுகிறது. வியாதியாயிருக்குங் காலத்தின் பிற்பாகத்திலே கழிச்சல் ஆரம்பிக்கிறது. (இந்த வியாதி கண்ட சகல பிராணிகளுக்கும் குறைவாகவாவது அதிகமாகவாவது காய்ச்சல் தவறாமல் காண்கிறது): இந்தக் காய்ச்சல் அடங்கினபிறகு மாட்டுக்குப் பசி திரும்ப உண்டாகிறது; வியாதிக்காலமுழுவதும் மாடு சுமாராகவும் சில சமயங்களில் நன்றாகவுங்கூட தீனி தின்பதாகக் காணப்படுகிறது. ஆனால், வியாதி நீடிக்கிறதற்குத் தக்கபடி நுரையீரல் நெருங்கிச்சுருங்கிக் கனமாகிச் சுவாசிப்பது அதிக கஷ்டமாகிவிடுவதுமல்லாமல், இர்த்தம் சரியாகச் சுத்திகரிக்கப்பட

மலுமிருக்கிறது. அதனால் நாளடைவில் மெலிவுண்டாகிக் கடைசியாக மாடு மூச்சுவிடமாட்டாமல் செத்துப்போகிறது.

அனுகூலமாகக்கூடிய சமயங்களில், நுரையீரலின் ஒரு பாகமாவது ஒரு பக்கத்து நுரையீரல்மட்டுமாவது இந்த வியாதியினால் பாதிக்கப்படுகிறது; அப்படி பாதிக்கப்படுகிற மாடுகள் சொஸ்தமடைவதாகக் காணப்படுகின்றன; ஆயினும், மெலிவாகவே யிருக்கின்றன.

அநேக சமயங்களில் மூச்சுவிடுவது கஷ்டமாய்ப்போய் மரணம் நேரிடும்படியான அளவுக்கு இரண்டு பக்கத்து நுரையீரலும் இந்த வியாதியினால் பாதிக்கப்படுகிறது.

(வியாதியின்) காலம்.

ள்) காலம்.—இந்த வியாதி நீடித்திருக்குங் காலமானது அது மாடுகளுக்குக் காணும் தன்மையைப் பொறுத்ததாயிருக்கிறது; அது கொடூரமாயும் அது கண்டிருக்கும் காலம் குறைவாகவுமிருக்கிறபட்சத்திலே, மரணம் ஒரு வாரம் அல்லது பத்து தினத்தில் சம்பவிக்கிறது; சாந்தமாயும் நீடித்துமிருக்கிறபட்சத்திலே, இரண்டு அல்லது மூன்று அல்லது ஆறு மாதகாலம் வரையிலுங்கூட மரணம் நேரிடாமலிருக்கலாம்.

சிகிச்சை.

சுவாசாசய அழற்சி யென்னும் வியாதி காணுகிற மாடுகளுக்கு வைத்திய சிகிச்சை செய்வதனால் உண்டாகக்கூடிய பிரயோசனம் பெரும்பாலும் வெகு சொற்பமாகத்தானிருக்கும்; மாட்டு இறைச்சி புசிக்கப்படுகிற இடங்களாகிய ஐரோப்பா முதலிய தேசங்களிலே மாடுகளுக்கு இந்த வியாதி கண்டவுடனே அவைகளைக் கொன்றுவிடுவது லாபகரமாயிருப்பதாகக் காணப்படுகிறது; எப்படியென்றால், அந்த மாடுகள் வைத்திய சிகிச்சையிலிருக்கும்போது மெலிந்துபோவதோடுங்கூட வெகுசாய் இறந்துபோகக்கூடியவைகளாயுமிருப்பதனால் அப்படிப்பட்ட நஷ்டத்துக்குட்படுவதைக்காட்டிலும் அவைகளைக் கொன்றுவிடுவதனால் எவ்வளவு பணம் சம்பாதிப்பது சாத்தியமாகுமோ அவ்வளவு பணமும் சம்பாதிப்பதற்குரிய எஷியமிருக்கிறது.

மாடுகளைக் கொல்வது ஹிந்துமதாசாரத்திற்கு விரோதமானது; இந்தியாவில் சுவாசாசய அழற்சியென்னும் வியாதி காணுகிற ஜில்லாக்களிலே, இந்த வியாதி தொத்திக்கொள்ளும் தன்மையுடையதென்று தெரிந்துகொள்ளாமலிருப்பது சுதேசிகளுடைய தௌர்ப்பாக்கியமே; அதனால் வியாதி கண்ட மாட்டை மற்ற மாடுகளினின்றும் பிரித்துப் பிரத்தியேகப்படுத்திவைக்காமலிருக்கிறார்கள்: வியாதியும் மந்தைகளில் பரவுகிறது.

இந்த வியாதியானது சில சமயங்களில் ஒரு ஒழுங்குமில்லாமல் பரவுவதனாலும், அதாவது வியாதி கண்ட மாட்டுக்குப் பக்கத்தில் இருக்கிற அல்லது பக்கத்தில் கட்டப்பட்டுள்ள மாடுகளுக்கு இந்த வியாதி காணாமல் வெகுதூரத்திலுள்ள மாடுகளுக்குக் காணுவதனாலும், இதர தொத்துவியாதிகளைக்காட்டிலும் இந்த வியாதியின் விஷம் உள்ளேயே விருத்தியடையுங் காலமானது அதிக நீடித்ததாயிருப்பத

னாலும், இது மாடுகளுக்குக் காணும்போது வெளிக்குச் சிறிதேனும் குறிகள் தோன்றாமலிருப்பதனாலும், க்ரேட்ப்ரிடனில் இருக்கிற கால்நடைக்காரருக்கு இந்த வியாதி தொத்துவியாதியோ அல்லவோ என்ற சந்தேகம் வெகுகாலமாக இருந்தது; ஆனால், இப்போது இது மெத்தவும் தொத்திக்கொள்ளும் தன்மையுடையதென்று ஐரோப்பாவிலும் ஆஸ்த்ரேலியாவிலும் எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தியாவில் இந்த வியாதி கண்டால், அது வெகுசாய் நீடித்திருந்தபோதிலும், சாதாரணமாக அதனால் மரணம் உண்டாகக்கூடியதாயிருக்கிறது. ஏனென்றால், இந்தத் தேசத்திலே அடி வியாதிகண்ட பிராணியின் தேகத்தில் அந்த வியாதியானது டலமாக வேரூன்றிய பிறகுதான் பெரும்பாலும் கண்டுபிடிக்கப்படுகிறது.

ஒரு மாட்டுக்கு இந்த வியாதி காணும்போது அதை ஜாக்கிரதையாய்த் தொழுவத்தில் கட்டித் தீனி போட்டுவரவேண்டும்; அந்த மாடு சுவாசிப்பதற்குக் காற்று சுத்தமாகவும் விசேஷமாகவும் இருக்கும்படி அந்தத் தொழுவத்தை வெகு சுத்தமாகவும் நல்ல காற்றோட்டமுடையதாகவும் வைத்திருக்கவேண்டும்.

வியாதி கண்ட பிராணிக்குப் பச்சைப்புல்லையும் மலத்தைப் போக்கத்தக்க மற்ற மிருதுவான ஆகாரத்தையும் அரிசிக்கஞ்சியையும் வேண்டிய அளவுக்குச் சுத்த ஜலத்தையும் வைக்கவேண்டும். அதிசீக்கிரமாக வளர்ந்து கொழுத்திருக்கிற புல்லையாவது காய்ந்து வறண்டிருக்கிற புல் அல்லது வைக்கோலையாவது வைக்கக்கூடாது.

(வியாதி கண்ட) பிராணிக்கு மலபந்தம் உண்டாகக்கூடியதாயிருந்தால், (இரண்டு அல்லது மூன்று அவுன்ஸ், அதாவது) ஐந்து ரூபாயெடை முதல் எழரை ரூபா யெடையாக வெல்லப்பாகும், (இரண்டு அவுன்ஸ் அல்லது) ஐந்து ரூபாயெடை கறியுப்பும் ஆளிவிரைக்கஞ்சியில் தினம் ஒரு வேளை அல்லது இரண்டு வேளை கொடுக்கவேண்டும்.

காய்ச்சல் உள்ள காலத்தில், நாடி வெகு துரிதமாய் அடித்துக் கொள்ளும்பட்சத்திலே, (5 - வது மருந்துபட்டியிற்கண்ட) பானத்தைக் கொடுக்கவேண்டும்.

காய்ச்சற்குறிகளெல்லாம் மாறிவிட்டபிறகு, (9 - வது அல்லது 10 - வது மருந்துப்பட்டியிற்கண்ட) பலவிருத்திமருந்தைக் கொஞ்சம் அரிசிக்கஞ்சியில் தினம் ஒரு வேளை அல்லது இரண்டு வேளை கொடுக்கலாம்.

இப்போது பிராணியின் பலங் குறையாமல் நல்ல உணவு கொடுக்கவேண்டியது அவசியம்; பிண்ணாக்கை எராளமாகக் கொடுக்கவேண்டும்.

சுவாசிப்பது மிகவும் கஷ்டமாயிருந்தால் விலாப்பக்கங்களிலும் மார்பின்மேலும் கடுகுப்பற்று பூசவேண்டும்.

இந்த வியாதி கண்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப்படும்போதெல்லாம் வியாதி கண்ட மாட்டை உடனே மற்ற மாடுகளைவிட்டுப் பிரித்துப் பிரத்தியேகமாக நிறுத்தவேண்டும். வியாதி கண்ட மாட்டுக்குப்பக்

கத்தில் நின்ற மற்ற மாடுகளையும் அப்படியே பிரத்தியேகப்படுத்தவேண்டும் (1-வது அத்தியாயத்தைப் பார்க்க).

அம்மைகுத்துவது.

‡ இந்த வியாதி வருவதைத் தடுப்பதற்காக அம்மைகுத்தும் வழக்கம் ஐரோப்பாவில் அனுசரிக்கப்பட்டுவருகிறது. அதனால் அந்த இடத்தில் அனுகூலமும் ஏற்பட்டிருக்கிறது; தேர்ந்த அனுபவமுள்ள மிருகவைத்தியர்களைக்கொண்டு சரியாக அம்மைகுத்தினால், விசேஷ நன்மை உண்டாகலாம். ‡

பிரேதக்குறிகள்.

பிரேதக்குறிகள்.— சுகமாயுள்ள மாட்டின் நுரையீரல் லேசாயிருக்கிறது; அதன் எடை ஐந்தல்லது ஆறு (பவுனுக்கு) ராத்தலுக்கு மேலிருக்காது; சுவாசாசய அழற்சியென்னும் வியாதியினால் ஒரு மாடு இறந்தால், அதன் நுரையீரல் கனமாகவும், அதை வெட்டிப்பார்த்தால் பித்தாசயம் போல கெட்டியாகவு மிருப்பதாகத் தோன்றுகிறது. அது அனேகமாய்ச் சலவைக்கல்போன்ற தோற்றமுடையதாயிருக்கிறது; தவிர, 30 முதல் 75 (பவுன்) ராத்தல் எடையுள்ளதாயிருக்கலாம்; அல்லாமலும், அது ஏறக்குறைய விலாக்களின் உட்பக்கத்தில் ஒட்டிக்கொண்டிருப்பதாகவும் காணப்படும்.

சில மாடுகளுக்கு ஒரு பக்கத்து நுரையீரலில்மட்டும் வியாதி காணலாம்.

## -ம் அத்தியாயம்.

### செம்மறியாட்டம்மை.

பெயர்கள்.

* பெயர்கள்.—இந்த வியாதிக்கு ஆட்டுவைசூரி, பொக்களநோய் முதலிய பல பெயர்கள் வழங்குகின்றன.

இயல்பு.

இயல்பு.—இது - கொப்புளங்காணுகிற தொத்துக்காய்ச்சல்; இதன் குறிகளைப் பார்த்தால் இது-மனிதருக்குக் காணும் பெரியம்மை என்னும் வியாதியை ஒத்திருக்கிறது; ஆனால், இது செம்மறியாட்டுக்கே உரியதாயிருக்கிறது. வெள்ளாடுகளுக்குக்கூட இந்த வியாதி சாதாரணமாய்க் காணுகிறதில்லை.

வியாதியின் விஷம் உள்ளேயே விருத்தியடையுங் காலம்.

வியாதியின் விஷம் உள்ளேயே விருத்தியடையுங் காலம்.—பிராணியானது இந்த வியாதி தொத்திக்கொள்ளும் அபாயத்துக்குட்பட்டபின்பு ஆறு நாள் முதல் இருபது நாளில் வியாதி வெளிப்படையாகத் தோன்றலாம். இப்படி இந்த வியாதி உள்ளேயே விருத்தியடையுங்காலம் ருதுக்களின் வேறுபாடுகளுக்குத் தக்கபடி பேதப்படுகிறது; கோடைகாலத்தில் சொற்பமாயும், குளிர்காலத்தில் நீண்டும் இருக்கும்.

குறிகள்.

குறிகள்.—வியாதி கண்ட ஆடு உற்சாகமில்லாமலிருக்கிறது; மந்தையிலுள்ள மற்ற ஆடுகளைவிட்டுப் பிரிந்து நிற்கிறது; பசி அற்பமாயிருக்கிறது, அல்லது சுத்தமாயில்லாமலேயிருக்கிறது; அசைபோடுவது நின்றுவிடுகிறது; விறைப்பாக நடக்கிறது; அதிகக் காய்ச்சலினால் நடுங்குகிறது; துரிதமாக மூச்சுவிடுகிறது; தோல் மெல்லிதாகவும் ரோமத்தினால் அதிகமாய் மூடப்படாமலுமிருக்கிற அக்குள், தொடை, வயிற்றின் பிற்பகுதி ஆகிய இந்த இடங்களில் உணர்ச்சி அதிகப்படுகிறது.

வியாதியின் முதற்குறிகள் தோன்றினபிறகு சுமார் நாலு நாளானவுடனே, தோலின்மேலே-முக்கியமாக அக்குள், தொடை, வயிறு இந்த இடங்களிலே, சிவந்துள்ள சிறு புள்ளிகள் தோன்றுகின்றன. இப்படித் தோன்றியபோது, தேகத்தில் காணப்பட்ட குறிகள் கொஞ்சம் அடங்கிப்போவது வழக்கம்; பசி திரும்பவும் உண்டாகலாம். மேலும், கண் - மூக்குத்துவாரம் - வாய் இவைகளின் உட்புறத்தில் கொப்புளம் உண்டாகிறது; இதனால், கண்களிலிருந்தும் மூக்கிலிருந்தும் சீயோடுகலந்த நீர் வடிவதோடுகூட, வாய்நீரும் அதிகமாக ஒழுகுகிறது.

சிவந்த புள்ளி ஒவ்வொன்றும் பெரிதாவதுமல்லாமல் அடியிற் கடினமுமாகிறது; அதன் நுனி தட்டைவடிவமாயிருக்கிறது.

---

* 2-ம் அத்தியாயத்தின் முதற்பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைப் பார்க்க.

இந்தப் பருக்களின்மேல் தோலுக்குக்கீழே நீர்கோத்துச் சிறு கொப்புளங்கள் உண்டாகின்றன. இந்தக் கொப்புளங்கள் பின்பு சீக்கொண்டு உடைகின்றன; உடைந்து சில காலம் சீ வடிந்தபின் உலர்ந்து போய், பக்குகள் உதிர்ந்துவிழுகின்றன. சில சமயங்களில் மேற்கூறிய கொப்புளங்கள் ஒன்றோடொன்று சேர்ந்து வியாதியின் கொடுமை அதிகமாகிறது.

மேற்கூறிய கொப்புளம் சுவாசக்குழல் அல்லது இரைக்குழலில் (Alimentary canal) காணும்போது, அது ஒழுங்கற்ற கொப்புளமென்று சொல்லப்படும்; அதனால், சாதாரணமாக மரணம் சம்பவிக்கிறது.

(வியாதியின்) காலம்.

(வியாதியின்) காலம்.—இந்த வியாதி சுமார் மூன்றல்லது நாலு வாரகாலம் நீடித்திருக்கிறது.

மரணம்.

மரணம்.—வியாதியின் சாந்தம் அல்லது கொடுமைக்குத் தக்கபடி மரணம் சம்பவிக்கிறது.

வியாதி சாந்தமாக இருந்தால் வியாதி கண்ட பிராணிகளில் நூற்றுக்கு 10க்குமேல் மரணம் நேரிடாது; வியாதி கொடூரமாயிருந்தால் நூற்றுக்கு 90 வரையில் மரணம் சம்பவிக்கலாம்.

சிகிச்சை.

சிகிச்சை.—ஈரமில்லாமல் குளிர்ந்து, மழையாவது அதிக வெயிலாவது படாமலிருக்கிற கொட்டிலில் வியாதி கண்ட ஆட்டை வைத்திருக்கவேண்டும்; தினம் (ஒரு ட்ராம் அல்லது) மூன்று அரைக்கால் ரூபாயெடை வெடியுப்பை உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்; மலச்சிக்கு இருந்தால், 3-வது மருந்துபட்டியிற் குறித்த மருந்தைக் கொடுக்கவேண்டும்; இந்துப்பை ஆடு நக்கும்படியாக அதற்கு எட்டுந்தூரத்தில் வைக்கவேண்டும்.

மலபந்தம் ஜாஸ்தியாக இருந்தால் வெந்நீரை அபானவாயின் மூலமாய் உள்ளே செலுத்தலாம்.*

கொப்புளங்களுக்கு (27-வ்து மருந்துபட்டியிற்கண்ட) இரண மருந்தைப் போடவேண்டும்; அதனால் புண்களில் ஈ மொய்க்காமலிருக்கும்.

ஆகாரம்.

ஆகாரம்.—வியாதி கண்ட ஆடு குடிப்பதற்காகச் சுத்தமான புதுத் தண்ணீரை ஏராளமாக வைக்கவேண்டும். காய்ச்சற்குறிகள் நின்றுபோனபிறகு, நனைத்து ஊறின தானியம் கொஞ்சம் வைக்கவேண்டும். பச்சைப்புல்லும், கிடைக்குமானால் பில்லைபில்லையாக நறுக்கிய "டர்னிப்" கிழங்கும் பிரதானமாக உபயோகிக்கத்தக்க ஆகாரமாகும்; † ஆழிவிரைக்கஞ்சியுங்கூட கொடுத்தால் நல்லது.

---

* எப்படிச் செலுத்துவதென்பதைப்பற்றி இந்தப் புஸ்தகத்தின் கடைசிப் பாகத்தில் விவரித்துக் கூறியிருக்கிறது.

† ஆழிவிரை கிடைக்கவில்லையானால் அரிசிக்கஞ்சி கொடுக்கலாம்.

(வியாதி வராமல்) தடுக்கும் வகை.

(வியாதி வராமல்) தடுக்கும் வகை.—ஒரு மந்தையில் இந்த வியாதி ஆரம்பித்திருப்பதாக முதலில் தெரிந்தவுடனே, வியாதி கண்ட ஆடுகளை மற்ற* ஆடுகளினின்றும் உடனே பிரித்துப் பிரத்தியேகப்படுத்திவைக்கவேண்டும்; பின்பு எந்த ஆடாவது கொஞ்சம் வியாதியாயிருப்பதாகத் தெரிந்தாலும், அதை-எற்கெனவே பிரத்தியேகப்படுத்திவைத்திருக்கிற வியாதிகண்ட ஆடுகளுடன் உடனே சேர்த்துவைக்கவேண்டும். வியாதியானது கொடூரமாய் முடியக்கூடியதென்று தோன்றுகிறபட்சத்திலே, அதைப் பரவவொட்டாமல் தடுப்பதற்காக, வியாதிகண்ட ஆடுகள் எல்லாவற்றையும் கொன்று புதைத்துவிடுவது உசிதமாயிருக்கும். பெருத்த மந்தைகளில் இந்த வியாதி தோன்றி அதிசொற்பமாக யாதொரு ஆட்டுக்குக் கண்டிருந்தபோதிலும், அந்த ஆட்டை மந்தையைவிட்டுப் பிரித்து அப்புறப்படுத்திக் கொன்று புதைத்து, வியாதியைப் பரவவொட்டாமல் அடியோடு அடக்கிவிடுவது மிகவும் நல்லது.

வியாதி தோன்றிய மந்தையை அது நின்ற மேய்ச்சல்நிலம்-கொட்டில்கள்-ஆகிய இவைகளைவிட்டு அப்புறப்படுத்தவேண்டும்; கெடிவியாதி தோன்றிய மந்தை - அந்த மந்தைக்காக உபயோகமாகிவந்த (மேய்ச்சல்) நிலம்-கொட்டில் - இவைகளுக்குத் தூரமாகத் தங்களுடைய ஆடுகளை வைத்துக்கொள்ளும்படி அக்கம்பக்கத்திலுள்ள மந்தைக்காரர்களுக்கு எச்சரிக்கைசெய்யவேண்டும்.

கொப்புளம் உலர்ந்து பக்குகள் உதிர்ந்துவிழுந்துகொண்டிருக்கும்போது, இந்த வியாதிக்குத் தொத்திக்கொள்ளும் தன்மை மிகவும் அதிகமாயிருக்கிறது. இந்த வியாதி கண்ட ஆடுகள் சொஸ்தமாகி ஆறு வாரமாகும்வரையிலே, இவைகளிடத்திலிருந்து மற்ற ஆடுகளுக்கு இந்த வியாதி பரவக்கூடும்.

அம்மைகுத்துவது.

அம்மைகுத்துவது.—(மந்தைகளிலே) இந்த வியாதி வாஸ்தவத்தில் கண்டிருக்கும்போது, சுகமாயுள்ள ஆடுகளுக்குக் காணுவதைத் தடுப்பதற்காக அம்மைகுத்தலாம்; அப்படி குத்துவதனால் அனுகூலமுண்டாகும்.

அப்படி அம்மைகுத்துவதனால், அம்மைகுத்தின ஆட்டுக்கு இந்த வியாதி சொற்பமாக உண்டாகக்கூடும்; அதனால் பின்பு அந்த ஆட்டுக்கு இந்த வியாதி வராதபடி பூரணமான பாதுகாப்பு எற்படுகிறது. இந்த விதம் செய்வதில் அபாயமிராமலில்லை; ஆகையால், இதைத் தேர்ந்த மிருகவைத்தியர்களைக்கொண்டே செய்விக்கவேண்டும்.

## 9-ம் அத்தியாயம்.

### விழுங்கக்கூடாமை.

இயல்பு.

இயல்பு.—விழுங்குவது கஷ்டமாகவாவது அசாத்தியமாகவாவது இருப்பது.

காரணம்.

காரணம்.— உணவுப்பொருள்களில் கரும்புத்துண்டு (கர்பி) சோளத்தட்டைத்துண்டுபோன்ற கடினமான பெரிய துண்டுகள் தொண்டையின் பின்பாகத்திலாவது இரைக்குழலின் எந்தப் பாகத்திலாவது சிக்கிக்கொள்ளுவதால் விழுங்கக்கூடாமை உண்டாகிறது; இரைக்குழலென்பது தொண்டைக்கும் இரைப்பைக்கும் மத்தியிலுள்ளதாய், ஆகாரம் செல்வதற்கான குழாய்.

சில சமயங்களில், தோல்-இரும்பு-ஆணி-கூர்மையான முள்-கடினமும் கூர்மையுமுள்ள மரத்துண்டு முதலிய அன்னிய பொருள்களைக் கால்நடைகள் விழுங்குவதால், அந்தக் கால்நடைகளின் இரைக்குழல்களில் அவை சிக்கிக்கொள்ளுகின்றன; அப்படி விழுங்கப்படுகிற பொருள்கள் மெத்தவும் கடினமானவைகளாயும் கூர்மையான ஓரம் அல்லது முனையையுடையவைகளாயுமிருந்தால், அவைகளினால் இரைக்குழலின் உள்தோல் கிழிந்துபோகலாம்.

குறிகள்.

.—ஒரு பிராணிக்கு வாய் அல்லது தொண்டையின் பிற்பகுதியில் அடைப்பிருந்தால், அது இருமுவதோடுகூட அதற்கு வாய்நீரும் ஒழுகும்; தண்ணீர் குடித்தால், அந்தத் தண்ணீர் மூக்கின்வழியாக வெளியே வரும்.

இரைக்குழலில் அடைப்புள்ள பிராணி இரண்டு மூன்று வாய் தண்ணீர் குடித்து அடைப்புள்ள இடம்வரையில் தண்ணீர் நிரம்பியபின் தண்ணீர் வாய்வழியாகவும் மூக்குவழியாகவும் திரும்பி வெளியே வந்துவிடும்.

(விழுங்கக்கூடாமலிருக்கிற) பிராணி மிகவும் தொந்தரவுபடுகிறது; அதன் முகத்தில் துன்பக்குறிகள் காணப்படுகின்றன; சிற்சில சமயங்களிலே கழுத்தின் சதையில் இழுப்பும் நடுக்கலும் உண்டாகின்றன; இரைக்குழலில் சிக்கியிருக்கிற பொருளை இரைப்பைக்குள் செலுத்தும்படியாவது வாய்க்கு மறுபடியும் கொண்டுவரும்படியாவது ஷை பிராணி செய்கிற முயற்சியினால் மேற்சொன்ன வலிப்புகள் உண்டாகின்றன. அடைப்பு உண்டாகிக் கொஞ்சநேரமானபின் வயிற்றுப்பொருமல் உண்டாகும்; அந்தப் பொருமலை நிவர்த்திசெய்யாவிட்டால் வயிற்றின் இடதுபக்கம் மிகவும் உப்பிவிடும்.

தொண்டையில் அடைப்பிருக்கும்பட்சத்திலே, வாயின் பிற்பகுதிக்குள்ளே கைவிட்டுப் பார்த்தால், அந்த அடைப்பு கைக்குத் தட்டுப்படும்.

இரைக்குழலிலே வாயின் பிற்பகுதிக்கும் மார்புக்கும் மத்தியிலுள்ள பாகத்தில் அடைப்பிருக்கும்பட்சத்திலே, தொண்டையைக் கையினால் ஜாக்கிரதையாகத் தடவிப்பார்த்தால், அந்த அடைப்பு கழுத்துக்கு வெளிப்புறத்தில் தட்டுப்படும்; ஏனென்றால், அடைப்புள்ள இடம் உப்பலாக இருக்கும்.

இரைக்குழலிலே, மார்புக்கூட்டுக்குள்ளே செல்லுகிற பாகத்தில் அடைப்பிருந்தால், அந்த அடைப்பானது-வாயின் பிற்பகுதியிலாவது தொண்டையின் எந்தப் பாகத்திலாவது காணப்படாமலிருப்பதனாலேயே, அது - மார்புக்கூட்டுக்குட்பட்ட பகுதியிலிருப்பதாக முடிவாயேற்படும்; அப்படிப்பட்ட (அடைப்புள்ள) பிராணி தண்ணீர் குடிக்கும்போது, அந்தத் தண்ணீர் தொண்டையின் கீழ்ப்பாகத்தில் இரைக்குழல்வழியாக யாதொரு தடையுமில்லாமல் செல்வதைப் பார்க்கலாம்; ஆனால், அந்தப் பிராணி இரண்டு மூன்று வாய்த் தண்ணீர் குடித்தபின் தொண்டையிலுள்ள இரைக்குழலின் பகுதியில் தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாய் நிறைந்து, கடைசியாகத் தொண்டையும் இரைக்குழலும் சேருகிற ஸ்தானம் வரையில் தண்ணீர் நிறைந்தவுடனே, குடித்த தண்ணீர் வாந்தியாக ஆரம்பிக்கிறது.

சிகிச்சை.

சிகிச்சை.—இளஞ்சூடாகச் செய்த * ஆழிவிரை எண்ணெய் (அரைபயின்ட் அல்லது) பட்டினம்படிக்கு அரைக்காலே அரைவீசம் படி, சாராயம் (இரண்டு அவுன்ஸ் அல்லது) அரைவீசம்படி இவைகளை நன்றாகக் கலந்து வெகு ஜாக்கிரதையாகவும் கொஞ்சங் கொஞ்சமாகவும் (பிராணிக்கு) உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

இது இரைக்குழலையும் அதில் சிக்கியிருக்கிற உணவுப்பொருள் அல்லது அன்னிய பொருளையும் வழுவழுப்பாக்குகிறதுமல்லாமல், இரைக்குழலை அதிக உணர்ச்சியுடையதாக்கி அதன் தொழிலைச் செய்வித்துச் சிக்கியிருக்கிற பொருளை இரைப்பையை நோக்கித் தள்ளும்படியும் பண்ணுகிறது.

கொடுக்கிற மருந்து வாந்தியினால் ஒருதரம் அல்லது பலதரம் திரும்பி வெளியில் வரலாம்; அப்படி வந்தாலும் அதைத் திரும்பத் திரும்ப விடாமல் கொஞ்சம் கொஞ்சமாகப் பலதரம் கொடுத்துவரவேண்டும்.

வெகு ஜாக்கிரதையாக அந்தப்படி எண்ணெய் கொடுக்கவேண்டும்; அதில் எவ்வளவாவது சுவாசக்குழலுக்குள் சென்றால் பிராணி இறந்துவிடும்.

அடைத்திருக்கும் பொருள் தொண்டையின் பின்பாகத்தில் இருந்தால், அதைக் கையினால் எடுத்துவிடவேண்டும்; அது இரைக்குழலிலே தொண்டையோடு சேர்ந்துள்ள பாகத்திலிருந்தால், மேலேகண்டபடி எண்ணெயையும் சாராயத்தையும் கொடுத்தபின், தொண்டையில் உப்பலாய் இருப்பதாகக் காணப்படும் பாகத்தைச் சுற்றிலும் விரல்களினால் அழுத்தவேண்டும்; அப்படி அழுத்தினால், அடைத்திருக்கும் பொருள் பெரும்பாலும் கொஞ்சம் நகரும்; பின்பு இன்னும் கொஞ்சம் எண்ணெயும் சாராயமும் கொடுத்து, உப்பலாயிருக்கிற பாகத்தை மறுபடியும் அதிகமாக அழுத்தவேண்டும்; இப்படி விடாமல் செய்வதனால் அடைத்திருக்கிற பொருள் நகர்ந்து நகர

* ஆழிவிரையெண்ணெய் கிடையாத இடங்களில் அதற்குப்பர்த்தியாக ஆமணக்கெண்ணெயை உபயோகிக்கலாம்.

ந்து அனேகமாக இரைப்பைக்குள் போய்விடும் ; அதனால் பிராணிக்குக் கஷ்டம் நீங்கிவிடும்.

இரைக்குழலிலே மார்புக்கூட்டுக்குள் இருக்கிற பாகத்தில் அடைப்பு இருப்பதாக அந்தப் பிராணியினிடம் காணப்படும் குறிகளினால் தெளிவாய்த் தெரிந்திருந்து அதற்காக எண்ணெயும் சாராயமும் விடாமல் கொடுத்தும் அடைத்திருக்கிற பொருள் நகராமலிருக்கும் பட்சத்திலே, ப்ரோபாங்க் என்னும் வளையக்கூடிய குழற்கருவி கிடைக்கிறதாயிருந்தால் அதை வாய்க்குள் விட்டு, இரைக்குழலில் அடைத்திருக்கிற பாகம் வரையிலே செலுத்தி மெதுவாகக் கொஞ்சம் அழுத்தினால், அடைத்திருக்கிற பொருளை வெகுசாய் இரைப்பைக்குள்ளே செல்லும்படி தள்ளிவிடலாம். ப்ரோபாங்க் என்னும் கருவி கிடைக்க மார்க்கமில்லையானால், ஆள்காட்டி விரலின் பருமனுள்ள ஒரு நல்ல பிரம்பை எடுத்து, கோழிமுட்டைப் பரிமாணமுள்ள பஞ்சு உருண்டை அல்லது சணல் நார் உருண்டையைத் துணியிலிட்டுப் பந்துபோலச் செய்து மேற்படி பிரம்பின் ஒரு முனையிலே விழுந்துவிடாமல் நன்றாகக் கட்டி, செவ்வையாக எண்ணெயில் அமிழ்த்தி நனைத்து (பிராணியின்) வாய்க்குள் விட்டு இரைக்குழலில் செலுத்தி, அடைத்திருக்கிற பொருளை மெதுவாக அழுத்தித் தள்ளவேண்டும். இப்படிச் செய்யும்போது உதவியாக வேறொருவர் பிராணியின் வாயைத் திறந்துவைத்துக்கொண்டிருக்கவேண்டும்.

அடைத்திருக்கும் பொருளினாலாவது, மேற்கண்ட குழலை உபயோகிப்பவர்கள் வெகு பலமாக அழுத்தித் தள்ளுவதனாலாவது, பிரம்பின் முனையிலுள்ள பந்து சரியாகக் கட்டப்படாததனாலாவது, சில சமயங்களில் இரைக்குழல் வெட்டுப்படும்படி அல்லது கிழிந்துபோகும்படி நேரிடுகிறது ; அதனால் இரைக்குழல் சாசுவதமாக ஊனப்பட்டதாய்விடலாம் ; அப்படி ஊனப்பட்ட பிராணிகளுக்கு விழுங்கக் கூடாமை அனேகமாய்த் திரும்பவும் வரக்கூடும்.

விழுங்கக்கூடாமை நேரிடுகிறபோதெல்லாம், இரைக்குழலில் அடைபட்டிருக்கும் பாகமானது சில நாள்களுக்குப் பலவீனமாயிருக்கும் ; ஆகையால், (விழுங்கக்கூடாமை நேர்ந்தபின்) மூன்றல்லது நாலு நாள் வரையில் கஞ்சி அல்லது தண்ணீர் தெளித்துப் பிசைந்த தவிடுபோன்ற மிருதுவான உணவைத்தான் கொடுக்கவேண்டும். பின்பு பச்சையாயுள்ள இளம்புல் வைக்கவேண்டும்.

இரைக்குழலிலே தொண்டைக்கும் மார்புக்கும் மத்தியிலுள்ள பாகத்தில் அடைப்பு நேரிட்டு அது மற்றப்படி நீங்குவது அசாத்தியமாயிருந்தால், மிருகவைத்தியர்கள் அடைப்புள்ள பாகத்தைக் கத்தியினால் சேதித்துத் திறந்து சிகிச்சை செய்வதுண்டு.

---

TAMIL NADU ARCHIVES LIBRARY
10489

# 10-ம் அத்தியாயம்.

## வயிற்றுப்பொருமல்.

பெயர்.

* பெயர்.—இது வயிற்று உப்புசம் என்றும் சொல்லப்படுகிறது.

இயல்பு.

இயல்பு.—இந்த வியாதியில் முதலாம் இரைப்பை வாயுவினால் உப்புகிறது.

காரணம்.

காரணம்.—இது மாடுகளுக்குச் சாதாரணமாக உண்டாகிற வியாதி; மாடு முன்னமே தின்று வழக்கமிராத தீனியைத் தின்பதுபோல ஒழுங்கீனமாய்த் தீனி தின்பதனால் இந்த நோய் உண்டாகிறது. முதல்மழை விழுந்தபின் உண்டாகிற நீர்கொண்டுள்ள புல்லைப் பலவாரங்களாகப் பட்டினியாயிருந்த மாடுகள் வெகுசாய் அளவுக்கு மிஞ்சித் தின்பதனால் இந்த வியாதி அவைகளுக்கு உண்டாகிறது. இவ்விதமாக ஒரு மந்தையில் பல மாடுகளுக்கு இந்த வியாதி காணலாம்; இது அனேகமாய் ப்ளேக் அல்லது மஹாமாரி வியாதியைப்போலத் தோன்றலாம்.

சில சமயங்களில் வயிற்றுப்பொருமலானது விழுங்கக்கூடாமை என்னும் வியாதிக்கு ஒரு குறியாகக் காணப்படுகிறது (9-ம் அத்தியாயத்தைப் பார்க்க).

குறிகள்.

—இந்த வியாதியின் குறிகள் துரிதமாக வெளிப்படுகின்றன; வயிற்றின் இடதுபக்கத்தில் பின்பாகம் உப்பியிருக்கிறது; அந்த இடத்தில் விரல்களினால் தட்டிப்பார்த்தால், அது-முதல் இரைப்பையில் வாயு திரண்டிருப்பதனால் உண்டாயிருப்பதாகக் காணப்படுகிறது. சுவாசிப்பது கஷ்டமாயிருக்கும்; தலை நேராக நீட்டப்பட்டிருக்கும்; பிராணி ஒருவகையாகப் பன்றி உறுமுதல்போலச் சத்தமிடும்; மிகவும் விறைப்பாய் நின்றுகொண்டிருக்கும்; நடக்கச் சக்தியில்லாததுபோலத் தோன்றும்.

வயிற்று வீக்கம் சீக்கிரத்தில் அதிகமாகிறது; மற்றக் குறிகளும் அதிக உக்கிரமாகின்றன. பிராணி படுத்தால் சுவாசிப்பதிலுள்ள கஷ்டம் அதிகமாகிறது; அதனால் அது சீக்கிரமாகத் திரும்பவும் எழுந்து நிற்கிறது. இரைப்பையில திரண்டிருக்கும் வாயுவை நீக்கிவிடாதபட்சத்திலே, நிமிஷத்துக்கு நிமிஷம் சுவாசிப்பதிலுள்ள கஷ்டம் அதிகமாகிக் கடைசியாக வயிறு அபாரமாய் வீங்கிப் பிராணி அதற்குமேல் நிற்கச் சக்தியற்றதாய்க் கீழே விழுந்து மூச்சுவிடமாட்டாமல் இறந்துபோகிறது.

(வியாதியின்) காலம்.

(வியாதியின்) காலம்.—இந்த வியாதி இதைத்தவிர வேறே வியாதியாயிருக்கலாமென்று அனேக முறை தப்பாகக் கொள்ளப்படுகிறது; இதனால் வெகு சீக்கிரமாய் முடிவு ஏற்பட்டுவிடுகிறபடியால், சில சமயங்களில் இது விஷத்தினாலுண்டானதென்றும் கருதப்படுகி

---

* 2-ம் அத்தியாயத்தின் முதற்பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைப் பார்க்க.

றது. இந்த வியாதி தீவிரமாயிருந்தால், இது நீடித்திருக்கும் காலம் ஒருமணி நேரமுதல் மூன்றுமணி நேரமாக இருக்கலாம்; இந்த வியாதி அதிகமாக நீடித்திருக்கும் சந்தர்ப்பங்களிலே, (வியாதி கண்ட) பிராணிகள் எட்டுமணிமுதல் பன்னிரண்டுமணி நேரம் வரையில் உயிருடனிருக்கலாம்.

சிகிச்சை.

சிகிச்சை.—7-ம்நெ. மருந்துபட்டியிற்கண்ட பானத்தைக் கூடிய சீக்கிரத்தில் கொடுக்கவேண்டும். அந்த மருந்தினால் குணமுண்டானால், (வியாதி கண்ட) பிராணி சீக்கிரம் ஏப்பமிட ஆரம்பிக்கும்; எவ்வளவுக்கெவ்வளவு ஷை பிராணி ஏப்பமிடுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு இரைப்பையின் உப்புசமும் சுவாசிப்பதிலுள்ள கஷ்டமும் நிவர்த்தியாகும்.

கருவி பிரயோகிப்பது.

வெந்நீரை அபானவாய்மூலமாக உள்ளே செலுத்தினால் அனுகூலமுண்டாகக்கூடும்; ப்ரோபாங்க் என்னும் கருவி கிடைக்கிறபட்சத்திலே அதை உபயோகிக்கலாம். இந்த வியாதி மற்றச் சிகிச்சையினால் சீக்கிரமாகக் குணமாகாமலிருக்கிறபட்சத்திலே, மிருக வைத்தியர்கள் (அடைபட்டிருக்கும்) வாயு வெளிப்படும்படி தகுந்த கருவியைக்கொண்டு இரைப்பையில் துவாரம்செய்வது வழக்கம். ஆயினும், அவசரமான சமயங்களில் மாட்டுக்குடையவர்கள் ஷை பிரயோகத்தைப் பின்வருகிறபடி செய்யலாம். பிராணியின் இடது விலாப்புறத்தின் மேற்பாகத்தில் கடைசி விலா எலும்புக்கும் (அதற்குப்பின்னே கொஞ்சந்தள்ளிப் புடைப்பாயிருக்கிற) இடுப்பெலும்பின் முனைக்கும் மத்தியிலுள்ள (கடைவயிறு என்று சொல்லப்படுகிற முக்கோண ரூபமாயிருக்கிற) இடத்திலே மேற்படி கடைசி விலாவெலும்பு இடுப்பெலும்பு முதுகுப்பக்க எலும்புகளின் விளிம்பு ஆகிய இந்த மூன்றுக்கும் மத்தியில் பேனாக்கத்திபோன்ற மிகுந்த கூர்மையான கத்தியை, உப்பியிருக்கிற இரைப்பைக்குள் போகும்படியாக மேல் தோலில் குத்திச் செலுத்தவேண்டும். இப்படிக் குத்தி உண்டாக்கப்படுகிற துவாரமானது சுண்டுவிரற் பருமனுள்ள ஆறங்குல * மூங்கிற்குழல் உள்ளே செல்லத்தக்க விசாலமுடையதாக இருக்கவேண்டும்.

இந்தக் குழலைக் கத்தியினால் உண்டாக்கப்பட்ட அந்தத் துவார வழியாகச் செலுத்தினால், வாயு குழல்வழியாகச் சீக்கிரத்தில் வெளிப்பட்டுப் பிராணியின் கஷ்டம் விரைவாய் நீங்கும். வயிற்றுவீக்கத்துக்குரிய சகல குறிகளும் நீங்குகிறவரையிலே, ஏறக்குறைய ஒரு மணி நேரம்வரையில் குழலை அவ்விடத்திலேயே வைத்திருக்கவேண்டும்.

குழல் வயிற்றுக்குள்ளே நழுவிப்போவதைத் தடுப்பதற்காக, சுமார் மூன்றங்குல நீளமுள்ள குச்சு ஒன்றை, வயிற்றுக்கு வெளியே

---

* இதற்கு ஈரற்கழிக்குழல் என்னும் பெயர் திருநெல்வேலி முதலிய சில இடங்களில் வழங்குகிறது: இதற்குப் பர்த்தியாகச் செங்கற்பட்டு முதலிய சில இடங்களில் மூலைக்காட்டுமூங்கிலென்ற பெயர் வழங்குகிறது.

யிருக்கும் குழலின் பாகத்தில் சுமார் ஒரு அங்குலம்விட்டுக் குறுக்காகக் கட்டவேண்டும்.

இப்படிச் செய்தபின்பு, (1-ம்நெ. அல்லது 2-ம்நெ. மருந்துபட்டியிற்கண்ட) பேதிமருந்தில் ஒருதரம் கொடுக்கக்கூடிய அளவை உள்ளுக்குக் கொடுக்கவேண்டும்.

ஆகாரம்.

**ஆகாரம்.**—பிராணிக்குக் கொஞ்சமாகப் பச்சைப்புல் வைக்கவேண்டும்; ஆனால், எந்த முகாந்தரத்தைக்கொண்டும் மிகுதியாகத் தீனி கொடுக்கக்கூடாது.

(வியாதி வராமல்) தடுக்கும் வகை.

**(வியாதி வராமல்) தடுக்கும் வகை**—மந்தையில் ஒரு மாட்டுக்கு இந்த வியாதி வந்தால், மற்ற மாடுகள் அளவுக்கு மிஞ்சி தீனி தின்று, அதனால் இந்த வியாதிக்குள்ளாவதைத் தடுக்கவேண்டும்.

# 11-ம் அத்தியாயம்.

## முதல் இரைப்பை அடைப்பு.

மாடுகளும் செம்மறியாடுகளும் இந்த வியாதிக்குள்ளாகக்கூடியவைகள்.

இயல்பு.

இயல்பு.—முரடாகவும் உரப்பாகவும் ஜீரணிக்கக்கூடாததாகவுமிருப்பதாய் அதிகமாக முதிர்ந்துள்ளமுரட்டுப்புல் அல்லது காணல்போன்ற தீனியைத் தின்பதனால், பெருவயிறு விம்முகிறது; மேலும், வெகுகாலமாகப் பட்டினிகிடந்த ஒரு பிராணிக்கு, மிகவும் ருசியாயுள்ள தீனியை ஜாஸ்தியாகத் தின்னுவதற்குச் சமயம் ஏற்படும்போது, அந்தப் பிராணி அந்தத் தீனியை மிகுதியாகத் தின்று இரைப்பையை நிரப்பிக் கொள்ளுகிறது; அல்லாமலும், ஒரு பிராணி தானியத்தை ஏககாலத்தில் அளவுக்குமிஞ்சித் தின்றுவிடுவதனாலும் இந்த வியாதி அந்தப் பிராணிக்குக் காணலாம்.

ஒரு பிராணிக்கு வேண்டிய அளவுக்குத் தண்ணீர் கிடைக்காமலிருப்பதே சில சமயங்களில் சிறிதுமட்டில் இந்த வியாதிக்குக் காரணமாயிருக்கிறது.

காரணங்கள்.

காரணங்கள்.—இரைப்பையில் அளவுக்கு அதிகமாகத் தீனி ஏறியிருந்தால், முதலிலே இரைப்பையின் தொழில் தாமதமாக நடக்க ஆரம்பிக்கிறது; பிறகு இரைப்பையிலிருக்கும் விசேஷ தீனி காரணமாக இரைப்பைக்கு மூடிபோலிருக்கிற தசைகள் விடாமல் அழுத்தப்பட்டு வீங்கி சக்தியற்றுச் சிறிதும் பிரயோசனமில்லாமற்போகிறதனாலே, இரைப்பையின் தொழில் நடவாமல் நின்றுவிடுகிறது.

குறிகள்.

குறிகள்.—இந்த வியாதியின் குறிகளை, வாயுவினால் இரைப்பையில் உப்புசம் உண்டாகிற வயிற்றுப்பொருமலென்னும் வியாதியின் குறிகளென்று தப்பாகக் கொள்ளக்கூடும்; ஆனால், இந்த வியாதியின் குறிகள் படிப்படியாக வெளிக்குத் தோற்றுவதில் மற்றொரு வியாதியின் குறிகள் தோற்றும் காலத்தைவிட அதிக காலம் செல்லுகிறது. முதலில் பிராணி உற்சாகமில்லாமலிருக்கிறது; அசைபோடுகிறதில்லை; வயிற்றின் இடதுபக்கம் கொஞ்சம் கொஞ்சமாக வீங்குகிறது: இந்த இடது பக்கத்தை விரலினால் தட்டினாலாவது அழுத்தினாலாவது வயிற்றுப்பொருமலென்னும் வியாதியிருந்தால் என்ன சப்தம் கேட்குமோ அதைப்போல பேரிகைச்சப்தமும் கேட்பதில்லை, வெறும் வயிற்றைத் தட்டினாலுண்டாகும் சப்தமும் கேட்பதில்லை; இதற்கு மாறாக, அந்தப் பக்கத்தில் தீனி நிறைந்திருப்பதனால், அது கடினமாயிருக்கிறது; அதில் விரலை அழுத்தினால், களிமண்ணில் அழுத்தினால் குழியுண்டாவதுபோலக் குழியுண்டாகிறது.

மலச்சிக்கு உண்டாகக்கூடியதாயிருக்கிறது.

சற்றேறக்குறைய ஒருமணி நேரத்தில், இந்த வியாதியின் குறிகள் மும்முரமாகின்றன; (வியாதி கண்ட) பிராணி - வெகுசுலபமாய்ச் சுவாசிப்பதற்கு அனுகூலமாக மூஞ்சியை நீட்டிவைத்துக்கொள்கிறது; சுவாசம் மிகவும் அதிகப்படுகிறது; சுவாசிக்கும்போது, அடிக்கடி பிராணி ஒருவகையான உம்முதற் சப்தமிடுகிறது. பிராணி படுத்

தால், பெரும்பாலும் வலதுபக்கம் சாய்ந்து படுக்கிறது; ஆனால், திரும்பவும் சீக்கிரமெழுந்துவிடுகிறது; ஏனென்றால், படுத்திருக்கும்போது அதற்குச் சுவாசிப்பதன் கஷ்டம் அதிகப்படுகிறது; ஆகையால், அது சாதாரணமாய் நின்றுகொண்டேயிருக்கிறது; சுவாசிக்கும்போது மெத்தவும் கஷ்டப்படுகிறது; வெளியே சுவாசம்விடுகிற பிரதி தடவையும் அது ஒருவகையான உறுமுதல் சப்தஞ் செய்து பல்லை நெறநெறென்று கடிக்கிறது. இப்போது இரைப்பையிலுள்ள தீனி புளித்து, (புளிப்பது சம்பந்தமான துர்வாயு உண்டாகி) இரைப்பையின் வீக்கம் அதிகமாகிறது; நாடி மிகவும் மெல்லிதாயும் பலவீனமாயும் அடிக்க ஆரம்பிக்கிறது; கஷ்டத்தோடு சுவாசம்விடப்படுகிறது; பிராணி சீக்கிரத்தில் கீழே விழுந்து மூச்சுவிடமாட்டாமல் இறக்கிறது.

(வியாதியின்) காலம்.

**(வியாதியின்) காலம்.**—இந்த வியாதி ஒரு நாள் முதல் மூன்றுநாள்வரையில் நீடித்திருக்கிறது.

சிகிச்சை.

**சிகிச்சை.**—இரைப்பையில் சேர்ந்திருக்கிற தீனியை ஜீரணிப்பதற்கு வேண்டியவிதமாக இரைப்பையைத் தொழில் நடத்தும்படி செய்யும் நோக்கத்துடன் சிகிச்சை பண்ணவேண்டும். வியாதி கண்டவுடனே பலமான பேதி மருந்தைச் சற்று அதிகமாக ஒருதரம் கொடுக்கவேண்டும் (1-ம்நெ. மருந்துபட்டியைப் பார்க்க).

வெந்நீரில் சவர்க்காரத்தைத் தேய்த்துச் சவர்க்காரநீர் உண்டாக்கி, அதில் எண்ணெய் சேர்த்து நன்றாகக் கலந்து கால்மணிநேரத்துக்கொருதரம் அபானவாய்மூலமாக உள்ளே செலுத்தவேண்டும். வயிற்றை, முக்கியமாக அதன் இடது பக்கத்தை, கையினால் நன்றாகத் தேய்த்து வயிற்றுக்கு, முக்கியமாக வீங்கியிருக்கிற இரைப்பைக்கு, ஒற்றடம் கொடுக்கவேண்டும். இதுதவிர, 8-ம்நெ. மருந்துபட்டியிற்கண்ட உற்சாகமருந்துபானத்தோடு (ஒரு அவுன்ஸ் அல்லது இரண்டு அவுன்ஸ், அதாவது) பட்டினம்படிக்குக் கால்வீசம் அல்லது அரைவீசம் படி *ஆழிவிரை எண்ணெய் கலந்து மூன்றல்லது நான்கு மணிக்கொருதரம் கொடுக்கவேண்டும். பதினைந்தல்லது இருபது மணி நேரத்தில் மலம் போக ஆரம்பிக்காதபட்சத்திலே 1-ம்நெ. அல்லது 2-ம்நெ. மருந்துபட்டியிற்கண்டதைப்போன்ற பேதிமருந்தில் ஒருதரம் கொடுக்கக்கூடிய அளவுக்கு இன்னொரு முறையும் கொடுக்கலாம். அபானவாய்மூலமாக உள்ளே வெந்நீர் செலுத்தும் பிரயோகத்தை விடாமல் செய்துவரவேண்டும். பிராணிக்கு உற்சாகம் இன்னும் குறைந்து அதனிடத்தில் மயக்கக் குறிகள் காணப்பட்டால், 8-ம்நெ. மருந்துபட்டியிற்கண்டதைப்போன்ற உற்சாக மருந்தைத் தாராளமாகக் கொடுக்கவேண்டும். இளஞ்சூடாயுள்ள வெந்நீரையாவது மெத்தவும் நீர்மயமாயுள்ள ஆழிவிரைக்கஞ்சியையாவது, (வியாதி கண்ட) பிராணி எவ்வளவுமட்டில் குடிக்குமோ அவ்வளவுமட்டில் கொடுக்கவேண்டும்.

பேதி ஆரம்பித்தவுடனே, வியாதியின் குறிகள் நிவர்த்தியாகும்; ஆனால், பின்பு சிலநாள்வரையில், ஆழிவிரைக்கஞ்சியும் நீர்தெளித்

---

* ஆழிவிரை எண்ணெய் கிடைக்கவில்லையானால் ஆமணக்கெண்ணெய் உபயோகிக்கலாம்.

துப் பிசைந்த தவிட்டில் நாளொன்றுக்கு (ஒரு அவுன்ஸ் முதல் இரண்டவுன்ஸ்வரையில், அதாவது) இரண்டரை ரூபாயெடைமுதல் ஐந்து ரூபாயெடைவரையிலுள்ள வீதப்படி உப்பைச் சேர்த்துக் கொடுப்பதைத் தவிர வேறொன்றும கொடுக்கக்கூடாது; இந்த வியாதியின் குறிகளெல்லாம் நீங்கி வயிற்று வீக்கம் தணிந்தபின்பு, இனிமையாயுள்ள நல்ல இளம்பச்சைப்புல் கொஞ்சம் வைக்கலாம்: ஆனால், அப்படி வைக்கும் புல்லை (மொத்தமாக ஒரே தரத்தில் வைத்துவிடாமல்) பலதரம் கொஞ்சம் கொஞ்சமாக வைக்கவேண்டும்; ஏனென்றால், இரைப்பை மிகவும் விம்மியிருந்ததனால், கொஞ்சகாலம் வரையில் பலவீனமாயிருந்துகொண்டிருக்கும்; பிராணிக்கு மிகவும் தாராளமாகத் தீனி கொடுத்தால், அதன் இரைப்பையின் தொழில் திரும்பவும் தாமதப்பட்டு, அதில் அளவுக்குமிஞ்சி தீனிசேர்ந்துவிடக்கூடும்.

கொடுத்த சகல மருந்துகளும் இரைப்பையிலும் குடலிலும் வேலைசெய்யாத பட்சத்திலே, வியாதிக்குறிகளின் கொடூரம் அதிகப்படுகிறது; இரைப்பையில் அழற்சி உண்டாகிறது; வீங்கியிருக்கிற இரைப்பையை அழுத்தும்போது பிராணி அதிக வேதனைப்படுவதனால், மேலேசொன்ன அழற்சி உண்டாயிருப்பதாகத் தெரிந்துகொள்ளப்படுகிறது. சுவாசிப்பது மிகவும் துரிதமாகிறது; மேற்சொன்ன உறுமுதற் சத்தம் அதிக உரத்ததாகிறது; இரைப்பையின் வீக்கத்தைத் தணிக்காத பட்சத்திலே, பிராணி சீக்கிரத்தில் இறந்துபோகும். இப்படிப்பட்ட சமயத்தில் ஷை வீக்கத்தை நிவர்த்திசெய்வதற்குரிய உபாயம் ஒன்றுதான் இருக்கிறது: அது என்னவென்றால்,—(வீங்கியிருக்கிற இடப்பக்கத்துக்) கடைசி விலா எலும்புக்கும் இடுப்பெலும்பு முனைக்கும் மத்தியில் கூர்மையான கத்தியினால் அறுத்து இரைப்பையைத் திறப்பது; இடுப்புக்குறுக்கெலும்பின் இடப்பக்கத்து விளிம்பிலிருந்து சுமார் இரண்டங்குலத்துக்குக் கீழே துவக்கி, ஆறங்குலமுதல் எட்டங்குல நீளத்துக்கு வயிற்று வெளித்தோலையும் அதையொட்டியுள்ள சதைப்பகுதியையும் கீழ்நோக்கி அறுத்துப் பின்பு இரைப்பையின் தோலையும் அதைச்சேர்ந்த சதைப்பகுதியையும் அறுத்து, (உள்ளேயிருக்கிற) ஆகாரத்தில் கொஞ்சம் விட்டுவிட்டு மற்றெல்லாவற்றையும் கையினாலெடுத்து வெளிப்படுத்திய பின்பு, அந்த இரைப்பைக்குள்ளே (ஒன்று அல்லது இரண்டு சேர், அதாவது) பட்டினம்படிக்கு அரை அல்லது ஒருபடி ஆழிவிரைக் கஞ்சியை விடவேண்டும். பின்பு இரைப்பையில் உண்டாக்கிய துவாரத்தைத் தைத்து அடைக்கவேண்டும்; அதற்குப்பிறகு வயிற்று வெளிப்பக்கத்துத் துவாரத்தைத் தைத்து அடைக்கவேண்டும்; வெளியே உள்ள புண்ணுக்கு (28-ம்நெ. மருந்துபட்டியிற்கண்ட) இரணம் கழுவுவதற்கான மருந்துநீரைப் போடலாம். மேற்குறித்த (இரைப்பையை அறுக்கும்) சத்திரப்பிரயோகம் அனுபவசாலிகள்தான் செய்யவேண்டும்; அது கடுமையானதாகத் தோன்றும்; ஆயினும், பிராணிகளுக்கு இரைபபை அழற்சி நீடித்ததாய்விடுவதற்கு முன்னே, ஷை பிரயோகஞ்செய்கிற விஷயத்திலே, அந்தப் பிராணிகள் சாதாரணமாய் நன்றாகச் சொஸ்தமடைகின்றன.

**(வியாதி வராமல்) தடுக்கும் வகை.**—இந்த வியாதி வராமலிருக்கவேண்டுமானால், (மேலே சொன்ன) காரணங்களுக்கு இடங்கொடாமலிருக்கவேண்டும்.

(வியாதிவராமல்) தடுக்கும் வகை.

# 12-ம் அத்தியாயம்.

## மூன்றாம் இரைப்பை அடைப்பு.

*இயல்பு.*

**இயல்பு.**—இந்த வியாதியானது - மூன்றாம் இரைப்பையில் கடினமாகவும் உலர்ந்துமுள்ளதாய் ஜீரணமாகத் தக்கதல்லாத தீனி அடைபட்டிருப்பதனால் உண்டாகிறது; இந்தத் தீனியெல்லாம் ஒன்றாய்ச்சேர்ந்து அதிககடினமாக உலர்ந்துபோய், மேற்படி இரைப்பையின் மடிப்புகளுக்கிடையில் அடைகள்போலாகி அந்த இரைப்பையின் தொழில் நடப்பதற்கு ஏறக்குறைய எப்போதும் தடையுண்டாகிறது; வியாதி கொடூரமாயிருந்தால், ௸ இரைப்பையின் தொழில் பூரணமாகவே நின்று போய்விடும்.

*காரணங்கள்.*

**காரணங்கள்.**—இந்த வியாதி பெரும்பாலும் கோடைக்காலத்தில் சம்பவிக்கிறது; இதுவரையிலுமிராதபடி, கால்நடைகள் மேய்வதற்கும் குடிப்பதற்கும் புல்லும் ஜலமும் கிடைப்பது அரிதாயிருக்கிற ருதுவிலே, இந்த வியாதி சாதாரணமாக உண்டாகிறது. அப்படிப்பட்ட காலத்தில், மாடுகளும் செம்மறியாடுகளும் பசிக்கொடுமையினால் கடினமாகவும் நார்த்தன்மையுள்ளதாகவுமிருக்கிற முரட்டுப்புல்லையும் நாணலையுமாவது மரஞ்செடிகளின் கிளைகளையாவது தின்னும்படியாக நேரிடுகிறது; இப்படிப்பட்ட கடினமும் சுகவிரோதமுமான தீனியை மூன்றாம் இரைப்பையில் மாவாக்க முடிகிறதில்லை; அதனால் இந்தத் தீனி அந்த இரைப்பைக்குள்ளே கொஞ்சங்கொஞ்சமாகச் சேர்ந்து கடினமாய்ப்போவதோடுங்கூட அடைபோலுமாகிறது.

*குறிகள்.*

**குறிகள்.**—(வியாதிகண்டபிராணி) அசைபோடுகிறதில்லை; பசி மந்தித்துப்போகும்; சுவாசிப்பது துரிதப்படுகிறதுமல்லாமல் சுவாசாசய அழற்சியில் கேட்கப்படும் உறுமுதல்சத்தம்போன்ற சத்தமும் சுவாசிக்கும்போது கேட்கும். மலபந்தம் உண்டாகும்; சிலவேளைகளில், வியாதி ஆரம்பத்திலே சிறிது கழிச்சலிருக்கிறது; ஆனால் மலபந்தந்தான் சகசமாயிருக்கிறது; சிற்சில சமயங்களிலே நீர்த்தன்மையாக மலம் கொஞ்சம் போகும்; அதிகடினமாகவும் கறுத்தநிறமுள்ளவைகளாகவும் அடைபோல் கட்டியுமிருக்கிற தீனித்துண்டுகள் மூன்றாம் இரைப்பையின் மடிப்புகளிலிருந்து பிரிந்து ௸ மலத்தோடு வெளிப்படுகின்றன; மூத்திரம் சிவந்தநிறமாக இருக்கிறது; வயிற்றுப்பொருமலின் குறிகள் வெகுசாய்க் காணப்படுகின்றன.

வியாதியைத் தணிக்காதபட்சத்திலே, இரைப்பையில் அழற்சி உண்டாகிறது. இந்தப்படி அழற்சி உண்டாகும்போது, சுவாசிப்பது முன்னிலும் அதிகப்படுகிறது; உறுமுதல்சத்தம் அதிகமாகக் கேட்கிறது. பிராணி பல்லை நெறநெறென்று கடிக்கிறது; அதன் மூஞ்சியைப் பார்த்தால், அது துன்பப்படுவதாய் ஒரு விசேஷ வகையாகத் தெரிந்துகொள்ளலாம்; வாயும், காதுகளும், கொம்புகளும் சில்லென்று போகின்றன; நாடி மிகவும் மெல்லிதாய் நூல்போலிருக்கிறது. அது (நிமிஷத்துக்கு) 85 முதல் 100 தரம் அடிக்கிறது. அந்தப் பிராணி எதாயினும் சாணி போடுகிறபட்சத்திலே,

அது-சிறிதுமட்டில் நீர்மயமாகவும் சிறிதுமட்டில் கெட்டியாயுள்ள சிறு அடைபோன்ற துண்டுகளாகவும் இருக்கும்; அது மிகவும் துர்க்கந்தமாயிருக்கும். உறுமுதல் இப்போது திணறுதவாய் மாறுகிறது. சில சமயங்களில் இந்த வியாதியின் அந்திய தசையிலே, பிராணிக்கு மயக்கமுண்டாகும்; வேறு சில சமயங்களில் (மயக்கத்துக்கு எதிரிடையாக) மிகுந்த அமைதியின்மைக்குறிகள் உண்டாகின்றன. இந்தக் குறிகள்-நான்காம் இரைப்பை அழற்சி கொள்வதால் வெகுசாய் உண்டாகக்கூடும்.

(வியாதியின்) காலம்.

**(வியாதியின்) காலம்.**—இந்த வியாதி ஐந்து நாள்முதல் பதினைந்து நாள்வரையில் நீடித்திருக்கும்.

சிகிச்சை.

**சிகிச்சை.**—கடினமாய் உலர்ந்து அடைபோலாகியிருக்கிற தீனி அளவுக்குமிஞ்சிச் சேர்ந்து அடைபட்டிருக்கிற இரைப்பையிலிருந்து அந்தத் தீனியை நீக்கும் நோக்கத்துடனே சிகிச்சைசெய்யவேண்டும்.

வியாதி கண்டவுடனே (1-ம் நெ. அல்லது 2-ம் நெ. மருந்துபட்டியிற்கண்ட) பானத்தைக் கொடுக்கவேண்டும்.

(அரை சேர் அல்லது) பட்டினம்படியில் காற்படி இளஞ்சூடாயிருக்கிற ஆழிவிரைக்கஞ்சியில் (இரண்டு அல்லது மூன்று அவுன்ஸ், அதாவது) அரைவீசம் அல்லது முக்கால்வீசம்படி சாராயத்தைக் கலந்து ஐந்தல்லது ஆறுமணி நேரத்துக்கொருதரம் கொடுக்கலாம்.

ஆகாரம்.

**ஆகாரம்.**—நீர்மயமாயிருக்கிற ஆழிவிரைக்கஞ்சி அல்லது அரிசிக்கஞ்சியைத்தவிர வேறொன்றையும் ஆகாரமாகக் கொடுக்கக்கூடாது; அப்படி கொடுக்கும் கஞ்சியை ஏராளமாகக் கொடுக்கவேண்டும்; ஏனென்றால், அது மலத்தைப் போக்குவதிலும் மூன்றும் இரைப்பையில் அடையாகப் போயிருக்கிற தீனியை இளகச்செய்து சுலபமாய் வெளியே தள்ளுவதிலும் உபயோககரமாயிருக்கும். (பேதிமருந்து கொடுத்து) இருபத்திநான்குமணி நேரத்துக்குள்ளாக பேதிஆகுமென்னும் குறிகூடக் காணப்படாத பட்சத்திலே, முன் கொடுத்த பேதிமருந்து பானத்தில் பாதி மறுபடியும் கொடுக்கலாம்; சாராயமும் ஆழிவிரைக்கஞ்சியும் மலம் போக ஆரம்பிக்கிறவரையில் கொடுத்துக்கொண்டேவரவேண்டும். வயிற்றுக்கு ஒற்றடம் கொடுக்கலாம்; மேலும், (8-ம் நெ. மருந்துபட்டியிற்கண்ட) மருந்தைத் தினம் இரண்டுதரம் கொடுக்கலாம்.

மருந்து மூன்றும் இரைப்பையில் போய் வேலைசெய்து, அந்த இரைப்பையின் தொழிலைச் செய்வித்து அதில் உலர்ந்து அடையாகக்கட்டியுள்ள தீனியை அதிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு வேண்டிய சகல சௌகரியங்களும் ஏற்படும்படியாக, நீர்மயமாயுள்ள கஞ்சியை ஏராளமாகப் பிராணிக்குக் கொடுப்பது மிகவும் முக்கியமானது.

(வியாதி கண்ட பிராணி) கஞ்சியை மிகுதியாக உட்கொள்ளும் பட்சத்திலே, அடையாயிருக்கிற தீனித்துண்டுகள் விசேஷமாக

இளகி, மூன்றும் இரைப்பை மடிப்புகளின் மத்தியிலிருந்து சுலபமாய் அப்புறப்படுத்தப்பட்டு, நான்காம் இரைப்பைக்கும் குடல்களுக்கும் சுலபமாகச் செல்லும்.

அனேக சமயங்களில், கடினமாகவும் அடைபோலுமுள்ள தீனித் துண்டுகளெல்லாம் அப்புறப்படுவதற்குப் பல நாள் செல்லுகின்றன; ஆகையால், கடினமான அடைபோன்ற தீனித்துண்டுகள் சாணியோடு சேர்ந்து வருவது அடியோடு நிற்கிறவரையிலே அவசியம் கஞ்சியைக் கொடுத்துக்கொண்டுவரவேண்டும்.

சொஸ்தமடைவதற்குரிய குறிகளைப் பிராணியினிடத்தில் கண்டால், கொஞ்சம் கொஞ்சமாக இளம்பச்சைப்புல் கொடுக்கலாம்; அனேக நாள்வரையில் மலத்தைப் போக்கத்தக்க மிருதுவான தீனியையே கொடுத்துவரவேண்டும். பிராணி கடினமான உலர்ந்த புல் அல்லது வைக்கோலைத் தின்னும்படி விட்டால், அதற்கு வெகுசாய்த் திரும்பவும் இந்த வியாதி காணக்கூடும்.

பிரேதக்குறிகள்.

**பிரேதக்குறிகள்.**—இந்த வியாதியினால் இறந்த பிராணிகளின் மூன்றும் இரைப்பை மிகவும் கடினமாயிருப்பதாகத் தெரியவருகிறது; அதில் கடினமாகவும் உலர்ந்தும் அடைபோன்றுமுள்ள நார்த்தன்மையான தீனி மிகவும் நெருங்கி அடைத்திருக்கிறது; ஷை தீனியானது - ஆழிவிரைப் பிண்ணாக்கை மிகவும் ஒத்திருக்கும்படியாக அவ்வளவு கடினமாகவும் உலர்ந்தும் இருக்கிறது.

(வியாதி வராமல்) தடுக்கும் வகை.

**(வியாதி வராமல்) தடுக்கும் வகை.**—மந்தையில் ஒரு பிராணிக்கு இந்த வியாதி கண்டால், மற்றப் பிராணிகளுக்கு சுலபமாக ஜீரணமாகக்கூடிய புல்லும் ஏராளமான ஜலமும் கொடுக்கவேண்டும்.

---

# 18-ம் அத்தியாயம்.

## இரத்தமூத்திரம்.

பெயர்கள்.

*பெயர்கள்.—இந்த வியாதிக்கு இரத்தாமூரி முதலிய பல பெயர்கள் இருக்கின்றன.

இயல்பு.

இயல்பு.—இது குறித்த ஒரு வகையான விஷவஸ்துவினால் உண்டாகிற தொத்துவியாதி; இது விஷசுரத் தன்மையுள்ளது; இரத்தத்திலுள்ள சிவப்பு கார்பஸலென்னும் அணுப்பொருள்கள் நாசமாவது-இந்தவியாதியின் அறிகுறியாகும். இது அமெரிக்காவிலுள்ள ஐக்கிய மாகாணங்களிலும் ஆஸ்த்ரேலியாவிலும் சாதாரணமாய்க் காணுகிறது.

இந்தவியாதி மாடுகளுக்குமாத்திரம் காணுவதாகத் தோன்றுகிறது; குதிரைகளுக்கும் ஆடுகளுக்கும் காணுவதில்லை.

இந்த வியாதிக்கு இந்தியாவில் இரத்தமூத்திரமென்னும் பெயர் வழங்குகிறது; ஆயினும், இந்தப் பெயர் கூடி வியாதிக்கு விசேஷ பொருத்தமுடையதாயில்லை: ஏனென்றால், இந்த வியாதியில் - சிவந்த நிறமான மூத்திரம் போவது சாதாரண குறிகளிலொன்றாயிருந்தபோதிலும், நோய் கண்ட மாடுகள் எல்லாவற்றினிடத்திலும் காணப்படுகிற குறிகளிலொன்றல்ல. மேலும், குண்டிக்காய்களிலாவது, மூத்திரப்பையிலாவது, ஜனன உறுப்புகளிலாவது வியாதியுண்டாயிருப்பது அல்லது அவை பழுதடைந்திருப்பது போன்ற பலவகையான வேறு காரணங்களினாலும் இரத்தமூத்திரம் அல்லது இரத்தங்கலந்த மூத்திரம் உண்டாகலாம். அன்றியும், இரத்தமூத்திரம்-அஜீரணம் அல்லது பலவீனத்தின் குறியாகவுமிருக்கலாம்; ஆனால், குறித்த ஒரு வகையான விஷவஸ்துவினால் உண்டாகிற இரத்தமூத்திரத்தைப்பற்றித்தான் இந்த அத்தியாயத்தில் கூறப்படும்.

காரணம்.

காரணம்.— இந்த வியாதி உண்ணிகள் மூலமாகப் பரவுகிறது; அவைகள் பிராணிகளின் தோலிற் பற்றிக்கொண்டு (கடித்துக் கடிவாய்மூலமாக) இந்த வியாதியின் விஷத்தை அந்தப் பிராணிகளின் இரத்தத்திற்குள்ளே செலுத்துகின்றன. இந்த வியாதியுள்ள பிராணிகளைக் கடித்துக்கொண்டிருந்த உண்ணிகள் கீழே விழுந்து முட்டையிட்டுவிட்டுச் சாகின்றன. முட்டைகள் தக்ககாலத்தில் பொரிக்கப்பட்டு, அவைகளிலிருந்து வெளிப்படுகிற சிறு உண்ணிகள் இந்த வியாதியை உண்டாக்கக்கூடியவைகளாயிருக்கின்றன.

வியாதியின் விஷம் உள்ளேயே விருத்தியடையுங் காலம்.

வியாதியின் விஷம் உள்ளேயே விருத்தியடையுங்காலம்.—இந்த வியாதியின் விஷம் உள்ளேயே விருத்தியடையுங் காலம் இவ்வளவென்று நிச்சயமாகச் சொல்லக்கூடவில்லை; ஆனால், அது வெகுசாய் நாலு நாள் முதல் பலவாரங்களாக இருக்கும்.

---

* 2-ம் அத்தியாயத்தின் முதற்பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைப் பார்க்க.

**கூறுகள்.**—இந்த வியாதி தீவிரரோகமாகவும் நாட்பட்டரோகமாகவும் இரண்டுவகையாக உண்டாகிறது.

குறிகள்.

தீவிரரோகம் சாதாரணமாய்க் கோடைக்காலத்தில் காணுகிறது. நாட்பட்டரோகம் குளிர்காலத்தில் காணுகிறது.

திட்டமாய்க் காணப்படும் முதற்குறி யென்னவென்றால், பிராணியின் தேகஉஷ்ணம் அதிகப்படுவதுதான்; பிராணி சுறுசுறுப்பில்லாமல் உற்சாகமற்ற பார்வையுடையதாக இருக்கும்; தலையையும் காதையும் தொங்கப்போட்டுக்கொண்டிருக்கும். வியாதியின் ஆரம்பத்திலே, வயிற்றுவலியும் இரத்தங்கலந்த கழிச்சலும் இருப்பதாகக் காணப்படும்; ஆனால், மலச்சிக்குதான் குடல்சம்பந்தமாய்க் காணப்படும் குறிகளில் பிரதான குறியாகும். மலச்சிக்கு ஆரம்பிக்கும்போது மூத்திரத்தின் நிறமும் மாற ஆரம்பிக்கிறது. பிராணியின் இரண்டு விலாப்புறங்களிலும் வயிறு ஒட்டிக் குழிவிழுந்திருக்கிறது; ஆனால், இந்த வியாதி தீவிரமாக இருந்தால், சாதாரணமாய்ப் பிராணி அதிகமாக மெலிகிறதற்குப் போதுமான காலமிராதபடி அதிதுரிதமாய் முடிவு ஏற்பட்டுவிடுகிறது. இந்த வியாதி கண்டு சொஸ்தமடைகிற பிராணிகள் மிக அதிகமாக மெலிந்துபோவது இந்த வியாதியின் பிற்குறிகளில் விசேஷமான பிற்குறியாகும். (இந்த வியாதி கண்ட பிராணிகளுடைய) சதையின் பலங் குறைந்துபோவது-வியாதி கண்டு சொற்பகாலமானவுடனே உண்டாகி ஸ்பஷ்டமாய் வெளிக்குத் தெரிகிற குறியாகும்; வியாதி கண்ட பிராணி நிற்கும்போது அதன் தேகத்தின் பின்புறம் தள்ளாடுகிறது: முக்கியமாய்ப் பிராணி திரும்பும்போது அந்தப்படி இருக்கிறது. இந்த வியாதி தீவிரமானதாயிருந்தால், மூத்திரம் அதிக நிறமுள்ளதாகிறது; அதாவது, முதலில் சிவப்பாக இருந்து பிறகு கபில நிறமுள்ளதாகவாவது சற்றேறக்குறையக் கறுப்புநிறமுள்ளதாகவாவது மாறுகிறது. சில பிராணிகள் வியாதி கண்டிருப்பதாகத் தெரிந்த பிறகு முப்பத்தாறுமணி நேரத்துக்கு மேல் நாற்பத்தெட்டுமணி நேரத்துக்குள்ளாகவே இறந்துவிடுகின்றன. ஆயினும், இந்த வியாதி தீவிரமானதாயிருந்தால், அது சாதாரணமாக நாலு அல்லது ஐந்து நாள்வரையில் நீடித்திருக்கும். இந்த வியாதி நாட்பட்டதாக இருக்கிறபட்சத்திலே, வியாதி கண்ட பிராணிகள் மெலிவு மேலிட்டுச் சோகைக்குறி கண்டு தளர்ச்சியடைந்து சுமார் பதினைந்துநாளில் சாகின்றன: அவைகள் இதைவிட அதிககாலம் ஜீவித்திருந்தாலும் இருக்கலாம். இந்த வியாதி சொஸ்தமானபிறகு திரும்பவும் திரும்பவும் காணுவது சகசம்; சில சமயங்களில் பிராணிகள் இந்த வியாதியுடனே அனேகமாதகாலம் தள்ளிக்கொண்டுமிருக்கலாம். இந்த வியாதி கண்ட பிராணிகளில் நூற்றுக்கு 40 முதல் 90 வரையில் செத்துப்போகின்றன. இந்த வியாதி கண்டிருக்கும் மந்தைகளில் உண்ணிகள் அனேகமாக எப்போதும் காணப்படுகின்றன; ஆனால், அவைகள் தவறாமல் காணப்படுகின்றன என்பதில்லை; ஏனென்றால், அந்த உண்ணிகள் குஞ்சுகளாயிருக்கிற பருவத்தில்தான் இந்த வியாதியை உண்டாக்குகின்றன.

**பிரேதக்குறிகள்.**—சதை இரத்தமற்றதாயும் தளர்ச்சியடைந்து மிருக்கும்: தேகம் அதிகமாய் மெலிவடையும்: குடல்கள்-நான்காம் இரைப்பை - இவைகளின் உள்தோலிலே சில இடங்கள் இரத்தச்சுரப்பினால் சிவந்திருக்கும்: இரத்தாசயத்தின் உள்தோலில் சிவப்புப்புள்ளிகள் இருக்கும். பிராணியின் அவயவங்களில் மண்ணீரலும் பித்தாசயமும்தான் முக்கியமாக வியாதியினால் பாதிக்கப்பட்டிருக்கும். மண்ணீரல் இரத்தச்சுரப்பினால் மிகவும் பருத்திருக்கும்; பித்தாசயமும் பருத்திருக்கிறது: மேலும், அது சாதாரணமாய் என்ன நிறமுள்ளதாயிருக்கிறதோ அதைவிட அதிகமாக வெளுத்திருக்கிறது; அது மிகவும் இலேசாக முறியக்கூடியதாயுமிருக்கிறது.

பிரேதக்குறிகள்.

**வியாதியைப் பரிசோதித்தறிவது.**—இந்த வியாதி கண்ட பிராணியின் இரத்தத்தைத் தேர்ந்த மிருகவைத்தியர்களைக்கொண்டு பரிசோதித்துப்பார்த்தால், அந்த இரத்தத்தில் இந்த வியாதிக்குக் காரணமான விஷவஸ்து இருப்பதை நிச்சயித்தறியலாம். இந்த வியாதி தீவிரமாயிருந்தால் இதை அடைப்பானென்று தப்பிதமாய்க் கொள்வது சாத்தியம்; ஆனால், இந்த வியாதி காணும் காலத்தில், அது சற்றுத் தீவிரம் குறைவாகவும் நாட்பட்டதாகவும் அனேகமாய்க் காணுவது நிச்சயமாகையால், இந்த வியாதியைச் சீக்கிரமாய்ப் பரிசோதித்தறிந்துகொள்ளவேண்டும்.

வியாதியைப் பரிசோதித்தறிவது.

இந்த வியாதி கண்ட பிராணி இறந்தபிறகு பரிசோதித்துப்பார்க்கும்போது, அதன் சதை முதலியவைகளில் இரத்தம் குறைந்திருப்பதாகக்காணப்படுவது இந்த வியாதிக்கு முக்கியமான ஒரு லட்சணமாகும்.

**சிகிச்சை.**—இந்த வியாதியின் முதற்குறிகள் காணப்பட்டவுடனே மலத்தைப் போக்கத்தக்க மருந்து கொடுக்கலாம் (3-ம் நெ. அல்லது 4-ம் நெ. மருந்து பட்டியைப் பார்க்க). அந்த மருந்து வேலை செய்தால், பிரதிதினம் (ஒரு ட்ராம் அல்லது) காலேயரைக்கால் ரூபாயெடைக்கு க்வினேன் கொடுப்பது நல்லது. மலபந்தத்துக்கு இடங்கொடுக்காமல் மலத்தைப் போக்கத்தக்க மருந்துகள் கொடுத்துவரவேண்டும்; (8-ம் நெ. மருந்துபட்டியிற்கண்ட) உற்சாகபானத்தைக் காலையிலும் மாலையிலும் கொடுத்துவரலாம். (வியாதி கண்ட) பிராணிக்கு நல்ல கஞ்சி கொடுத்து அதன் பலம் குறைந்துபோகாதபடி போஷித்துவரவேண்டும்; பிராணி சொஸ்தமடைந்தவுடனே (10-ம் நெ. மருந்துபட்டியிற்கண்ட) பலவிருத்திமருந்து கொடுக்கவேண்டும்.

சிகிச்சை.

**(வியாதி வராமல்) தடுக்கும் வகை.**—ஆஸ்த்ரேலியாவில் இந்த வியாதி சாதாரணமாய் உண்டாகிறது; கொடுமையாகவும் காணுகிறது; அங்கே இந்த நோய் வராதபடி தடுப்பதற்காக அம்மைகுத்திவருகிறார்கள்.

(வியாதி வராமல்) தடுக்கும் வகை.

இந்த வியாதி கண்ட ஜில்லாக்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட மாடுகளின்மேலுள்ள உண்ணிகள் சாகும்படி அவைகளை மருந்

துத்தண்ணீருள்ள தொட்டிகளில் முழுக்காட்டுகிறார்கள். மாடுகளுக்குக் கந்தகத்தை ஏராளமாகக் கொடுக்கிறபட்சத்திலே, அவைகளை உண்ணிகள் பற்றுவதில்லையென்றும், அதனால் அந்த மாடுகளுக்கு இந்த வியாதி காணுவதில்லையென்றும் சொல்லுகிறார்கள்.

எந்த மேய்ச்சற்பூமியிலாவது இந்த வியாதி உண்டாவதாகக் காணப்பட்டால், அந்த பூமியிலுள்ள தண்ணீரையெல்லாம் வடிப்பதற்காக வகையேற்படுத்தவேண்டும்; உண்ணிகளிருப்பது இந்த வியாதிக்குக் காரணம் என்பதை ஞாபகத்தில் வைத்து, அவைகளை அழிப்பதே நோக்கமாயிருக்கவேண்டும்.

# 14-ம் அத்தியாயம்.

## கழிச்சல்.

பெயர்கள்.

* பெயர்கள்.—இந்த வியாதிக்குப் பேதி, வயிற்றோட்டம், வயிற்றுப்போக்கு, எருக்கல் முதலிய பல பெயர்கள் வழங்குகின்றன.

இயல்பு.

இயல்பு.—இந்த வியாதியில் அடிக்கடி பேதி ஆகிறது; சாதாரணமாக இந்த வியாதி கண்ட பிராணிக்குக் காய்ச்சலாவது முழுதேகத்தையும் பாதிக்கிற மற்றெந்தக் குறியாவது உண்டாவதில்லை; ஆனால், சில சமயங்களில் வயிற்றில் எரிச்சற்குறிகள் உண்டாகலாம். இரைப்பை - குடல் இவைகள் சுகவீனமாயிருக்கும் காரணமாக, மலம் நீர்மயமாகவும் ஜாஸ்தியாகவும் அடிக்கடி போகிறது. சிற்சில சமயங்களில், இந்த வியாதி தொத்திக்கொள்ளுந் தன்மையுடையதாயிருக்கவாம்; முக்கியமாக, இளங்கன்றுகளுக்குக் காணும்போது இந்த வியாதி தொத்திக்கொள்ளக்கூடியதாகவேயிருக்கும்.

காரணங்கள்.

காரணங்கள்.—பிராணி சுகவிரோதமான தீனி அல்லது காரமான செடி கொடி பூண்டுகளைத் தின்பதனாலாவது அசுத்தமான ஜலத்தைக் குடிப்பதனாலாவது இந்த வியாதி சாதாரணமாக உண்டாகிறது.

சில நிலங்களில் இந்த வியாதி உண்டாகிறது; அப்படி உண்டாவதற்குக் காரணம் அந்த நிலங்களில் உண்டாகும் செடி கொடி பூண்டு முதலியவைகளே; அப்படிப்பட்ட நிலங்கள் பெரும்பாலும் சதுப்புநிலங்களாகவும் நன்றாய்த் தண்ணீர் வடிந்துபோகாதவைகளாகவுமிருக்கின்றன. பஞ்சாப் மகாணத்தில் இந்த வியாதிக்கு "பூக்கீ" என்று பெயர்; மேய்ச்சலும் தண்ணீரும் கிடைப்பது அருமையாகி, மாடுகள் சுகவிரோதமான புற்பூண்டுகளையும் காரமான செடிகளையும் மேயும்படிக்கும் மெத்தவும் அசுத்தமான தண்ணீரைக் குடிக்கும்படிக்கும் அவசியம் நேரிடுகிற ருதுக்களில், இந்த வியாதி அந்த மாகாணத்திலுள்ள மாடுகளுக்குச் சென்ற சில வருஷ காலமாகக் கண்டுவருகிறது.

பேதிமருந்தை அளவுக்கதிகமாகக் கொடுப்பதனாலும் இந்த வியாதி உண்டாகலாம். மேலும், இரைப்பையிலும் குடல்களிலும், அளவுக்கதிகமாகத் தீனி உட்கொள்ளப்பட்டிருக்கும்போதும் இந்த வியாதி உண்டாகலாம்.

சுவாசாசய அழற்சியின் கடைசிக் காலத்திலும் பலத்தைக் குறைக்கும் இதர வியாதிகளிலும் தவறாமல் பேதி ஆகிறது. முக்கியமாகக் குடல்கள் சுகவீனப்பட்டிருக்கும்போது, மாடுகளைக் குளிரில் வைத்திருந்தாலும் அவைகளின்மேல திடீரென சில்லென்று காற்று அடிக்கும்படி வைத்திருந்தாலும், இந்த வியாதி காணுவதாகத் தெரியவந்திருக்கிறது.

---

* 2-ம் அத்தியாயத்தின் முதற்பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைப் பார்க்க.

கால்நடைகளை மிகுதியான உஷ்ணத்தில் வைத்திருப்பதும் சில சமயங்களில் இந்த வியாதி காணுவதற்குக் காரணமாயிருக்கிறது.

முதல் மழை விழுந்தவுடனே முதலில் முளைக்கும் பசசைப்புல் உள்ள நிலங்களில் மேயும் மாட்டுமந்தைகளுக்குக் கழிச்சல் காணுவது சாதாரணம்.

பூச்சிகள் குடல்களைப்பற்றியிருப்பதனுல், இந்த வியாதி பெரும்பாலும் உண்டாகிறது. இளங்கன்றுகளுக்குக் காணுகிற தொத்துக் கழிச்சலானது - அந்தக் கன்றுகள் பிறந்தவுடனே அவைகளின் கொப்பூழ்ப்புண்கள் ஆறுவதற்குமுன் அந்தக் கொப்பூழிலுள்ள இரத்தத்திலே ஒருவகையான விஷவஸ்து பிரவேசிப்பது காரணமாக இந்த வியாதி உண்டாகிறதென்று சொல்லப்படுகிறது.

குறிகள்.

குறிகள்.—நீர்மயமான மலம் அபானவாயுவுடனே அடிக்கடி கழியும்; இந்தக் கழிச்சலின் ஆரம்பத்திலே முக்குவதாவது வேதனையாவது இராது. பசி குறையாமலிருக்கலாம்; அசைபோடுவது கொஞ்சம் ஒழுங்கற்றிருக்கலாம்; சுரக்கும் பாலின் அளவு வழக்கத்துக்குக் குறைவாக இருக்கலாம்; ஆனுல், பிராணியின் சாதாரண சௌக்கியத்துக்கு விசேஷமாய்ப் பாதகமுண்டாகாததுபோல் தோன்றுகிறது. கழிச்சல் நெடுங்காலம் இருந்துகொண்டிருந்தால், கழியும்போது பிராணி முக்கும்; முதுகு வில்போல வளையும். பிராணியின் தேகச்செழிப்பு குறைந்ததாகத் தோன்றும்; விலாப்பக்கங்கள் ஒட்டிக் குழிவிழுந்திருக்கும்; உரோமம் சிலிர்த்திருக்கும். மிகுதியாகவோ குறைவாகவோ வேதனையிருப்பதாகத் தெரியும்; சில சமயங்களில் இரத்தமும் கழியலாம்.

குடலைப்பற்றியுள்ள பூச்சிகளாவது அவைகளின் முட்டைகளாவது மலத்தோடு வெளிப்படுகின்றனவா என்று ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும்.

இந்த வியாதியுள்ள இளங்கன்றுகளுக்குப் பூட்டுகளில் சூடாயும் வேதனையாயும் உள்ள வீக்கங்கள் இருக்கலாம். இளங்கன்றுகளுக்கு எப்போதும் இந்த வியாதியின் குறிகள் மிகவும் கடுமையாயிருக்கின்றன; அவைகளின் கழிச்சல் சாதாரணமாய் வெள்ளை நிறமாக இருக்கிறது.

சிகிச்சை.

சிகிச்சை.—இந்த வியாதிக்குச் சிகிச்சை செய்யும்போது அதன் காரணத்துக்குத் தக்கபடி செய்யவேண்டும். சாதாரண கழிச்சல்களில், முந்திய மேய்ச்சல் அல்லது தீனியையும் தண்ணீரையும் மாற்றவேண்டும்; அப்படி மாற்றும்போது புதிதாய்க் கொடுக்கும் தீனியும் ஜலமும் நல்லவைகளாகவும் இனிமையுடையவைகளாகவுமிருக்கின்றனவா என்று கவனிக்கவேண்டும். வியாதியின் ஆரம்பத்தில், சாந்தமான பேதிமருந்து கொடுப்பது நல்லது (4-ம் நெ. மருந்துப்பட்டியைப் பார்க்க). அதனுல் பேதியான பிறகு (13-ம் நெ. மருந்துப்பட்டியிற்கண்ட) பானத்தைக் கொடுக்கவேண்டும்; இந்தப் பானத்தை அவசியமானுல் தினந்தோறும் கொடுக்கவேண்டும். வியாதி கடுமையாயிருக்கிற பிராணிகளுக்கு, அரிசிக்கஞ்சி அல்லது நீர்தெளித்துப் பிசைந்த தவிட்டை மாத்திரம் ஆகாரமாகக் கொடுக்கவேண்

டும். வேதனை அதிகமாயிருந்தால், வயிற்றுக்கு ஒற்றடம் கொடுக்க வேண்டும். வியாதி கண்ட பிராணிக்கு நல்ல சுகமான ஆகாரம் கொடுப்பது முக்கியமானது; கழிச்சல் நின்ற பிறகு சிலநாள்வரையில், தண்ணீர் கொடுப்பதற்குப் பர்த்தியாக, அரிசி - ஆழிவிரை - கோதுமை மாக்கஞ்சிகளை நன்றாகக் கலந்து கொடுப்பதும் முக்கியமானது.

பிராணி பலவீனமாகவும், மெத்தவும் மெலிந்தும் இருந்தால் (9 - ம் நெ., 10 - ம் நெ. மருந்துபட்டிகளிற்கண்ட) பலவிருத்திமருந்தைத் தினந்தோறும் ஒருவேளை அல்லது இரண்டுவேளை கொடுக்க வேண்டும்.

வியாதி நாட்பட்டதாகிவிட்டிருந்தால், (14 - ம்நெ. மருந்துபட்டியிற்கண்ட) மருந்தைக் கொடுக்கவேண்டும்; இதோடுகூட மேலே சொன்ன பலவிருத்திமருந்துகளிலொன்றையும் கொடுக்கவேண்டும்.

குடலைப்பற்றியுள்ள பூச்சிகள் காரணமாகக் கழிச்சல் உண்டாயிருக்கிற பட்சத்திலே, (20, 21 - அல்லது 22 - ம் நெ. மருந்துபட்டியிற்கண்ட) பூச்சிகளை அகற்றுவதற்கான மருந்தை வியாதி கண்ட பிராணிக்குக் கொடுக்கவேண்டும்.

தொத்திக்கொள்ளும் தன்மையுள்ள கழிச்சல் கண்டிருக்கிற கன்றுகள் பெரும்பாலும் செத்துப்போகின்றன; ஆனால், பிராயம் அடைந்த மாடுகளுக்கு மேலே செய்யச்சொல்லியிருக்கிறபடி, அந்தக் கன்றுகளுக்குச் சிகிச்சைசெய்யலாம்; (மாடுகளுக்குக் கொடுக்கும் மருந்தில்) நாலிலொருபங்காகக் கன்றுகளுக்குக் கொடுக்கவேண்டும். மேற்கண்ட சிகிச்சை செய்வதல்லாமல், கொப்பூழைச் சுத்திசெய்து அதில் (28-ம் நெ. மருந்துபட்டியிற்கண்ட) காயமாற்றும் மருந்து போடவேண்டும்.

(வியாதி வராமல்) தடுக்கும் வகை.

**(வியாதி வராமல்) தடுக்கும் வகை.**—வியாதி பரவுவதைத் தடுப்பதற்காக முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் செய்யவேண்டும்; புதிதாகப் பிறந்த கன்றுகளை இந்த வியாதி கண்டுள்ள கன்றுகளுக்குச் சமீபத்தில் எங்கேயாகிலும் கொண்டுபோகக்கூடாது. அவைகளின் கொப்பூழ் எவ்விதமாகவாவது அழுக்குப்படாமல் கவனமாய்ப் பார்த்துக்கொள்ளவேண்டும்; கொப்பூழிலும் அதைச்சுற்றிலுமுள்ள இடத்திலும் அடிக்கடி காயமாற்றும் மருந்து போடவேண்டும்.

## 15–ம் அத்தியாயம்.

### சீதபேதி.

பெயர்கள்.

* **பெயர்கள்.**—இந்த வியாதிக்கு இரத்த பேதி, வயிற்றளைச்சல், வயிற்றுக்கடுப்பு முதலிய பல பெயர்கள் வழங்குகின்றன.

இயல்பு.

**இயல்பு.**—இது பெருங்குடலின் உள்தோலில் குறித்த ஒரு வகையான அழற்சியும் அதோடு சில சமயங்களில் புண்களும் உண்டாகிற வியாதி; இந்த வியாதி காணுகிற பிராணிகளுக்கு மலத்தோடு இரத்தமும் சீதமும் கலந்து விழுகின்றன; மலம் ஏறக்குறைய நீர்மயமாயிருக்கிறது.

காரணங்கள்.

**காரணங்கள்.**—இந்த வியாதி கழிச்சல் நின்றபின் உண்டாகலாம்; அல்லது கால்நடைகள் சுகவிரோதமான புல் பூண்டுகளைத் தின்பதனாலாவது, அசுத்தமான ஜலத்தைக் குடிப்பதனாலாவது, பகற்காலம் அதிக உஷ்ணமாயுள்ள ருதுக்களில் முக்கியமாகக் கால்நடைகளைச் சதுப்புள்ள நிலங்களில் கட்டி இராக்காலங்களில் அவைகளின்மேல் அதிக குளிரும் ஈரமும் படும்படி வைத்திருப்பதனாலாவது உண்டாகலாம்.

சீதபேதியானது - வெக்கை, அடைப்பான் அல்லது மென்னை அடைப்பானின் குறியாயிருக்கலாம்.

குறிகள்.

**குறிகள்.**—சீதபேதியானது கழிச்சலினால் உண்டாயிருக்கிற விஷயத்திலே, 'கழிச்சல்' என்னும் தலைப்பின் கீழ் எழுதியுள்ள குறிகள் காணப்பட்டிருக்கும். முன் எவ்விதமான கழிச்சலும் காணுமல் இந்த வியாதி உண்டாயிருந்தால், இது சாதாரணமாகத் திடீரென்று சம்பவிக்கும்; நடுக்கமும் அதற்குப்பின் காய்ச்சலும் காணப்படவாம்; அதன் பிறகு வியாதி கண்ட பிராணி அடிக்கடி சாணிபோடும்; இதில் சிலபாகம் கடினமான சிறு கட்டிகளாகவும் மற்றப்பாகம் நீர்மயமாகவும் இரத்தமும் சீதமும் கலந்தும் இருக்கும்; இந்தச் சீதம் முட்டையின் தோய்ந்த வெள்ளைக்கருவைப்போலிருக்கும்.

வயிற்றில் வேதனையிருப்பது வயிற்றுவலிக் குறிகளினால் தெரியவரும்; பிராணி அடிக்கடி சாணிபோட முயலும். அது அதிகமாய் முக்குவதனுல் மலக்குடல் வெளியேவரும்.

இந்த வியாதி கண்ட அனேக பிராணிகளுக்கு வாய் - கண்ரெப்பை - இவைகளின் உள்தோலும், உடம்பின் தோலும் சிறிது மஞ்சள்நிறமாயிருப்பதாகக் காணப்படும்; இந்த வியாதியினுல் பித்தாசயம் பாதிக்கப்படுகிறதனுல் இந்தப்படி நேருகிறது.

சிகிச்சை.

**சிகிச்சை.**—வியாதியின் ஆரம்பத்தில், பேதியெண்ணெய் கொடுப்பது நல்லது (4-ம்நெ. மருந்துபட்டியைப் பார்க்க).

---

* 2-ம் அத்தியாயத்தின் முதற்பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைப் பார்க்க.

வயிற்றுக்கு நன்றாக ஒற்றடம் கொடுக்கவேண்டும்; அபான வாய்மூலமாக அடிக்கடி இளஞ்சூடாயுள்ள வெந்நீர் செலுத்தவேண்டும்.

(வியாதி கண்ட) பிராணிக்குக் கஞ்சியைத்தவிர வேறொன்றும் ஆகாரமாகக் கொடுக்கக்கூடாது. பாதி ஆளிவிரையும் பாதி அரிசியும் சேர்த்துக் காய்ச்சிய கஞ்சியை மூன்றுமணிக்கொருதரம் கொடுக்கவேண்டும்; ஒவ்வொருதரம் கொடுக்கும் கஞ்சியிலும் (இரண்டு அவுன்ஸ் அல்லது) ஐந்து ரூபாயெடை உப்பைக் கலந்து கொடுக்கவேண்டும். சீதபேதி நிற்காமல் ஆய்க்கொண்டிருந்தால் (13-ம்நெ. அல்லது 14-ம்நெ. மருந்துபட்டியிற்கண்ட) துவர்ப்பான பானத்தைத் தினம ஒருதரம் அல்லது இரண்டுதரம் கொடுக்கவேண்டும்.

சீதபேதி கண்டு சொஸ்தமடைந்துவருகிற பிராணிகளுக்கு, இனிப்பாகவும் சுலபமாய் ஜீரணமாகத்தக்கதாகவுமுள்ள ஆகாரந்தான்கொடுக்கவேண்டும்; இல்லையானால், இந்த வியாதி அநேகமாய் மறுபடியும காணலாம்.

இந்த வியாதி கண்ட பிராணியைச் சுத்தமாகவும் உலர்ந்து நன்றாக உயர்த்திக் கட்டப்பட்டும் நல்ல காற்றோட்டமுடையதாயுமுள்ள கொட்டிலில் கட்டிவைக்கவேண்டும்; குளிராயுள்ள இராத்திரிகளில் அந்தப் பிராணியைக் கம்பளியால் போர்த்துவைக்கவேண்டும்.

---

# 16-ம் அத்தியாயம்.

## செம்மறியாடுகளுக்குக் காணும் ஊழ்த்தல்நோய்.

இயல்பும் காரணமும்.

இயல்பும் காரணமும்.—இந்த வியாதி ஒருவகையான பூச்சி பித்தாசயத்தில் இருப்பதனால் உண்டாகிறது. மாடுகளும் செம்மறியாடுகளும் தாழ்ந்த பள்ளமான நிலங்களிலும் சதுப்பு நிலங்களிலும் மேய்ந்தால், இந்த வியாதி அவைகளுக்குக் காணுகிறது.

இப்படிப்பட்ட இடங்களில் மேற்சொன்ன பூச்சிகளின் முட்டைகள் காணப்படுகின்றன; அவைகள் (மேயப்படுகிற) புல் பூண்டுகளோடு பிராணிகளின் தேகத்துக்குள்ளே பிரவேசிக்கின்றன.

இவ்விதமாகவே பிணிநீர்ப்பைகள் பித்தாசயத்திலும் நுரையீரலிலும் மற்ற அவயவங்களிலும் உண்டாகி, அதிகமாகவோ அல்லது குறைவாகவோ சேதம் ஏற்படுகிறது. மேலேசொன்ன பூச்சிகளினால் ஆடுகளுக்கு அபாயக்குறிகள் உண்டாகின்றன; ஆனால், அவைகளினால் மாடுகள் சிற்சில சமயங்களில்தான் வெளிக்குத் தெரியும்படியாகப் பாதிக்கப்படுகின்றன.

குறிகள்.

குறிகள்.—இந்த வியாதி வெளிக்குச் சிறிதேனும் குறிகள் தோற்றுவிக்காமல் பிராணிகளைத் தாக்குகிறது; இந்த வியாதி கண்ட ஆடு வரவர இளைத்துப் போகிறது; இடுப்பிலும் பின்பாகத்திலும் கையினால் அழுத்தினால் தோலின்கீழே சடசடென்று சப்தம் கேட்கும். முதலில் தோல் சுகவீனமாகி, மெத்தவும் வெளுத்துப்போகிறது; ரோமம் தோலிற் பிடிப்பில்லாமல் இலேசாகப் பிடுங்கிவிடக்கூடியதாயிருக்கிறது; சொற்பகாலஞ் சென்றபிறகு, தோல் நிறமாறி, அதில் மஞ்சள்நிறமும் கருநிறமும் உள்ள பாகங்கள் காணப்படுகின்றன. மோவாய்க்கட்டையின்கீழே வீக்கம் தோன்றும்; தேகமெங்கும் வீக்கம் உண்டாகும். கண்கள் துலக்கமில்லாமல் போகின்றன; வெள்ளைவிழி மஞ்சள் நிறமாயிருக்கிறது; முதுகு கொஞ்சம் பள்ளமாகத் தாழ்ந்து வயிறு பெருக்கிறது. பிராணிக்குத் தாகம் அதிகமாயிருக்கிறது; சாதாரணமாய் நன்றாகத் தீனி தின்கிறது; வாஸ்தவத்தில் அதிக ஆவலுடன் தின்கிறது; அடிக்கடி இருமுதலும் இந்த வியாதியின் குறியாகும்.

அதிசீக்கிரமாகவோ கொஞ்சம் காலம்சென்றோ கழிச்சல் உண்டாகி, அப்படியேயிருந்து அதிகப்படுகிறது; அதனால் ஆடு படிப்படியாகப் பலங்குறைந்து மெலிவடைந்து சாகிறது.

சிகிச்சை.

சிகிச்சை.—இந்த வியாதி ஒரு மந்தையில் கண்டால் செழிப்பான புல்லாவது சதுப்புநிலங்களின் புல்லாவது முளைக்கத்தக்கவைகளல்லாத மேடாகவும் நன்றாய் நீர்வடிந்தோடக்கூடியவைகளாகவுமுள்ள நிலங்களுக்கு அந்த ஆட்டுமந்தையைக் கொண்டுபோவதுதான் முதலில் செய்யவேண்டிய காரியமாகும். இந்த வியாதி கண்ட ஆட்டை உலர்ந்தும் (வெயில் மழைபடியாமல்) மூடியுமுள்ள [illegible] நிறுத்தி, (9-ம்

நிகூ மருந்துபட்டியிற்கண்ட) பானத்தைத் தினந்தோறும் ஒரு முறை அல்லது இரண்டு முறை கொடுக்கவேண்டும்.

மேட்டுநிலங்களில் முளைத்து உலர்ந்த புல், தானியம், பிண்ணாக்கு இவைகள்போல உலர்ந்தும் இனிப்பாகவும் பலத்தைத்தரத்தக்கதாகவுமுள்ள ஆகாரம் கொடுக்கவேண்டும் ; கொஞ்சம் உப்புசேர்த்த அரிசிக்கஞ்சியும் கொடுக்கலாம்.

(வியாதிவராமல்) தடுக்கும் வகை.

(வியாதிவராமல்) தடுக்கும் வகை —இந்த வியாதி உண்டாவதற்கிடமாயிருப்பதாகத் தெரியவருகிற நிலங்களில் தண்ணீர் நிற்காமல் நன்றாய் வடிந்துபோகும்படியாகச் செய்து, சுண்ணாம்பு - சாம்பல் - உப்பு - இவைகளை எருப்போடவேண்டும்.

பிரேதக்குறிகள்.

பிரேதக்குறிகள்.—சதைகள் குறைந்திருக்கும் ; தோல் சிறிது மஞ்சள்நிறமாயிருக்கும் ; பித்தாசயம் வியாதிப்பட்டிருக்கும். பித்தக்குழலிலும், சில சமயங்களில் நான்காம் இரைப்பை - முதற்குடல்-இவைகளிலும், ஷை பூச்சிகள் காணப்படும். இரத்தம் வெளுத்ததாகவும் நீர்மயமாகவும் இருக்கும்.

# 17-ம் அத்தியாயம்.

## தூரல்வளை அழற்சி அல்லது இருமல்.

பெயர்கள்.

* பெயர்கள்.—இதற்குச் செருமல், புகைச்சல் முதலிய பல பெயர்கள் வழங்குகின்றன.

இயல்பு.

இயல்பு.—இது குரல்வளையையும் நுரையீரலுக்குள் செல்லுகிற அதன் கிளைக்குழல்களையும் பற்றிய அழற்சி நோய். தொண்டை அழற்சிக்குச் சிகிச்சை செய்யாமல் அசட்டையாயிருந்தால், (அவ்வழற்சி குரல்வளையில் பரவி) இந்த வியாதி உண்டாகலாம்.

காரணங்கள்.

காரணங்கள்.—இந்த வியாதி செம்மறியாடுகளுக்கும் கன்றுகளுக்கும் பெருவாரிநோய்போலக் காணும்போது, அவைகளின் குரல்வளைகளில் நூலைபோன்ற சிறு கிருமிகள் இருப்பதே ஏறக்குறைய எப்போதும் அதற்குக் காரணமாயிருக்கிறது; இந்தக் கிருமிகளின் முட்டைகள் ஆகாரத்தோடு உட்கொள்ளப்பட்டாவது வேறேவழியாகவாவது தேகத்தினுள் பிரவேசித்துக் கிருமிகளாகின்றன.

வயதுவந்த மாடுகளுக்கு இந்த வியாதி காணும்போது, அந்த மாடுகளை ஈரம் அல்லது குளிர்ந்த காற்று மேலேபடும்படி கட்டுவதனாலாவது, ஜலதோஷமும் தொண்டை அழற்சியும் உண்டாகக்கூடிய வேறு காரணங்களில் எதனாலாவது இந்த வியாதி சாதாரணமாய் உண்டாகிறது; இந்த வியாதி சில சமயங்களில் தொண்டை அழற்சி உண்டாகும்போது அதனோடுகூட உண்டாகிறது.

குறிகள்.

குறிகள்.—வயதுவந்த மாடுகளுக்கு இந்த வியாதி உண்டானால், அதன் குறிகள் - தொண்டை அழற்சியில் காணப்படும் குறிகளை மெத்தவும் ஒத்திருக்கின்றன. இருமல் முதலில் மிகவும் வறட்டிருமலாக இருக்கிறது; அது (காய்ந்த பொருள்கள் உராயும்போது உண்டாகிற சப்தம்போலச்) சரசரென்ற சப்தமுடையதாயிருக்கிறது. சுவாசிப்பது துரிதப்பட்டு, நெஞ்சில் இழுப்புண்டாகி அந்த சப்தம் கேட்கும்; தொண்டையின் கீழ்ப்பகுதியிலே காதுவைத்துக் கேட்டால் இந்த சப்தம் மிகவும் தெளிவாகக் கேட்கும். சொற்பகாலம் சென்ற பிறகு, குரல்வளையின் உள்தோலிலும் அதன் கிளைக்குழல்களின் உள்தோலிலுமிருந்து கோழை உண்டாவதால், கேடி இருமலின் வறட்டு சப்தம் குறையும்; அப்படிக் கோழை உண்டான பிறகு இருமலின் சப்தம் கறகறென்றிருக்கும்.

பிராணி இருமின பிறகு, அதன் மூக்குத்துவாரங்களிலிருந்தும் வாயிலிருந்தும் சளியும் கோழையும் மிகுதியாகவோ குறைவாகவோ வடியும்.

கன்றுகளும் செம்மறியாடுகளும் மேலேகண்ட நூல்போன்ற கிருமிகளினால் பாதிக்கப்பட்டால், அவைகள் அடிக்கடி இருமுகின்

---

* 2-ம் அத்தியாயத்தின் முதற்பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைப் பார்க்க.

றன ; இந்த இருமல் ஒருமாதிரியான வறட்டிருமலாக இரு வைகளுக்கு அடுத்தடுத்து இருமல் வருகிறது. அந்த இரும சப்தம் பாதி நெஞ்சிவிழுப்பதைப்போன்ற சப்தமாயும் பாதி இரும சப்தமாயும் இருக்கும். வியாதி கண்ட பிராணிகள் இருமுவதற்குச் சௌகரியமாயிருக்கும்படியாகத் தலையையும் கழுத்தையும் நீட்டிக் கொஞ்சம் தாழ்த்தி வைத்து முன்னங்கால்களை முன்னுக்குத் தள்ளி நிறுத்தி, முன் முழங்கால்களை வெளிப்புறமாக வைத்துக்கொண்டிருக்கின்றன ; அவைகள் குரல்வளையிலும் அதன் கிளைக்குழல்களிலுமுள்ள கெட்டியான கோழையில் தங்கியிருந்து அரித்துக்கொண்டிருக்கிற கிருமிகளை இருமி வெளிப்படுத்தப் பிரயாசப்படுகின்றன. அவைகள் படிப்படியாக மெலிந்து இளைத்துப்போகின்றன. சாதாரணமாக இரண்டல்லது மூன்று வாரத்தில் மரணம்நேரிடுகிறது.

இந்த வியாதி யாதொரு மந்தையில் ஒரு பிராணிக்குக் கண்டால், இது அதே மந்தையில் அநேக பிராணிகளுக்குச் சாதாரணமாய்க் காணும்.

சிகிச்சை.

சிகிச்சை.—வயதுவந்த மாடுகளினிடத்தில் இந்த வியாதியின் குறிகள் காணப்பட்டால், உடனே சிகிச்சை செய்யவேண்டும்.

தொண்டையின் கீழ்ப்பகுதியிலும், கழுத்திலும் மார்புக்கூட்டிலும் கடுகுப்பற்று பூசவேண்டும். (16-ம்நெ. மருந்துபட்டியிற்கண்ட) பானத்தை மிகுந்த * ஜாக்கிரதையுடன் கொடுக்கவேண்டும்.

வியாதி கண்ட பிராணி சுவாசிப்பதற்குச் சுத்தமான நல்ல காற்று வரும்படியான இடத்தில் தங்கும்படி அதைக் கட்டிவைக்கவேண்டும் ; ஆகையால், அதைக் காற்றோட்டமில்லாத அசுத்தமான கொட்டிலில் கட்டிவைக்கக்கூடாது. அரிசிக்கஞ்சி அல்லது ஆழிவிரைக் கஞ்சி அல்லது தவிட்டுக்கஞ்சியில் 8-ம்நெ. சூரணத்தைத் தினம் ஒரு தரம் அல்லது இரண்டுதரம் கலந்து கொடுக்கவேண்டுமேயொழிய வேறொன்றுங் கொடுக்கக்கூடாது ; குளிராயுள்ள இராக்காலங்களில் பிராணியைக் கம்பளிகொண்டு போர்த்துவைப்பதோடுகூட, அதற்கு நன்றாய்க் காய்ந்த படுக்கை போடவேண்டும்.

குரல்வளையிலும் அதன் கிளைக்குழல்களிலும் மேற்சொன்ன நூல்போன்ற சிறு கிருமிகளிருப்பதனால் கன்றுகளும் செம்மறியாடுகளும் பாதிக்கப்பட்டால் (16-ம்நெ. மருந்துபட்டியிற்கண்ட) பானத்தைக் கொடுக்கலாம். ஷை பானத்தில் கன்றுக்கு நாலிலொரு பங்கும் ஆட்டுக்கு ஆறிலொருபங்கும் கொடுப்பது சரியான அளவாகும். அந்தப் பிராணிகளுக்கு ஆகாரத்தோடு தாராளமாக உப்புசேர்த்துக் கொடுக்கவேண்டும்.

அநேக பிராணிகளுக்கு இந்த வியாதி கண்டிருக்கிறபட்சத்திலே, அவைகளைத் தினந்தோறும் ஒரு கொட்டிலில் அடைத்துக் கதவுகளையும் ஜன்னல்களையும் மூடிக் கந்தகப்புகையூட்டுவது நல்லது.

---

* மருந்து இரைக்குழலுக்குள் செல்வதற்குப் பர்த்தியாகக் கொஞ்சமாவது தவறிக் குரல்வளைக்குட்சென்றால், இந்த வியாதி அதிகப்படுவதுமல்லாமல் பிராணாபாயமும் உண்டாகலாம்.

[illegible]ந்தகப்புகையை உள்ளே சுவாசிப்பதனால் இருமல் [illegible] இருமல் அதிகமாய்ப் பிராணிகள் கஷ்டப்படுவதா[illegible]தவுடனே, கொட்டிலைத் திறந்து புகையூட்டுவதை நிறுத்[illegible] வேண்டும். பிராணிகளைப் பார்த்துக்கொள்ளும் வேலைக்கா[illegible]ன பிராணிகளுக்குப் புகையூட்டுங்காலத்தில் அதனாலுண்டாகக்கூடிய பலனைக் கவனிக்கும்பொருட்டு அந்தப் பிராணிகளோடுகூட கொட்டிலிலேயே இருக்கவேண்டும். இந்தப்படி புகையூட்டுவதை ஒருநாள்விட்டொருநாள் செய்துவரலாம். பலதடவைகளில் மிருக வைத்தியர்கள் இந்த வியாதிக்காகக் குரல்வளைக்குள் சில மருந்துகளைச்செலுத்துகிறார்கள்; அதனால் மிகவும் நல்ல பிரயோஜனம் உண்டாகிறது.

## 18-ம் அத்தியாயம்.

### நஞ்சிடுவது.

தற்செயலாகத் தீனியோடு உட்கொள்ளப்பட்டோ அ… மோசமாய்த் தின்னக் கொடுக்கப்பட்டோவுள்ள நஞ்சினால் மாடுக… மரணமடைகின்றன. நல்ல தீனியாயிருக்கும் செடிகளை மாடுகள அளவுக்கதிகமாகத் தின்றால், அவைகளினால் சிலசமயங்களில் சில விசேஷ சந்தர்ப்பங்களிலே, விஷக்குறிகள் உண்டாகின்றன.

நஞ்சின் இயல்பு.

**நஞ்சின் இயல்பு.**—நஞ்சு தாவரவர்க்கத்தைச்சேர்ந்ததாகவாவது தாதுவர்க்கத்தைச்சேர்ந்ததாகவாவது இருக்கலாம்.

இந்தியாவின் சில பாகங்களில் சக்கிலியர்கள் மாடுகளின் தோலை அடையும் பொருட்டு அவைகளுக்கு நஞ்சிடுகிறார்கள். மாடுகள் செத்துப்போய்விட்டால் அவைகளை வெளியே கொண்டுபோய்ப் போட்டுவிடுவது இந்தியா முழுவதிலும் சாதாரணமான வழக்கமாயிருக்கிறது; அவைகளின் தோல்கள் (அவைகள் இறந்த) கிராமத்துச் சக்கிலியருக்குரிய மேல்வரும்படியாகக் கொள்ளப்படுகின்றன. சில ஜில்லாக்களிலே, தோல்களை எடுத்துக்கொள்ளும் பாத்தியதைக்காக ஜமீன்தாருக்குச் சக்கிலியர் வரி செலுத்துகிறார்கள்.

சக்கிலியர் தோல்களைப் பெரும்பாலும் தோல்வியாபாரிகளுக்கு விற்கிறார்கள்: அனேக ஜில்லாக்களில் தோல்வியாபாரியும் சக்கிலியரும் உடன்படிக்கை யெழுதிக் கையெழுத்து வைக்கிறார்கள்; அதனால், சக்கிலியர்கள் குறித்த ஒரு காலத்தில் இத்தனை தோல்கள் சர்ப்பராசெய்தால் அவைகளுக்காகத் தோல்வியாபாரிகள் இவ்வளவு பணம் கொடுப்பதாக ஒப்பந்தம்செய்துகொள்ளுகிறார்கள். தோல்வியாபாரிகள் சக்கிலியருக்கு முன்பணமாகக் கொஞ்சம் தொகை கொடுப்பது வழக்கமாயிருக்கிறது.

இதனால் சக்கிலியர் ஒப்பந்தஉடன்படிக்கையிற்கண்ட காலத்திற்குள் போதுமான தோல் அடையும்பொருட்டு, மாடுகளுக்கு நஞ்சிடுவதற்குப் பெரும்பாலும் இடமுண்டாகிறது; அவர்கள் மாடுகளுக்குத் தாங்களே நஞ்சிடும்போதாவது தங்கள் மனைவி மக்களைக்கொண்டு நஞ்சிடும்போதாவது அனேகதடவைகளில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

நஞ்சிடும் விதம்.

**நஞ்சிடும் விதம்.**—நஞ்சைக் கொஞ்சம் நெய்யல்லது மாவில் கலந்து வாழையிலை அல்லது வேறே இலையில் சுருட்டி, மாட்டின் வாய்க்குள் வைப்பது அல்லது அது தீனி தின்னும்போது அது தின்றுவிடும்படியாக அதன் எதிரே தரையில் போடுவது சாதாரணமாய் நஞ்சிடும் மாதிரியாகும்.

மேய்ச்சல்நிலத்தில் இனிமையான புல்லுள்ள பாகத்திலே நஞ்சைத் தூவுவது மற்றொரு மாதிரியாகும்.

கூர்மையான ஆயுதத்தைக்கொண்டு தோலின்மூலமாகத் தேகத்தின் எந்தப் பாகத்திலாவது மலத்துவாரம் அல்லது பெண்குறிக்குள்ளாவது நஞ்சைச் செலுத்துவது மூன்றாவது மாதிரியாகும்.

பாஷாணம் அல்லது மஞ்சட் பாஷாணத்தினின்றும் யப்பட்ட மாதிரிகளில் ஒரு மாதிரி நஞ்சுதான் சாதாரண யோகிக்கப்படுகிற நஞ்சாகும்; அவைகளில் பெரும்பாலும் பாகிக்கப்படுவது வெள்ளைப்பாஷாணத்தினின்றும் செய்யப்பட் துதான். சில வேளைகளில் ஊமத்தை-* வசநாவி-எருக்கு-எட்டி-இவைகளைப்போன்ற தாவரவர்க்கத்தைச்சேர்ந்த நஞ்சுகள் உப யோகிக்கப்படுகின்றன.

வெக்கைநோய் என்ற சாக்கை வைத்துக்கொண்டு வெகுசாய் மாடுகளுக்குப் பெரும்பாலும் விஸ்தாரமாக நஞ்சிட்டுவருகிறார்கள்; எனவே, யாதொரு ஜில்லாவில் வெக்கைநோய் பரவியிருக்கும் போது, மாடுகளை நஞ்சிட்டுக் கொன்று அதிகமாகத் தோல்கள் சம்பாதிக்கிறார்கள். மேலும், வெக்கைநோய் தொத்திக்கொள்ளும் தன்மையுள்ளதென்று சக்கிலியர்களுக்கு நன்றாகத் தெரியும்; இந்த வியாதியினால் இறந்த மாட்டின் இரைப்பைகளிலும் குடல்களிலும இருந்தவைகளைச் சக்கிலியர் எடுத்துக்கொண்டு நெடுந்தூரத்திலுள்ள வெக்கைநோயில்லாத ஒரு கிராமத்துக்குப்போய், அங்கேயுள்ள மாடுகளுக்கு அந்த வியாதி காணும்படியாகவும் தாங்கள் நூதனவழியாய்த் தோல்கள் அடையக்கூடியவர்களாயிருக்கும்பொருட்டும் அங்கே இருக்கிற மேய்ச்சல்நிலங்களில் தெளித்ததாக எழுதிவைத்திருக்கிறது.

சில சமயங்களில் ஆமணக்கஞ் செடியையும் அதன் விதையையும் தின்பதனாலும் மழையில்லாமல் மேய்ச்சலுக்குப் புல் கிடைப்பது அருமையாயிருக்கும் ருதுக்களிலே காரமான பூண்டு செடிகளை மேய்வதனாலும் மாடுகள் நஞ்சுட்கொண்டவைகளாகின்றன.

குறிகள்.

குறிகள்—ஒரு எருது அல்லது பசு அதிக அளவாக நஞ்சு தின்ற போதாவது நஞ்சிடப்பட்டபோதாவது, உண்டாகுங்குறிகள் எவையென்றால்:—பிராணி திடீரென்று அசௌக்கியம் அடைகிறது; அதன் உடம்பு நடுங்குகிறது; மிகக் கொடிய வயிற்றுவலி உண்டாகிப் பிராணி வயிற்றைப் பின்னங்கால்களாலும் கொம்புகளாலும் அடித்துக்கொள்கிறது; அடிக்கடி விலாப்பக்கமாகப் பார்க்கிறது; வாயில் நுரை தள்ளுகிறது; அதிக தாகமிருக்கிறது; ஜன்னிக்குறிபோன்ற வலிப்புகள் வெகு அதிகமாய் உண்டாகின்றன. வயிற்றுப் பொருமற் குறிகளும் காணப்படுகின்றன; சாணி அடிக்கடி போடுகிறது; கழிச்சல் ஆரம்பிக்கிறது; அதோடு அதிகமாகவோ குறைவாகவோ இரத்தமும் கழிகிறது; சாதாரணமாக இரண்டுமணி முதல் நாலுமணி நேரத்துக்குள்ளாக மரணம் நேரிடுகிறது. மரணம் நேரிடச் செல்லுங் காலமானது கொடுக்கப்பட்ட நஞ்சின் அளவையும் வகையையும் பொறுத்ததாயிருக்கிறது.

சிகிச்சை.

சிகிச்சை.—சாதாரணமாகக் கொடுக்கப்படும் நஞ்சின் அளவு மிகவும் அதிகமாயிருப்பதால், சிகிச்சை செய்து பிரயோஜன முண்டாவது அபூர்வம்; அ

---

* பச்சை நாவி என்றும் வழங்குகிறது.

ன்றியும், கொடுக்கப்பட்ட நஞ்சுக்கு மாற்று மருந்துகள் டையவர்கள் கைவசத்திலிருக்கிறதில்லை.

கொடுக்கப்பட்ட நஞ்சின் அளவு குறைவாகவிருந்து குறிக கொடூரமாயிராதபட்சத்திலே. (1-ம் நெ. அல்லது 2-ம் நெ. ம ந்து பட்டியிற்கண்ட) பானத்தை உடனே கொடுக்கவேண்டும். * ஆழிவிரைக்கஞ்சியை ஏராளமாகக் கொடுக்கலாம்; ஆனால், வயிற்றுநோவும் கழிச்சலும் நிற்கிறவரையில் தண்ணீர் கொடுக்கக் கூடாது.

நீர்தெளித்துப் பிசைந்த தவிட்டிலே வெந்த ஆழிவிரைப்பிண்ணாக்கில் கொஞ்சம் சேர்த்துக் கொடுக்கவேண்டும்; ஒருநாள் அல்லது இரண்டு நாளானபின் பச்சைப்புல் வைக்கலாம்; ஆனால், கரடுமுரடான புல் வைக்கக்கூடாது.

நஞ்சைக் கண்டுபிடிப்பது.

**நஞ்சைக் கண்டுபிடிப்பது.**—மாட்டுக்குடையவர்கள் தங்களுடைய மாடுகளுக்கு நஞ்சு வைக்கப்பட்டுவருகிறதென்று நம்புவதற்கு நியாயமிருந்தால், அவர்கள் (இறந்தமாடுகளின்) நான்காம் இரைப்பையிலும் சிறுகுடலின் ஆரம்பஸ்தானத்திலும் இருப்பதில் சிலவற்றையும், அந்த இரைப்பை குடல் இவைகளின் ஒரு சிறு பாகத்தையும், உதாரணமாக, இரைப்பையும் குடலும் சந்திக்கிற இடத்திலே ஒரு சிறு பாகத்தையும் ஜாக்கிரதையாக எடுத்து ஒருபெரிய புட்டியில் போட்டுப் பின்பு அதில் காரமான சாராயத்தை விட்டு நிரப்பி, நன்றாக மூடிபோட்டு அடைத்து, ரசாயன பாகுபாடு செய்வதற்காக அனுப்பவேண்டும்.

மேற்சொன்ன புட்டியை ரசாயன பரிசோதகருக்கு (Chemical Examiner) எவ்விதம் அனுப்பவேண்டுமென்பதைத் தெரிவிக்கும் விஷயத்தில் வேண்டிய உதவி செய்வதற்கு ஜில்லா ஸிவில் ஸர்ஜன் அல்லது மாஜிஸ்ட்ரேட் எப்போதும் சித்தமாயிருப்பார்.

---

* ஆழிவிரை கிடைக்காத இடங்களில் அரிசிக்கஞ்சியைக் கொடுக்கலாம்.

# 19-ம் அத்தியாயம்.

## மருந்துபட்டிகள்,

கீழே இந்திய நிறைகளும் அளவுகளும் இங்க்லிஷ் நிறைகளும் அளவுகளும் சற்றேறக்குறையச் சரியாக விவரித்துக் காட்டப்படுகின்றன.

மருந்துபட்டிகளிற்கண்ட நிறைகளும் அளவுகளும் அடியிற்கண்ட அட்டவணைகளின்படி இருக்கின்றன:—

### நிறை.

1 ஸ்க்ருபில் ... ... 1 அரைக்கால் ரூபாயெடை.
1 ட்ராம் ... ... 3 அரைக்கால் ரூபாயெடை.
3 ட்ராம் ... ... 1 தோலா அல்லது 1 ரூபாயெடை.
1 அவுன்ஸ் ... ... ($\frac{1}{2}$ சிட்டாக்) $2\frac{1}{2}$ ரூபாயெடை.
1 பவுன் (அல்லது ராத்தல்). ($8$ சிட்டாக்) $\frac{1}{2}$ சேர். *

### அளவு.

1 மினிம் ... ... 1 துளி.
1 திரவ ட்ராம் ... ... 60 துளி.
4 திரவ ட்ராம் ... ... ($\frac{1}{4}$ சிட்டாக்) அரைக்கால்வீசம் படி. †
1 திரவ அவுன்ஸ் ... கால்வீசம் படி.
1 பயின்ட் ... ... காலேவீசம் படி.
1 க்வார்ட் ... ... ($1\frac{1}{4}$ சேர்) அரையேஅரைக்கால் படி.
1 காலன் ... ... $2\frac{1}{2}$ படி.

ஒவ்வொரு தடவையும் கொடுக்கவேண்டிய மருந்துகளின் அளவை, பிராணிகளின் வயசுக்குத் தக்கபடி ஒழுங்குபடுத்தவேண்டும். இரண்டு வயசுள்ள மாடுகளுக்கும் ஆடுகளுக்கும் - வயதுவந்த பிராணிகளுக்குக் கொடுக்கக்கூடிய அளவுக்கு மருந்துகள் கொடுக்கலாம்.

பின்வரும் மருந்துபட்டிகளில் குறித்த மருந்தளவுகள், வேறுவிதமாகக் கூறப்பட்டிருந்தாலொழிய, வயதுவந்த மாடுகளுக்காக நிர்ணயித்துள்ள அளவுகளாகும். செம்மறியாடுகளுக்கும் வெள்ளாடுகளுக்கும்-மாடுகளுக்குக் கொடுக்கும் மருந்தளவில் உத்தேசமாக ஆறிலொருபங்கு கொடுக்கலாம்.

வேறுவிதமாகச் சொல்லப்பட்டிருந்தாலொழிய, வெளியே போடத்தக்கவைகளென்று கீழேகண்ட மருந்துகளை மாடுகளுக்கும் ஆடுகளுக்கும் போடலாம்.

### பேதிமருந்துகள்.

1.

கறியுப்பு அல்லது பேதியுப்பு. } 12 அவுன்ஸ்=30 ரூபாயெடை.

---

* இந்தச் சேர் எண்பது ரூபாயெடை கொண்டதாகும்.
† இந்தப் படி பட்டினம் படி.

கரியபோளம் (மூஷாம்பரம்). 4 ட்ராம் $= 1\frac{1}{4}$ ரூபா
சக்கு ... ... 4 ட்ராம் $= 1\frac{1}{4}$ ரூபாயெ
வெல்லப்பாகு ... ... 8 அவுன்ஸ் $= 1$ ஆழாக்கு (
ரூபாயெடை).

இவைகளை (ஒருக்வார்ட் அல்லது) அரையேஅரைக்காற்படி வெ
ந்நீரில் நன்றாகக் கலந்து இளஞ்சூடாயிருக்கும்போது கொடுக்கவே
ண்டும்.

இது வயதுவந்த எருது அல்லது எருமைக்குக் கொடுக்கவேண்டிய அளவு: அரைவளர்ச்சியுள்ள சிறிய மாட்டுக்கு இதில் பாதியும் வயதுவந்த ஆட்டுக்கு ஆறிலொருபங்கும் கொடுக்கவேண்டும்.

2.

* ஆழிவிரை எண்ணெய் ... 10 அவுன்ஸ் = அரைக்காலே அரைவீசம் படி.
நல்லெண்ணெய் ... 10 அவுன்ஸ் = அரைக்காலே அரைவீசம் படி.
நேர்வாள எண்ணெய் ... 30 துளி.

இவைகளைக் கலந்து வயதுவந்த பிராணிகளுக்குப் பேதிமருந்தாகக் கொடுக்கலாம்; இதில் ஆறிலொருபங்கு ஆட்டுக்குக் கொடுக்க வேண்டிய அளவு.

மலத்தைப் போக்கத்தக்க (சுகபேதி) மருந்துகள்.

3.

கறியுப்பு ... ... 4 அவுன்ஸ் = 10 ரூபாயெடை.
கந்தகப்பொடி ... 3 அவுன்ஸ் = $7\frac{1}{2}$ ரூபாயெடை.
சுக்குப்பொடி ... ... 4 ட்ராம் = $1\frac{1}{4}$ ரூபாயெடை.
வெல்லப்பாகு ... ... 3 அவுன்ஸ் = $7\frac{1}{2}$ ரூபாயெடை.

(ஒருக்வார்ட் அல்லது) அரையேஅரைக்காற்படி வெந்நீரில் நன்றாகக் கலந்து இளஞ்சூடாயிருக்கும்போது கொடுக்கவேண்டும். இதில் ஆறிலொருபங்கு ஆட்டுக்குக் கொடுக்கவேண்டும்.

4.

ஆமணக்கெண்ணெய் ... 10 அவுன்ஸ் = அரைக்காலே அரைவீசம் படி.
ஆழிவிரை யெண்ணெய் ... 6 அவுன்ஸ் = ஒன்றரைவீசம் படி.

இவைகளைக் கலந்து சுகபேதி மருந்தாகக் கொடுக்கலாம்.

---

* ஆழிவிரை எண்ணெய் கிடையாத இடங்களில் அதற்குப்பிரதியாக ஆமணக்கெண்ணெயை உபயோகிக்கலாம்.

## காய்ச்சல் மருந்துகள்.

5.

| | |
|---|---|
| ..ர்ப்பூரம் ... ... | 2 ட்ராம் = 6 அரைக்கால்ரூபாயெடை. |
| வெடியுப்பு ... ... | 3 ட்ராம் = 1 ரூபாயெடை. |
| சாராயம் ... ... | 2 அவுன்ஸ் = அரைவீசம் படி. |

கர்ப்பூரத்தைச் சாராயத்தில் கரைத்தபின் அதில் வெடியுப்பைச் சேர்த்து (ஒரு க்வார்ட் அல்லது) அரையே அரைக்காற்படி குளிர்ந்த ஜலத்தில் விட்டுக் கொடுக்கவேண்டும்.

6.

| | |
|---|---|
| கறியுப்பு ... ... | 1 அவுன்ஸ் = $2\frac{1}{2}$ ரூபாயெடை. |
| வெடியுப்பு ... ... | 4 ட்ராம் = $1\frac{1}{4}$ ரூபாயெடை. |
| நிலவேம்புப்பொடி ... | 1 அவுன்ஸ் = $2\frac{1}{2}$ ரூபாயெடை. |
| வெல்லப்பாகு ... ... | 4 அவுன்ஸ் = 10 ரூபாயெடை. |

(ஒரு க்வார்ட் அல்லது) அரையே அரைக்காற் படி தண்ணீரில் கொடுக்கவேண்டும்.

## உற்சாக மருந்துகள்.

7.

| | |
|---|---|
| நாட்டுச் சாராயம் ... | 4 அவுன்ஸ் = வீசம் படி. |
| சுக்குப்பொடி ... ... | 1 அவுன்ஸ் = $2\frac{1}{2}$ ரூபாயெடை. |
| (சாதாரண) மிளகுப்பொடி | $\frac{1}{2}$ அவுன்ஸ் = $1\frac{1}{4}$ ரூபாயெடை. |

(ஒரு க்வார்ட் அல்லது) அரையே அரைக்காற் படி தண்ணீரில் நன்ருகக் கலந்து கொடுக்கவேண்டும்.

8.

| | |
|---|---|
| நவச்சாரம் (நவாசாரம்) ... | $\frac{1}{2}$ அவுன்ஸ் = $1\frac{1}{4}$ ரூபாயெடை. |
| சுக்குத்தூள் அல்லது ஓமம் | 3 ட்ராம் = 1 ரூபாயெடை. |

(ஒரு க்வார்ட் அல்லது) அரையே அரைக்காற் படி குளிர்ந்த ஜலத்தில் கலந்து கொடுக்கவேண்டும்.

## பலவிருத்தி மருந்துகள்.

9.

| | |
|---|---|
| அன்னபேதி ... ... | 3 ட்ராம் = 1 ரூபாயெடை. |
| கறியுப்பு ... ... | 1 அவுன்ஸ் = $2\frac{1}{2}$ ரூபாயெடை. |

இவைகளைப் பொடியாக்கிக் கலந்து தினம் ஒருவேளை... வேண்டும். இதில் ஆறிலொருபங்கு ஆட்டுக்குத் தினந... கொடுக்கவேண்டும்.

10.

| | |
|---|---|
| பெருஞ்சீரகம் அல்லது சோம்பு. | 3 ட்ராம் = 1 ரூபாயெடை. |
| நிலவேம்பு ... ... | 1 அவுன்ஸ் = $2\frac{1}{2}$ ரூபாயெடை. |
| ஏலம் ... ... | 3 ட்ராம் = 1 ரூபாயெடை. |
| ஓமம்... ... ... | 3 ட்ராம் = 1 ரூபாயெடை. |

நன்றாகக் கலந்து தினந்தோறும் ஆகாரத்தோடு சேர்த்துக் கொடுக்கவேண்டும்.

உடற்குணம் மாற்றும் மருந்துகள்.

11.

| | |
|---|---|
| வெடியுப்பு ... ... | 3 ட்ராம் = 1 ரூபாயெடை. |
| கந்தகம் ... ... | 1 அவுன்ஸ் = $2\frac{1}{2}$ ரூபாயெடை. |
| சுக்கு ... ... ... | 1 அவுன்ஸ் = $2\frac{1}{2}$ ரூபாயெடை. |

நன்றாகக் கலந்து நீர்மயமான கஞ்சியிலாவது ஆகாரத்திலாவது சேர்த்துத் தினம் ஒருவேளை அல்லது இரண்டுவேளை கொடுக்கவேண்டும்.

12.

| | |
|---|---|
| கரிய போளம் (மூஷாம்பரம்). | 3 ட்ராம் = 1 ரூபாயெடை. |
| கறியுப்பு ... ... | 1 அவுன்ஸ் = $2\frac{1}{2}$ ரூபாயெடை. |
| சுக்கு ... ... ... | 1 அவுன்ஸ் = $2\frac{1}{2}$ ரூபாயெடை. |
| கந்தகம் ... ... | 1 அவுன்ஸ் = $2\frac{1}{2}$ ரூபாயெடை. |

இவைகள் எல்லாவற்றையும் நன்றாகப் பொடிபண்ணினபிறகு (4 அவுன்ஸ் அல்லது) 10 ரூபாயெடை வெல்லப்பாகு சேர்த்துச் சூடான நீர்மயமாயுள்ள அரிசிக்கஞ்சியில் (ஒரு க்வார்ட் அல்லது) அரையே அரைக்காற்படியோடு கலந்து இளஞ்சூடாயிருக்கும்போது கொடுக்கவேண்டும்.

இப்படி இரண்டு நாளைக்கு அல்லது மூன்று நாளைக்கொருமுறை கொடுக்கவேண்டும்.

(உள்ளுக்குக் கொடுக்கும்) துவர்மருந்துகள்.

13.

| | |
|---|---|
| பொடிசெய்த சிமைச்சுண்ணாம்பு. | 1 அவுன்ஸ் = $2\frac{1}{2}$ ரூபாயெடை. |
| காசுக்கட்டி ... ... | $\frac{1}{2}$ அவுன்ஸ் = $1\frac{1}{4}$ ரூபாயெடை. |
| சுக்கு ... ... ... | $\frac{1}{2}$ அவுன்ஸ் = $1\frac{1}{4}$ ரூபாயெடை. |

... ... 1 ட்ராம் = 3 அரைக்கால் ரூபாயெடை.

சசாராயம் ... 2 அவுன்ஸ் = அரைவீசம் படி.

ன்ருகக் கலந்து (ஒரு பயின்ட் அல்லது) காலேவீசம் படி ஆழிவி க்கஞ்சியில் கொடுக்கவேண்டும்; கழிச்சல் நிற்கும்வரையில் இப்படி தினம் காலையிலும் மாலையிலும் கொடுக்கலாம்.

மேற்குறித்த அளவில் நாவிலொரு பங்கு கன்றுக்கும், ஆறிலொரு பங்கு ஆட்டுக்கும் பன்னிரண்டிலொரு பங்கு ஆட்டுக்குட்டிக்கும் கொடுக்கலாம்.

## 14.

மயில்துத்தப்பொடி ... 3 ட்ராம் = 1 ரூபாயெடை.
தண்ணீர் ... ... 1 க்வார்ட் = அரையே அரைக்காற்படி.

நன்ருகக் கரைத்தபின் கொடுக்கவேண்டும்.

### வேதனை குறைக்கும் மருந்துகள்.

## 15.

கஞ்சா இலை ... ... 3 ட்ராம் = 1 ரூபாயெடை
அல்லது அல்லது
கஞ்சா சத்து ... ... 1 ட்ராம் = 3 அரைக்கால்ரூபாயெடை.
பெருங்காயம் ... ... 3 ட்ராம் = 1 ரூபாயெடை.
நாட்டுச்சாராயம் ... 4 அவுன்ஸ் = வீசம் படி.

(ஒரு க்வார்ட் அல்லது) அரையே அரைக்காற்படி ஜலத்தில் நன்ருகக் கலந்து கொடுக்கவேண்டும்.

## 16.

(டர்ப்பென்டைன்) கர்ப்பூரத் தைலம். 1 அவுன்ஸ் = கால்வீசம் படி.
ஆழிவிரை எண்ணெய் ... 1 பயின்ட் = காலேவீசம் படி.

கலந்துகொடுக்கவேண்டும்.

## 17.

அபின் ... ... 3 ட்ராம் = 1 ரூபாயெடை.
பெருங்காயம் ... ... 3 ட்ராம் = 1 ரூபாயெடை.
சுக்கு ... ... 3 ட்ராம் = 1 ரூபாயெடை.
(சாதாரண) மிளகு ... 3 ட்ராம் = 1 ரூபாயெடை.
நாட்டுச்சாராயம் .. ... 4 அவுன்ஸ் = வீசம் படி.

எல்லா மருந்துகளையும் நன்ருகப் பொடிபண்ணினபிறகு சாராயத்தில் கரைத்து (ஒரு க்வார்ட் அல்லது) அரையே அரைக்கால் படி ஜலத்தில் கலந்து கொடுக்கவேண்டும்.

வாய்கழுவும் மருந்துநீர்.

18.

படிக்காரம் (சீனக்காரம்) ... 4 ட்ராம்=$1\frac{1}{4}$ ரூபாயெ[illegible]
தண்ணீர் ... ... 1 பயின்ட்=காலேவீசம் [illegible]

கரைத்து வாய்கழுவும் நீராகவாவது, புண் ஆற்றும் நீராக வது உபயோகிக்கலாம்.

19.

வெண்காரம் ... ... 4 ட்ராம்=$1\frac{1}{4}$ ரூபாயெடை.
தண்ணீர் ... ... 1 பயின்ட்=காலேவீசம் படி.

கரைத்து வாய்கழுவும் நீராகவாவது புண் ஆற்றும் நீராகவா வது உபயோகிக்கலாம்.

கிருமிகளை அகற்றுவதற்கான மருந்துகள்.

20.

(டர்ப்பென்டைன்) கர்ப்பூரத் தைலம் ... ... 2 அவுன்ஸ்=அரைவீசம் படி.
* ஆழிவிரையெண்ணெய் ... 1 பயின்ட்=காலேவீசம் படி.

பிராணியைப் பன்னிரண்டுமணி நேரம் பட்டினி போட்டுவைத்திருந்து கொடுக்கவேண்டும்.

21.

கறியுப்பு ... ... 2 அவுன்ஸ்=5 ரூபாயெடை.
அன்னபேதிப்பொடி ... $\frac{1}{2}$ அவுன்ஸ்=$1\frac{1}{4}$ ரூபாயெடை.
கந்தகப்பொடி ... ... 1 அவுன்ஸ்=$2\frac{1}{2}$ ரூபாயெடை.

(ஒரு க்வார்ட் அல்லது) அரையே அரைக்காற் படி தண்ணீரில் தினம் இரண்டு வேளையாகச் சுமார் ஒரு வாரம் வரையில் கொடுத்து, பிறகு 1-ம் நெ. மருந்துபட்டியிற்கண்ட பேதிமருந்தைக் கொடுக்கவேண்டும்.

22.

பெருங்காயம் ... ... $\frac{1}{2}$ அவுன்ஸ்=$1\frac{1}{4}$ ரூபாயெடை.
கந்தகப்பொடி ... ... 1 அவுன்ஸ்=$2\frac{1}{2}$ ரூபாயெடை.

21-ம் நெ. மருந்துபட்டியிற் கொடுக்கச்சொல்லியிருக்கிறபடி கொடுக்கவேண்டும்.

சொறிக்குப் போடும் மருந்து.

23.

கந்தகப்பொடி ... ... 4 அவுன்ஸ்=10 ரூபாயெடை.
கெரொஸின் எண்ணெய் ... 4 அவுன்ஸ்=வீசம் படி.
வேப்பெண்ணெய் ... ... 1 பயின்ட்=காலேவீசம் படி.

---

* ஆழிவிரையெண்ணெய் கிடைக்காவிட்டால் ஆமணக்கெண்ணெய் சேர்க்கலாம்.

...துக்கொண்டு கொஞ்சம் எடுத்துச் சொறியுள்ள ...ளம் இரண்டுவேளை அரக்கித் தேய்க்கவேண்டும்.

24.

| | | |
|---|---|---|
| ...ல (Phenyle) | ... | 1 பங்கு. |
| ...ணணீர் ... | ... | 100 பங்கு. |

இது ஆடுகளுக்கு நல்ல முழுக்கு மருந்தாகும்.

25.

| | | |
|---|---|---|
| புகையிலை ... | ... | 1 பங்கு |
| தண்ணீர் ... | ... | 10 பங்கு. |

புகையிலையைத் தண்ணீரில் போட்டுச் சுமார் அரைமணிநேரம் கொதிக்கவைத்து இறுத்து ஆடுகளுக்கு முழுக்குமருந்தாக உபயோகிக்கலாம்.

புண்ணுக்குப் போடும் மருந்து.

26.

| | | |
|---|---|---|
| கர்ப்பூரம் ... | ... | 1 பங்கு. |
| நல்லெண்ணெய் ... | ... | 4 பங்கு. |

27.

| | | |
|---|---|---|
| வெனிஸ் டர்ப்பென்டைன் | ... | 1 பங்கு. |
| நல்லெண்ணெய் ... | ... | 8 பங்கு. |

எண்ணெயில் டர்ப்பென்டைனை உருகும்படி காய்ச்சி இறுத்துக்கொள்ளவேண்டும்.

28.

| | | |
|---|---|---|
| மயில்துத்தப்பொடி | ... | 1 ட்ராம் = 3 அரைக்கால்ரூபாயெடை. |
| வெந்நீர் ... | ... | 1 பயின்ட் = காலேவீசம் படி. |

கரைத்துக் குளிர்ந்தபின் வேண்டியமட்டில் போடலாம்.

29.

| | | |
|---|---|---|
| சீமைச்சுண்ணாம்புப்பொடி | ... | 4 அவுன்ஸ்=10 ரூபாயெடை. |
| கரிப்பொடி ... | ... | 1 அவுன்ஸ்=2½ ரூபாயெடை. |
| (சீனக்காரப்பொடி அல்லது) படிக்காரப்பொடி. | | ½ அவுன்ஸ்=1¼ ரூபாயெடை. |
| மயில்துத்தப்பொடி | ... | ½ அவுன்ஸ்=1¼ ரூபாயெடை. |

இவைகளைக் கலந்து வைத்துக்கொள்ளவேண்டும். புண்களிலும் முக்கியமாகக் கால்நோய் வாய்நோயில் உண்டாகும் கால்புண்களிலும் தூவிப்போடுவதற்கு இது உதவும்.

…செலுத்தும் குழாய் செய்யும் விதமும்
…நர் செலுத்தும் விதமும்.

…மார் ஒரு அடி நீளமும் சுமார் அரை அங்குலக் குறுக்களவும் உள்ள குழல் மூங்கிலை எடுத்து அதன் முனைகளைக் கூர்மையாயில்லாமல் உருண்டையாயிருக்கும்படி சீவவேண்டும். ஏறக்குறைய (ஒன்றரை சேர் அல்லது) முக்கால் படி ஜலம் கொள்ளத்தக்கதாக, அதாவது ஒன்றரை அடி நீளமும் நாலைந்தங்குல அகலமும் உள்ளதாக, நீளமான தோற்பை ஒன்று செய்யவேண்டும். அந்தத் தோற்பையின் அடியில் ஷை மூங்கிற் குழாயின் ஒரு முனை நுழையத்தக்க துவாரம் செய்யவேண்டும்; தண்ணீர் தோலுக்கும் மூங்கிற் குழலுக்கும் இடையே ஒழுகாமல் அந்தக் குழல்வழியே போகும்படியாகத் தோற்பையின் அடியை மூங்கிற குழாயின் முனையைச் சுற்றி வைத்து நழுவவிடாமல் நன்றாகக் கட்டவேண்டும். அபானவாய் மூலமாக மருந்துநீர் செலுத்துவதற்கு முன்னே ஷை மூங்கிற் குழாயில் நன்றாக எண்ணெய் தடவவேண்டும்; பிறகு அதை அபானவாய்க்குள்ளே செலுத்தி ஒரு கையினால் அதை வெளியே வந்துவிடாமல் பிடித்துக்கொள்ளவேண்டும்; மற்றொரு கையினால் தோற்பையின் வாயைப் பிராணியின் முதுகுமட்டத்துக்குமேல் உயர்த்திப் பிடிக்கவேண்டும்; பிறகு, ஷை மருந்துநீரைத் தோற்பையின் வாய்க்குள் விடும்படி உதவியாளுக்குச் சொல்லவேண்டும்; அப்படி விடும் நீர் சிறிது சிறிதாகக் குடலுக்குள்ளே செல்லும்.

அபானவாய்மூலமாகச் செலுத்துவதற்காக உபயோகிக்கப்படுகிற நீர் சாதாரணமாய்ச் சூடாகவேயிருக்கவேண்டும்; ஆனால், கை பொறுக்கக்கூடாதபடி அதிக சூடாயிருக்கக்கூடாது.

அந்த நீரில் சவர்க்காரத்தைத் தேய்த்துக் கலக்கி அதைச் சவர்க்காரநீராக்கவேண்டும்.

### மருந்து பானம் கொடுக்கும் விதம்.

உதவியாள் வியாதிகண்ட மாட்டின் இடதுபக்கத்தில் நின்று மாட்டின் தலையை அதன் முதுகுமட்டத்துக்குச் சமமாக உயர்த்திப் பிடிக்கவேண்டும்; அப்போது, மருந்துபானம் கொடுக்கப்போகிறவர் வலதுபக்கத்தில் நின்றுகொண்டு தம்முடைய இடதுகையின் ஆள்காட்டி விரலையும் நடுவிரலையும் மாட்டின் வலதுபக்கத்துக் கடைவாயில் செலுத்தி உதடுகளையும் கன்னத்தையும் மெதுவாக வெளியே இழுத்து வாயைப் * புனல்போலாகும்படி திறக்கவேண்டும்

* புட்டிகளில் எண்ணெய்விடுகிற புனல். (Funnel.)

க்கிரதையாயிருக்கவேண்டும்; பிராணி இரும்ம
ணித்தாலும், அது தலையைத் தாழ்த்தி கஷ்டப்படாமல் இரு
யதாயிருக்கும்படிக்கும் மருந்துபானத்தில் எவ்வளவாவது அதன்
குரல்வளைக்குள்ளே பிரவேசியாமலிருக்கும்படிக்கும், உதவியாள் அதன் தலையை உடனே கீழே விட்டுவிடவேண்டும். பிராணி இரும விரும்பும் குறி எதாயினும் தோன்றினவுடனே உதவியாள் அதன் தலையைக் கீழே விட்டுவிடாதபட்சத்திலே, மருந்துபானத்தில் கொஞ்சம் குரல்வளைக்குள் சென்று அதனால் (பிராணிக்கு) மரணம் உண்டாகலாம்.

சாதாரண இங்க்லிஷ் சாராயபுட்டிரூபமாக் லோகத்தினால் செய்த புட்டியிலே மருந்துபானம் கொடுப்பது உத்தமமானது; ஆயினும், மூங்கிற்குழாய் இந்த வேலைக்கு மிகவும் நன்றாக உதவுகிறது. கண்ணாடியினால் செய்த சாராயபுட்டியையே உபயோகிக்கலாம்; ஆனால், அப்படி உபயோகிக்கும்போது அதைப் பிராணி பல்லினால் கடித்து உடைத்துவிடாதபடி ஜாக்கிரதையாயிருப்பது அவசியம்.

101489